பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 29 செவ்வாய்க்கிழமை (13.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 229


13 JUL 2010

## நாடாளுமன்றுக்குப் பொறுப்புக் கூறும்

# நிறைவேற்று அதிகாரப் பிரதமர் பதவி

# மஹிந்த - ரணில் பேச்சில் இணக்கம்

## விகிதாசார, தொகுதி வாரி இரண்டும் கலந்த தேர்தல் முறை





கொழும்பு, ஜூலை 13

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கிவிட்டு, நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறும் வகையிலான நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் பதவியை ஏற்படுத்துதவற்கு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய தேசி யக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.**

அரசமைப்புத் திருத்தம் குறித்து அரச தரப்புக்கும் எதிர் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் அலரி மாளிகையில் நேற்று மாலை பேச்சு இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போதே மேற்கண்டவாறு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இச் சந்திப்புக் குறித்து ரணில் விக்கிரமசிங்க ஊடக வியலாளருக்கு தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் முறை தொடர்பாக இணக்கம் காண்பதற் குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதைய விகிதாசார பிரதிநிதித்துவ முறையையும் தொகுதி வாரிப் பிரதிநிதித்துவ முறையையும் கலந்த புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கு முயற்சி எடுத்துள்ளோம்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்த மக்கள் மத்தியில் ஜனாதிபதி நாளை உரையாற்றுவார்

### அமைச்சர்கள் அங்கு போகத் திரள்கிறார்கள்

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முதன் முறையாக கிளிநொச்சியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் மத்தியில் நாளை விசேட உரையாற்றுவார்.

அமைச்சரவைக் கூட்டம் நாளை 14 ஆம் திகதி புதன்கிழமை ஜனாதிபதி தலைமையில் கிளிநொச்சியில் நடைபெறுவது தெரிந்ததே. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என ஏற்பாடுகளுக்குப் பொறுப்பான வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் 44 அமைச்சர்களும் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக கிளிநொச்சிக்கு இன்றும் நாளையும் புறப்பட்டுச் செல்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அமைச்சுகளின் செயலாளர்களும் உயரதிகாரிகளும் இவர்களுடன் செல்லவுள்ளனர். இவர்களுக்கான தங்குமிட வசதிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## ஹரீஸ் எம்.பியின் கருத்தினால் தமிழ்க் கூட்டமைப்பு அதிருப்தி

### கல்முனையில் அவர் கலந்துகொண்ட வைபவங்கள் பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஜூலை 13

வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பான சர்ச்சையை அடுத்து, கல்முனை மாநகர சபையின் எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், கல்முனை மாநகர சபை ஏற்பாடு செய்திருந்த இரு வைபவங்களைப் பகிஷ்கரித்தனர்.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் மேயரும் அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய எம்.பியுமான எச்.எம்.என்.ஹரீஸ் சமீபத்தில் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில்,வடக்கு-கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து இலங்கையை இந்தியா வலியுறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமீபத்தில் கோரிக்கை விடுத்திருந்தது. வடக்கு, கிழக்கு இணைப்பை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க் கின்றது எனத் தெரிவித்திருந்தார்.

ஹரீஸ் எம்.பியின் இந்தக் கூற்றை எதிர்த்தே கல்முனை மாநகர சபையின் எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(24 ஆம் பக்கம் பார்க்க)

### யுத்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக மறைக்க எதுவும் இல்லை

## ஒரு கையில் ஆயுதமும் மறுகையில் மனித உரிமை சாசனமும் கொண்டே எமது படையினர் வன்னியில் போரிட்டனர்

### ஜனாதிபதி மஹிந்தா பேட்டி

கொழும்பு, ஜூலை 13

சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளைத் தற்போது முன்வைக்கின்ற நிலையில் யுத்த நடவடிக்கை தொடர்பாக எம்மிடம் மறைப்பதற்கு எதுவுமே இல்லை. என்று ஜனாதிபதி கூறினார்.

பிலிப்பைன்ஸ் நாட்டு ஊடகம் ஒன்றுக்கு ஜனாதிபதி வழங்கிய பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

30 வருடங்களாக இலங்கையில் நிலவி வந்த கொடூர யுத்தத்தை நாம் வெறும் மூன்று வருடங்களில் முடிவுக்குக் கொண்டு வந்தோம். பயங்கரவாதத்தைத் தோற்கடித்த ஒரு நாடாக இலங்கையை உலக நாடுகள் பார்ப்பதை நான் விரும்புகிறேன்.

யுத்தப் பகுதிகளில் சமாதானம் காணப்படாததால் அப்பகுதிகளில் அபிவிருத்திகள் தடைப்பட்டிருந்தன. மக்கள் அபிவிருத்திக்காக ஏங்கித் தவித்தனர். அப்பகுதி மக்கள் புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகியிருந்தமையால் அரச படையினர் அவர்களின் பகுதிகளில் நிலைகொண்டிருக்க வேண்டுமென அம் மக்கள் விரும்பினர். மக்கள் கடும் துன்பத்தை அனுபவித் துக்கொண்டிருந்தனர். அங்கு அபிவிருத்தியும் சமாதானமும் அறவே இருக்க வில்லை. அந்தக் காலப்பகுதியில் படையினரின் மனவலிமை குன்றியிருந்தது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## சீமான் கைது!

சென்னை, ஜூலை 13

வன்முறை, பிரிவினை ஆகியவற்றைத் தூண்டும் வகையில் பேசினார் எனத் தொடரப்பட்ட வழக்கில் 'நாம் தமிழர்' இயக்கத் தலைவர் சீமான் நேற்று கைது செய்யப்பட்டார்.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதலைக் கண்டித்து நடத்திய போராட்டத்தின்போது சீமான் பேசிய பேச்சைத் தொடர்ந்து அவர் மீது பிரி

(24 ஆம் பக்கம் பார்க்க)

### வேலணையில் கடமை நேரத்தில் மரணமான

## குடும்பநல மாது தர்சிகாவின் இறுதி ஊர்வலத்தில் திரண்டவர்கள் கைதடிச் சந்தியில் வீதி மறியற்போர்



கைதடி, ஜூலை 13

குடாநாட்டையே அதிர்ச்சியில் ஆழ்த் தியிருக்கும் குடும்பநல மாது செல்வி தர்சிகா சரவணையின் பூதவுடல் நேற்று அவரது சொந்த இடமான கைதடியில் அடக்கம் செய்யப்பட்டது. அவரின் இறுதி ஊர்வலத்திலும் ஆயிரக்கணக்கானோர் கண்ணீர் மல்க கலந்துகொண்டனர்.

இறுதி ஊர்வலம் கைதடிச் சந்தியை அடைந்த வேளை, அதில் திரண்டு வந்திருந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சக பணியாளர்கள் மற்றும் ஊர்மக்கள் பிர தான வீதியான ஏ-9 வீதியை வழிமறித்து ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தர்சிகாவின் மரணத்துக்கு நீதி கேட்டு அவர்கள் உரத்த குரலில் ஒன்றிணைந்து கோஷம் இட்டனர். சுமார் ஒரு மணித் தியாலயம் நடந்த இந்த வீதி மறிப்புப் போராட்டத்தால் கைதடிச் சந்தியின் இரு முனைகளிலும் வாகனங்கள் நீண்ட வரிசை யில் காத்திருக்க நேரிட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்

(24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை நிலைநிறுத்தத் தவறியமையே ஐ.நா. நிபுணர் குழு நியமனத்துக்குக் காரணம்

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 13

''நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டத் தவறியமையே ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்குழு நியமனத்துக்கு பிரதான காரணமாகும்''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் காரியாலயத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவை கலைக்கக் கோரி அமைச்சர் விமல் வீரவன்ச தான் நடத்திய நாடகத்தை எந்தவித பதிலும் கிடைக்காத நிலையில் எதுவித தடைகளும், தடங்கலும் இல்லாமல் இனிதே நிறைவு செய்துள்ளார். இந்த நாடகத்தின் தயாரிப்பாளரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிகவும் அருமையாக இந்த நாடகத்தை முடித்து வைத்துள்ளார்.

இந்த நாட்டிலுள்ள மக்கள் மற்றும் சிறியவர்கள் என சகலரும் எதிர்பார்த்ததைப் போன்றே எதுவித வித்தியாசமும் இல்லாமல் இந்த உண்ணாவிரத நாடகத்தின் முடிவு அமைந்துள்ளது. இதன் மூலம் இந்த நாட்டிற்கு சர்வதேச மட்டத்தில் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. சர்வதேச மட்டத்திலிருந்து இவ்வாறான அழுத்தங்கள் ஏற்படும்போது இது போன்ற வழிமுறைகளைக் கையாளாமல் இராஜதந்திர ரீதியில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முற்படும்போது பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவு வழங்கும்.

ஐக்கிய நாடுகள் சபையினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவை நாமும் எதிர்க்கின்றோம். நாமும் அதனை விரும்பவில்லை. இலங்கை 1978 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்ததன் பின்னர் இந்த நாட்டிலே ஜனநாயகம் நிலவியது. ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நாணய நிதியம் மற்றும் பல சர்வதேச அமைப்புக்களுடன் சேர்ந்து பணியாற்ற எமக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இப்படியானதொரு நாட்டிலேயே சர்வதேசத்தின் தலையீடு தற்போது அதிகரித்துள்ளது. இதற்கு காரணம் யுத்தத்தில் வெற்றிபெற பாடுபட்ட படையினரோ, பல தியாகங்களைச் செய்த மக்களோ, ஏன் எதிர்க்கட்சிகளோ அல்ல. அரசமைப்புக்கு அமைய இந்த நாட்டிலே ஜனநாயகத்தை நிலைநிறுத்தத் தவறிய அரசே இதற்கு முழுக் காரணம் - என்றார்.

(அ-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா அன்னபூரணம்



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அன்னபூரணம் நேற்று (12.07.2010) திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், தவராசா (பல.நோ. கூ.சங்கம்-சுன்னாகம்), கமலாம்பிகை (வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம்), திருச்செல்வம் (லங்கா சிமெந்து நிறுவனம்) காலஞ்சென்ற சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகலக்சுமி, காலஞ்சென்ற சுகரட்ணம் மற்றும் ஜெகநாதன், கௌரி ஆகியோரின் மாமியாரும், சுரேகா (கால்நடை வைத்தியர் அலுவலகம், சண்டிலிப்பாய்), நிரேகா, புஸ்கரா, கானசதுர்னன், ரேமிகா, இந்துஷன், பிரசன்னா, சதுர்கஸ்தன், ஜீவனா, தனகஸ்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.07.2010) செவ்வாய்க்கிழமை பி.பகல் 12.30 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''கமல கிரி'' சங்குவேலி,*
*மானிப்பாய்*
T.P. - 0213007488

தகவல்:
குடும்பத்தினர்.

## சாரதி தேவை

5 வருட அனுபவமுள்ள 40 வயதுக்கு மேற்பட்ட சாரதி தேவை.

இன்று (13.07.2010) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நேரில் வரவும்.

தொடர்பு :
காங்கேயன் பேக் ஹவுஸ்,
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.

## விற்பனைக்கு

அச்சகப் பாவனையில் உள்ள கட்டர் (England) கவுண்டர் மேசை, ரெலிபோன் வூத், 5kw ஜெனறேற்றர் ஆகியவை விற் பனைக்குண்டு.

தொடர்பு :
T.P.: 0779000388, 0213213517, 0213219998

## மரண அறிவித்தல்



### திருமதி பொன்னுத்துரை சிவஞானம்

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பொன்னுத்துரை சிவஞானம் நேற்று (12.07.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், சின்னத்தம்பி - செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவபாக்கிய சுசீலா, தயாபதி, மகேந்திரராசா, ஜெயசீலன் (திரு), தயாபரன் (டென்மார்க்), நந்தி (லண்டன்), சிவாஸ்கரன் (லண்டன்), நிமால் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற வல்லிபுரம், சிவபாதசுந்தரம், சிவலோகநாயகி, புனிதவதி, இராசபூபதி, கனகசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசன், ஈச்சங்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உசன், மிருசுவில்.*
*தொ.பே: 0776069640*

தகவல்:
எஸ்.சு[illegible]

### விபத்தில் மூவர் காயம்

நேற்று இடம்பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் காயமடைந்த மூவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர்.

கச்சாய் பகுதியில் வீதியின் குறுக்கே நின்ற மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.வசந்தாதேவி (வயது 40) அவரது மகனான எஸ்.உதயதாஸ் (வயது 20) ஆகியோரும் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில் கோபிநாத் (வயது 32) என்பவருமே காயமடைந்தவர்கள் ஆவர். (ஒ-207)

### சிப்பாய் மரணம்

சுன்னாகம் படைமுகாம் இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார். பதுளையைச் சேர்ந்த ஆர்.எம்.எஸ்.ஜெயதிஸா (வயது 24) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது சடலம் தெல்லிப்பழைப் பொலிஸாரால் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஒ-[illegible]78)

## மரண அறிவித்தல்கள்

### கார்த்தி பூபாலசிங்கம்



சுன்னாகம் கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் அன்டர்சன் தொடர்மாடி, நாரஹேன்பிட்டி கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்தி பூபாலசிங்கம் (ஓய்வுபெற்ற ஒப்பு நோக்காளர் அரச பதிப்பகம், கொழும்பு) 11.07.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்தி- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும்,Dr.கவிதாம்பிகா (Dental institute Colombo) கவிதரன் (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

குலநாயகம் (National Hospital Colombo), வினிதா (Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜேந்தினி (Ramanathan Hindu College, Colombo), சாத்தியன் (Hindu College, Colombo), துளக்சிகா (Canada) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற மனோன்மணி, யோசேப் ஆகியோரதும் பூமணியினது அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், இரத்தினம் தம்பிராசா, கந்தையா, சரஸ்வதி பசுபதி, அக்கினேஸ் ஆகியோரதும் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் 12.07.2010 காலை 9.30 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 15.07.2010 வியாழக்கிழமை மாலை 3.30 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் நடைபெறும் இறுதிக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா சிவபாக்கியம்



குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவபாக்கியம் நேற்று (12.07.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் கனகசபாபதியின் அன்புத் தாயாரும் ஸ்ரீரஞ்சினியின் மாமியாரும் விசியம், விஜயலட்சுமி, ஸ்ரீதரன், பத்மினி, சிவகாமசுந்தரி, கணேசமூர்த்தி, யோகேஸ்வரி ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற நித்தியானந்தன், பாக்கியநாதன், தவயோகராசா ஆகியோரின் சிறியதாயாரும் விஜித்தா, பிரதீப், தர்சிகன், சுரேன், சுபாசினி, ரவிச்சந்திரன், ரவிசங்கர், சுகந்தி, வாசுகி, காலஞ்சென்ற லகுவரன், ரஞ்சினிதேவி, சத்தியதர்சினி, கேமலதா, சிவரூபன், அனுஷியா, லவேந்திரன், வெங்கட்குமரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோண்டாவில் கட்டைஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

தகவல் :
குடும்பத்தினர்.

### திருமதி தனபாக்கியம் சுப்பிரமணியம்



மலேஷியாவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கு இந்துக் கல்லூரி ஒழுங்கை ''தபோ வாசா'' இல்லத்தை வசிப்பிடமாகவும் தற்பொழுது தெஹிவளையில் வசித்து வந்தவருமாகிய தனபாக்கியம்சுப்பிரமணியம் நேற்று (12.07.2010) திங்கட்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அழகரட்ணம் - சிவக்கொழுந்து தம்பதியினரின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (திருகோணமலை (Dockyard chief clerk) அவர்களின் மனைவியும் காலஞ்சென்ற Dr.தனபாலசிங்கத்தின் அருமைச் சகோதரியும் பத்மலோஜினி, பத்மசீலன் Retired RDO Engineer), காலஞ்சென்ற சத்தியசீலன், தயாளசீலன் (London), குணசீலன், பிரேமசீலன் (Italy), தபோதினி ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்றவர்களான தெட்சணாமூர்த்தி, உருத்திராதேவி, ரதி, திருமகள், சகுந்தலா, சிவரஞ்சினி, ஜெயப்பிரகாசம் ஆகியோரின் அருமை மாமியாரும், ஹம்சவாஹினி, வித்தியவாஹினி, சஞ்சீவன், சிவதர்ஷினி, சுதர்ஷன், சஜீவன், சஜீதரன், சுஜீந்திரன், சுகிலன், ரஜீவன், கௌசிகன், ஹஜந்தி ஆகியோரின் பேர்த்தியும் அந்தியா, சுருதி, ரிமோன், ஷர்னி, சிவருக்ஷன், ஷர்ணிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இன்று (13.07.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (14.07.2010) புதன்கிழமை காலை 8 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, 10 மணியளவில் தகனத்திற்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.:0773050464, 2729587

தகவல்:
தபோதினி *(மகள்)*
ஜெயப்பிரகாசம் *(மருமகன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# முதலாவது காலடி எடுத்துவைக்க அமைச்சர் டியூ குணசேகரா தயாரா?

எமது நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்போது, அயல் நாடுகளின் அனுபவங்களையும் பெற வேண்டும். குறிப்பாக இந்தியாவினதும் மற்றும் சர்வதேச நாடுகளின் உணர்வுகளுக்கும் மதிப்பளிப்பவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் காணப்படும் தீர்வே ஆக்கபூர்வமானதாக அமையும். எமது பிரச்சினைக்கு அறிவுபூர்வமாகச் செயற்படுவது அவசியம்.

குடாநாட்டில் சில குறிப்பிட்ட நிகழ்வுகளில் பங்கு பற்றிய அமைச்சர் டியூ குணசேகரா, தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையின் போது பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அமைச்சர் குணசேகராவே. அவர் இரண்டு நாள் விஜயமாக, தமது பிரதி அமைச்சர் காமினி விஜயமுனி சொய்ஸாவுடன் யாழ்ப்பாணம் வந்தபோது கம்யூனிஸ்ட் கட்சியின் வருடாந்த மாநாட்டிலும் உரையாற்றினார். 30 வருடங்களின் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது இதுதான் முதல் தடவை.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசமைப்பின் 13 ஆவது சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டபோது, அதற்கான பிரேரணையை, எதிர்க் கட்சித் தரப்பில் இருந்து தாம் எதிர்த்து வாக்களித்ததையும் அமைச்சர் ஞாபகப்படுத்தினார்.

எமது நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர், இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காண கடந்த கால அரசியல் தலைவர்கள் தவறிவிட்டனர் என்றும் பழைய சங்கதியை அமைச்சர் ஞாபகப்படுத்தினார். அதனால் அப்பாவி மக்கள் சொல்லொணாத் துயரங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவ்வாறிருந்தும் பிரதான அரசியல் கட்சிகளிடையே இன்னமும் ஒருமைப்பாடு இல்லை. அதன் காரணமாக முக்கிய பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாமல் உள்ளது என்றும் அமைச்சர் டியூ குணசேகரா கூறியுள்ளார். அவர் குறிப்பிடும் முக்கிய பிரச்சினைகளில் முதன்மையானது இனப்பிரச்சினை ஆகும்.

கடந்த 60 வருடங்களாக தீர்வுகாணப்படாத இனப்பிரச்சினையே ஏனையவற்றை விட முதன்மைப்படுத்தித் தீர்க்க வேண்டியது. அதனை அமைச்சர் டியூ குணசேகரா அங்கம் வகிக்கும் அரசாங்கம் உள்ளார்த்தமாகப் புரிந்து கொண்டதாகத் தோன்றவில்லை.

இனப்பிரச்சினைக்கு ஆற அமர, பல தரப்புகளுடன் பேசியே தீர்வுகாணவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனைக் கிடப்பில் போட்டுவிட்டிருக்கிறார். இந்தியாவுக்கு விஜயம் செய்து திரும்பி வந்த பின்னர், இனப்பிரச்சினைக்கான தீர்வை திடீர் 'நூடில்ஸ்' தயாரிப்பது போன்று கொண்டு வர முடியாது என்று கருத்துத் தெரிவித்த பின்னர், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து அவர் எதனையும் வெளிப்படுத்தவில்லை.

அவரது அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் கூட்டணி வைத்துள்ள கட்சிகள் இனப்பிரச்சினை முன்னுரிமை கொடுத்துத் தீர்க்கப்படவேண்டியது என்பதனை வலியுறுத்திக் கூறியதாக எந்தத் தகவலும் இல்லை. அரசில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சியின் அமைச்சர் கலாநிதி திஸ்ஸ விதாரண, அனைத்துக் கட்சி மாநாட்டை மீண்டும் கூட்டி இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கூறியதோடு எல்லாம் முடிந்துவிட்டது. அவரும் இப்போது மறந்திருப்பார் என்று நம்பலாம்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது அவ்வளவு இலகுவானதல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே. ஆனால் அதுவே இந்த நாட்டினை இத்தனை தசாப்தங்களாகச் சீரழித்து வைத்திருக்கிறது என்பதனை அரசியல் தலைவர்கள், மிகக் குறிப்பாக ஆட்சியிலுள்ளவர்கள் உணரவேண்டும். அதற்கு முன்னுரிமை வழங்கி, பற்றுறுதியுடன் உழைத்தால் தீர்வு ஒன்றை வகுத்துக்கொள்ளமுடியும்.

இந்த நாட்டில் வாழும் மூவின மக்களையும் பெரும்பான்மை சிறுபான்மை என்று கருதி அவர்களுக்கான அதிகாரங்கள், உரிமைகளை விகிதாசாரத்தில் வழங்க வேண்டும்; பெரும்பான்மையின மக்கள், ஏனைய இரு தரப்புகளையும் விட எண்ணிக்கை அதிகம் என்பதால் அவர்களிடம் மேலாண்மையும், அதீத அதிகார பலமும், சிறப்பு உரிமைகளும் இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருக்கும் வரைக்கும், இனப்பிரச்சினைக்கு சமரசமாக ஒரு தீர்வைக் காண்பது கடினம்.

இத்தகைய ஒரு சூழலில் அயல்நாடுகளின், மிகக் குறிப்பாக இந்தியாவின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதும் அதன் அனுசரணை தேவை என்பதும் யதார்த்தமே.

அந்த வகையில், அமைச்சர் டியூகுணசேகரா சொல்வதுபோல், இந்தியாவின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய தேவை அத்தியாவசியமாகிறது.

அரசாங்கத் தரப்பும், தமிழர் தரப்பும் இந்தியாவின் ஆலோசனையையும் அனுவபவத்தையும் பெறுவதற்கு முனைந்து கொள்ளும் முயற்சிகள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன. ஆனால் அது கால எல்லையின்றி நீளக் கூடாது; தங்குமிடம் போட்டுத் தாமதிக்கக் கூடாது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் டியூ குணசேகரா இதனை அதன் தலைமைப்பீடத்திடம் எடுத்துரைத்து உந்துசக்தியாக விளங்கவேண்டும். அதற்கான மனோ திடமும், பலமும் அவருக்குத் தேவை. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய எல்லோரும் இந் நாட்டின் சகோதரப் பிரஜைகளே என்பதனை நிலைநாட்ட, அதற்குரிய தளம் ஒன்றை அரசின் பக்கம் சார்ந் துள்ள டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார போன்றவர்களால் அமைக்க இயலுமா? இனப்பிரச்சினைத் தீர்வுக்குரிய முதல் நீரோட்டமாக அது சாத்தியமானால் உகந்த தீர்வு என்ற இலக்கை எய்துவதற்கான முதலாவது காலடியாக அது அமையலாம். அது நடக்குமா?

# ஊழியர் மத்தியில் பயத்தை ஏற்படுத்தியுள்ள குடும்ப நல உத்தியோகத்தரின் திடீர் மரணம்

## பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு சுகாதாரப் பணிப்பாளருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

குடும்ப நல உத்தியோகத்தர் செல்வி சரவணை தர்ஷிகா என்பவர் வேலணை வைத்தியசாலையில் கடமையில் இருந்தபோது இறந்துள்ளமையானது ஊழியர் மத்தியில் பய உணர்வை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பெண் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாக உள்ளது.

தற்கொலை அல்ல என உறுதி செய்யப்பட்டுள்ளதாக பத்திரிகை மூலமாக அறியக்கூடியதாகவுள்ள நிலையில், இறப்புக்குரிய காரணத்தைக் கண்டறிந்து, ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய கடமை திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு தெரிவிக்கும் கடிதம் ஒன்றை வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளைத் தலைவர் கணேசன் கம்ஸநாதன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இக்கொலைக்குரிய காரணத்தை கண்டறிவதுடன் பதவி நிலைகளை கருத்திற்கொள்ளாது திணைக்களம் நியாயமான முறையில் செயற்பட்டு சம்பந்தப்பட்டவருக்கு அதி உயர் தண்டனையை வழங்குவதன் மூலமாக எதிர்காலத்தில் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், திணைக்களத்தின் நன்மதிப்பையும் பேண வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

உரிய ஊழியர்களின் குடும்பத்தினர் பாதிக்காத வகையில் கடமையில் ஈடுபட்ட நிலைமைகளை கருத்திற்கொண்டு அரச நடைமுறைகளுக்கமைவாக நட்டஈட்டை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் உடனடியாக வேலணை வைத்தியசாலை ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் படியும் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் ஆளுநர், செயலாளர், சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், செயலாளர் நாயகம், வடக்கு, கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கம், ஆகியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ப)

# இந்தியத் தலைவர்களின் ஆலோசனையின் படி ஜனாதிபதியைக் கூட்டமைப்பு மீண்டும் சந்திக்கும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. தகவல்

கொழும்பு,ஜூலை13

இந்தியத் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்திவிட்டு நாடு திரும்பியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் மேலும் இன்னொரு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்தவிருக்கின்றார்கள்.

இரா.சம்பந்தன் தலைமையில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு திரும்பி வந்துள்ளார்கள்.

இக்குழுவில் ஒருவராகச் சென்றிருந்தவரான பிரேமச்சந்திரன் தகவல் தருகையில் -

வடக்கு - கிழக்கு மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும்படி இந்தியத் தலைவர்கள் ஆலோசனை கூறினார்கள்.

பல்வேறு இந்தியத் தலைவர்களையும் சந்தித்து இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆலோசனைகள் நடத்தினோம். தமிழர்களுக்கான அரசியல் தீர்வொன்று பற்றியும் ஆலோசனை நடத்தினோம். வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது. அப்பகுதிகள் இராணுவ மயமாக்கப்படுவது குறித்து நாம் அச்சம் கொண்டுள்ளோம். இந்தியத் தலைவர்களின் கவனத்துக்கு இந்த விடயங்களைக் கொண்டு சென்றோம் என்று அவர் கூறினார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் பற்றி விவாதிக்கப்பட்டதா என்று கேட்டபோது விரிவாக அலசி ஆராயப்பட்டது என்று தெரிவித்தார். அதனைப் பற்றியும் அதன் குறைபாடுகள் பற்றியும் பேசினோம். ஒற்றை ஆட்சியின் கீழ் அதனை அர்த்த புஷ்டியாக செயற்படுத்துவது கடினமான காரியம் என்பது எமது கருத்தாகும் - என்றார்.

விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்து தற்போதைய வடக்கின் நிலைமை பற்றி விவாதிக்க விருப்பதாக அவர் தெரிவித்தார். ஜனாதிபதியை நிச்சயமாக தாங்கள் சந்திக்கவிருப்பதாக தெரிவித்த பிரேமச்சந்திரன் ஏற்கனவே இந்திய அரசாங்கம் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்படி ஜனாதிபதி ராஜபக்ஷவைக் கேட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (ப)

# யுத்தம் முடிவுற்றபோதும் யாழ்.ஆஸ்பத்திரியில் வசதிகள் இதுவரை மேம்படுத்தப்படவில்லை

## ஷிராந்தி ராஜபக்ஷவிடம் பணிப்பாளர் விளக்கினார்

யாழ்ப்பாணம்,ஜூலை13

முப்பது வருட கால யுத்தம் நிறைவடைந்துள்ள தற்போதைய நிலையில் யாழ்.குடாநாட்டுக்கு வெளியிடங்களில் இருந்து வந்து மீளக்குடியமர்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆயினும் யாழ்.போதனா வைத்தியசாலை வசதிகள் இதுவரை மேம்படுத்தப்படவில்லை. தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடனேயே நாம் சேவையாற்றி வருகின்றோம்.

இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவின் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் யாழ்.போதனாவைத்தியசாலைக்கு வருகை தந்திருந்தனர்.

இந்தக் குழுவினருக்கும் வைத்தியசாலை நிர்வாகத்துக்குமான கலந்துரையாடல் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றது. இதில் தலைமை உரை நிகழ்த்தும்போதே பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 30 வருடகாலமாக மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கி வருகிறோம். திருப்தியான சேவையை வழங்குவதற்கு எமது வைத்தியசாலை நிர்வாகம், வைத்தியர்களின் ஒத்துழைப்பே காரணமாகும்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் வெளிமாவட்டங்களிலிருந்தும் வெளிநாடுகளிலும் தங்கியிருந்த மக்கள் மீளவும் யாழ்ப்பாணத்துக்கு குடியேறத் தொடங்கிவிட்டனர். இந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் வளங்கள் அதிகரிக்கப்படவேண்டும். வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

ஜனாதிபதியின் பாரியார் இதற்கு நடவடிக்கை எடுத்து வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு உதவவேண்டும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் எமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கவேண்டும். மீளவும் யாழ்ப்பாணம் வரும்போது ஜனாதிபதியையும் அழைத்து வாருங்கள் - என்றார். (50-14)

| நாளை | |
|---|---|
| ஆனி 30 | 14.07.2010 |
| | புதன்கிழமை |
| திதி: | : திருதியை |
| | மாலை 06.56 வரை |
| நட்சத்திரம் | : ஆயிலியம் |
| | பி.ப. 12.43 வரை |
| சுபநேரம் | :04.30-06.00 வரை |
| ராகுகாலம் | : 12.00-01.39 வரை |

# நல்லினப் பசுக்களை வளர்க்க, பால் சந்தைப்படுத்தவும் உதவித் திட்டங்களை வழங்க நடவடிக்கை எடுங்கள்

## கால்நடை பிரதியமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்.மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நல்லினப் பசுக்களை வளர்ப்பதற்கும், பால் சந்தைப்படுத்துவதற்கான உதவித் திட்டங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கால்நடை அபிவிருத்தி பிரதியமைச்சர் எச்.ஆர்.மித்திரபால விடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துக்கு நேற்று பிரதியமைச்சர் விஜயம் செய்தபோதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர்.திருமதி வ.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்ற பிரதியமைச்சருடனான கலந்துரையாடலின்போது பிரதேச மட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது வட பகுதியின் கால்நடை அபிவிருத்தி செயற்பாடுகளின் தற்போதைய நிலைவரங்கள், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள், கால்நடை உற்பத்தியாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

பிரதியமைச்சர் இதில் உரை நிகழ்த்துகையில் கால்நடை வளர்ப்பில் அவுஸ்திரேலியா நாடு கண்ட அபிவிருத்தி போல யாழ்.மாவட்டமும் அந்தந்தத் துறையில் விருத்தி காணவேண்டும். அதன் மூலம் உள்ளூர் மக்கள் பயனடைய வேண்டும். இங்குள்ள பிரதிநிதிகள் கூறிய குறைநிறைகள் தொடர்பாக கால்நடை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கு அறிக்கை சமர்ப்பிப்பேன். அதன் மூலம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும் - என்றார்.

இதன்போது அமைச்சின் இணைப்புச் செயலாளர் பி.எம்.ஹேமச்சந்திரா, வடமாகாணப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சிவநாதன், டாக்டர் குமார் டி சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர். (50-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்க் காணிக்கை



எமது பாடசாலை ஆசிரியர்
**திருமதி யோகேஸ்வரி பாலச்சந்திரனின்**
அன்புத் தந்தையார்
**வல்லிபுரம் வேலுப்பிள்ளை**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கை ஆக்குவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/நாவற்குழி ம.வி. (500529)


## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில் கடமையாற்றும் சிரேஷ்ட கிராம அலுவலர் திரு.க.சகாதேவன் (ஜே/60) அவர்களது பாசமிகு தாயாரும் கிராம அலுவலர் இ.சிறிஸ்கந்தராசா (ஜே/58) அவர்களது மாமியாருமான
**திருமதி கந்தையா இரஞ்சிதம்மா**
அவர்கள் 12.07.2010 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உதவி அரசாங்க அதிபரும், உத்தியோகத்தர்களும்.
ஊழியர் நலன்புரி சங்கம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை. (100528)

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி யோகானந்தி சுகிர்தராஜ்**
ஆசிரியை அவர்களின் அன்பு மாமனார்
**திரு செல்லையா இராசலிங்கம்**
அவர்கள் 10.07.2010 அன்று காலமானதை யிட்டு துயறுற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அஞ்சலியை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்.
பாடசாலைச் சமூகம். (100528)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி இராமநாதன் (பாப்பா)

(முன்னாள் கொழும்பு Joyce Gunasegara Montessori Teacher)



உடுவில் சித்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி இராமநாதன் 10.07.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தெல்லிப்பழை மகாதனையைச் சேர்ந்த அப்பர்சுவாமி இராமநாதன் (சுவாமிராம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (முன்னாள் உடுவில் கிராமசபைத் தலைவர்) இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அப்பர்சுவாமி - சின்னத்தங்கம் தம்பதியினரின் மருமகளும் நரசிம்மன் (கனடா), உமா (கனடா), சுரேஸ் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆஷா (கனடா), சசிதரன் (கனடா), யாழினி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், நதீஷா, நடாசா, திவ்வியா, சுஜீவன், நவநீதன், திசாந்தினி, கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மகேஸ்வரி இரத்தினசபாபதி புவனேஸ்வரி ஆறுமுகம், காலஞ்சென்ற ஜெகநாதன் (இலங்கை வங்கி) மற்றும் இராமநாதன் (லண்டன்), யோகநாதன், இரத்தினேஸ்வரி பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜலெட்சுமி பாலசுப்பிரமணியம், அண்ணாமலை, காலஞ்சென்ற அம்பிகாதேவி ஜெகநாதன் மற்றும் கனகாம்பிகை சேதுராசா, கோபாலகிருஷ்ணன் (இளைப்பாறிய முகாமையாளர் - மக்கள் வங்கி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2010) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பாபாஜி இல்லம்",
267, காங்கேசன்துறை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல் :
அப்பர்சுவாமி இராமநாதன் (கணவர்)
சுவாமிராம் (100533)

### சதாசிவம் சிவசுப்பிரமணியம்

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை (STRUER) வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவசுப்பிரமணியம் நேற்று (12.07.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகனும், சகுந்தலாதேவியின் (டென்மார்க்) அன்புக் கணவரும், நவநீதன் (டென்மார்க்), கணநீதன் (டென்மார்க்), உசா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியம் (டென்மார்க்), அமிர்தநாயகி, லோகநாதன் (சுவிஸ்), ஸ்ரீபத்மநாதன் (டென்மார்க்), லோகநாயகி, தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி. தொ.பே: 0774960152 (100535)

தகவல்:
சகோதரர்கள்.

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களின் வேதனம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாக கடமையாற்றி தற்காலிகமாக யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் ஜூலை மாத வேதனப் பட்டியல் யாழ்.கல்வி வலய நிதிக் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஆசிரியர்கள் யாழ்.கல்வி வலயத்தில் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் வேதனப் பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (50)

## முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா

மானிப்பாய்,ஜூலை13

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் பட்டின உப அலுவலகத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா மானிப்பாய் பட்டின பொறுப்பதிகாரி மா.ஜெகராஜா தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சபையின் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம், சிறப்பு விருந்தினராக சபையின் செயலாளர் திருமதி புஸ்பமலர் சிவலிங்கம், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச சபையின் முன்பள்ளி பிள்ளைப் பருவ உத்தியோகத்தர் செல்வி எஸ். அனித்தா ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-302)

## கிளிநொச்சியில் இன்று நடமாடும்சேவை

கிளிநொச்சி,ஜூலை13

சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தலைமையில் நடமாடும் சேவையொன்றும் கலாசாரஅமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி தலைமையில் கருத்தரங்கு ஒன்றும் இன்று கிளிநொச்சியில் நடைபெறுகின்றன.

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் சமூக சேவைகள் திணைக்களத்தின் நடமாடும் சேவையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல நலன்புரித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

சமூக சேவைகள் அமைச்சினால் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த நடமாடும் சேவை, தவிர்க்க முடியாத காரணத்தால் இடம் மாற்றப்பட்டு, கரைச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இன்றைய தினமே குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ஒ)

## மழை வரப்போகிறது; மதகை மறந்துவிடாதீர்!

யாழ்ப்பாணம்,ஜூலை13

மறவன்புலோ மக்களால் சாவகச்சேரிக்கு செல்லும் கலையாபரணக்கோட்டை வீதியில் உள்ள மதகு உடைந்துள்ளதால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மதகின் இரு பக்கங்களிலும் உடைவு ஏற்பட்டுள்ளதால் சைக்கிளைத் தவிர வேறு வாகனங்கள் எவையும் மதகு ஊடாக செல்ல முடியாதுள்ளது. தற்போது அருகில் உள்ள வயல்கள் ஊடாகவே வாகனங்கள் பயணிப்பதாகவும் மழை காலங்களில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழை காலம் ஆரம்பிக்க முன்னர் மதகைப் புனரமைத்துத் தாருங்கள் என்று உரிய அதிகாரிகளை மக்கள் கோருகின்றனர். (ஒ-207)


## லிஸ்ரர் எஞ்சின் விற்பனைக்கு

தாவடி தெற்கு, கொக்குவிலில் அரிசி ஆலையில் சிறிது காலம் பாவித்த 42 HP 4 சிலின்ரர் லிஸ்ரர் எஞ்சின் மற்றும் ஒஸ்ரின் கேம்பிறிட்ஜ் கார் (பழையது) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777102200

## வேலையாள் தேவை

ஒவ்செற் மெசின் மைண்டர் Offset Machine Minder புத்தகக் கட்டுனர் Book Binder ஆகியோர் தேவை. அனுபவம் உள்ளவர்கள், பயிற்சி பெற விரும்புபவர்கள், ஆண், பெண் இருபாலாரும் [illegible]
தொடர்பு: பொதிகை கொம்பியூட்டர் கிராபிக்ஸ்
[illegible]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஐயாத்துரை விஜயலட்சுமி



அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை விஜயலட்சுமி நேற்று (12.07.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகேசுரன் - இராசம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஐயாத்துரை (ஓய்வுபெற்ற சிறாப்பர் - கச்சேரி, மன்னார், கோப்பாய், சாவகச்சேரி பிரதேச செயலகம்) அவர்களின் மனைவியும் ராகவன் (பொறியியலாளர் U.S.A), DR.ரஜிதா (ஆயுர்வேத வைத்தியசாலை - நானாட்டான்), ரஜீவன் (3ஆம் வருடம் பௌதிக விஞ்ஞானம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயரூபி (பொறியியலாளர் U.S.A. ), D R.கனகசுந்தரம் (ஆயுர்வேத வைத்தியசாலை, முசலிப் பிரதேச சபை) ஆகியோரின் மாமியாரும் வரலட்சுமி - குலசிங்கம், தனலட்சுமி - பரமேஸ்வரன், சிவதாசன் (கனடா), செல்வலட்சுமி - கிருஷ்ணராஜா (ரெலிகொம், வவுனியா), வசந்தலட்சுமி - மகேசன் (கனடா), லோகேசன் (கனடா), ஆனந்தலட்சுமி - இராசலிங்கம் (கனடா) ஆகியோரது சகோதரியும் தெய்வேந்திரராணி - துரைச்சாமி (ஓய்வுபெற்ற உப அதிபர், கொடிகாமம் அ.த.க.பாடசாலை), ராணிமலர் - தியாகராசா, செல்வராணி - ஜெகநாதன் (உப அதிபர், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), விஜயரட்ணம் (லெபனான்), ஜெயரட்ணம் (ஜேர்மனி), சந்திரகலா - சில்வெஸ்ரார் (ஆசிரியர், சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் - யாழ்ப்பாணம்) ஆகியோரது மைத்துனியும், பிரஷ்சிகா, கௌசால், வர்ஜிதா, தரணியா, மாதங்கி ஆகியோரது பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2010) செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொடிகாமம் வேவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம். (100531)

தகவல்:
DR.சோ.கனகசுந்தரம்
(மருமகன்)

### திருமதி அப்புத்துரை பரிமளம்



கோப்பாய் வடக்கைச் சேர்ந்த அப்புத்துரை பரிமளம் நேற்று (12.07.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கதிரவேலு அப்புத்துரையின் அன்பு மனைவியும் கலைவாணி (அமரர்), மதியழகன் (லண்டன்), கலைச்செல்வி, கலையரசி (கனடா), கலைமதி (சுவிஸ்), கலைமகள் ஆகியோரின் அன்புத் தாயாரும், கேதீஸ்வரன், சகிலா (லண்டன்), தவராசா, இரவீந்திரன் (கனடா), தவக்குமார் (சுவிஸ்), பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நிஷாந்தினி, கிரியாழினி, சகானா, சோபிதா, தக்ஷனா, லக்ஷன், கர்சினி, யானுஷா, வேணுசன், விதுஷா, வேதினி, அபினன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
T.P.:
மதியழகன் - 0044 1908 227788
கலையரசி - 0014 1628 97579
கலைமதி - 0041 3261 80221
0777110335, 0773145670

தகவல்:
கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள். (100532)

### திருமதி அருளப்பு செல்லம்மா



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் நுவரெலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளப்பு செல்லம்மா 12.07.2010 திங்கட்கிழமை நுவரெலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்புவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரி - மாரியம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான அந்தோனி - ஆனாசி தம்பதியரின் மருமகளும் கந்தையா (ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்), இராசமணி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மேரி திரேசா, மேரி றோசலின் மற்றும் புஸ்பம் (வசந்தி) ஆகியோரின் மைத்துனியும் சந்திரபாபு (விவசாய ஆராய்ச்சியாளர், நுவரெலியா), இராஜேந்திரபாபு, கசில்டா றஞ்சினி (கஸ்தூரி), இரவீந்திரபாபு, சுரேந்திரபாபு ஆகியோரின் அன்புத் தாயும் சிவறதி (ஆசிரியை - நுவரெலியா), எலிசபெத், தனபாலசிங்கம், ஜிவனா, அருட்தந்தை க.அருள்நேசன், ஆகியோரின் அன்பு மாமியும் எமிலின், அருளின், அன்ரலின், டிலானி, பஸ்ரி, பிறிசற், செற்றிக், ஆரூன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (14.07.2010) புதன்கிழமை நுவரெலியா சென்.சேவியர் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விவசாய ஆராய்ச்சியாளர்,
சீத்தாலிய,
நுவரெலியா. (சி-569222)

தகவல்:
அ.சந்திரபாபு
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மக்களுக்கு அதி உச்ச சேவையை கொமர்ஷல் வங்கி தொடர்ந்து வழங்கும்

## பிரதம நிறைவேற்று அதிகாரி ரவி டயஸ்



திருநெல்வேலி, ஜூலை 13

இலங்கையின் சிறந்த வங்கியாகத் தெரிவு செய்யப்பட்ட கொமர்ஷல் வங்கி யாழ்ப்பாண மக்களுக்கு அதியுச்ச வங்கிச் சேவை யைத் தொடர்ந்து வழங்கும்-இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வர்த்தக வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரவி டயஸ்.

நேற்று திருநெல்வேலியில் கொமர்ஷல் வங்கியின் 181ஆவது கிளையைத் திறந்து வைத்தபின் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

1972ஆம் ஆண்டு கொமர்ஷல் வங்கியின் முதலாவது கிளை யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது. இன்று திறந்து வைக்கப்படுவது இந்த வங்கியின் 8ஆவது கிளையாகும். இதன்மூலம் இந்தப் பிரதேச மக்கள் அதிக பயனடைவாரென நான் நம்புகின்றேன்.


இந்த நிகழ்வில் திருநெல்வேலி வங்கிக் கிளையின் முகாமையாளராகப் பொறுப்பேற்றுக்கொண்ட ராஜமனோகரன் வந்திருந்தவர்களை வரவேற்று உரையாற்றினார்.

பெரும் எண்ணிக்கையானோர் வங்கியில் பணம் வைப்புச் செய்தமையை அவதானிக்க முடிந்தது. (க)

# மாணிக்கவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூலை13

தம்பசிட்டி, கதிரவேற்பிள்ளை வீதியில் அமைந்துள்ள நாவற்கலட்டி அம்மன் ஆலயத்தில் மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 8 மணிக்குத் திருவாசக முற்றோதலுடன் ஆரம்பமாகும். (204)



# கறுப்புப் பட்டியுடன் கடமைசெய்த வைத்தியசாலைகளின் பணியாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

வேலணை வைத்தியசாலையில் பதில் கடமையில் இருந்தபோது மர்மமான முறையில் இறந்து கிடந்த குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் சரவணை தர்சிகாவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்றுத் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அரசாங்க குடும்பநல உத்தியோகத்தர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இத்துக்க தினத்தில் யாழ்.குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்து கடமைகளில் ஈடுபட்டனர்.

அத்துடன் அரசினர் வைத்தியசாலைகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. (50-16-224)

# வேலணை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிக்கு எதிராக மருத்துவப் பணியாளர் கொந்தளிப்பு

## அவர் சுகாதாரத் திணைக்களத்துக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

வைத்தியசாலைகளின் பணியாளர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை அடுத்து வேலணை அரசினர் வைத்தியசாலையில் கடமைபுரிந்த பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த வைத்தியர் நேற்று சுகாதார சேவைகள் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

வேலணை அரசினர் வைத்தியசாலையில் மர்மமான முறையில் இறந்து கிடந்த குடும்பநல மருத்துவமாது சரவணை தர்சிகாவின் மரணத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் மேற்படி வைத்தியரான டாக்டர் செனவிரட்ன அங்கு நிலவிய பதற்ற சூழல் காரணமாக அவரது பாதுகாப்புக் கருதி சங்கானை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

எனினும் சங்கானை வைத்தியசாலையின் பணியாளர்களின் எதிர்ப்பை அடுத்து குறித்த வைத்தியர் மந்திகை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.மந்திகை வைத்தியசாலையில் இவருக்குப் பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் அங்கும் தீவிர எதிர்ப்புக்கள் கிளம்பியதை அடுத்து நேற்று அவரை சுகாதார சேவைகள் திணைக்களத்துடன் இணைத்து வைத்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மரணமான பெண்ணின் பெற்றோர் கருத்துத் தெரிவிக்கையில்; எமது மகள் தற்கொலை செய்வதற்கு எக்காரணமும் கிடையாது. அவரது மரணத்தில் எமக்குச் சந்தேகம் நிலவுகிறது. எனவே இது தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டுவர உதவுமாறு கேட்கின்றோம் எனத் தெரிவித்தனர். (50-16-236)

# கீரிமலை நகுலேஸ்வர ம.வித்கு உதவிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை13

கீரிமலை நகுலேஸ்வரமகா வித்தியாலயத்துக்கு நலன்விரும்பி ஒருவரால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் பயன்பாட்டுக்கென அவரால் சீ.டி.எம்.ஏ தொலைபேசியொன்று வழங்கப்பட்டுள்ளதுடன், வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 120 மாணவர்களுக்கு இலவசமாக சீருடைகள் தைத்து வழங்குவதற்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் வழங்கப்படும் சீருடைகளுக்கு மேலதிகமாக வறிய மாணவர்களுக்கு இவ்வுதவிகள் கிடைக்கவுள்ளன.

அத்துடன் பழுதடைந்த விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்பதற்கும் அவர் உதவியளித்துள்ளார்.

இதேவேளை-

இப்பாடசாலையில் கல்வி பயிலும் 59 வறிய மாணவர்களுக்கு கியூடெக்-ஹரித்தாஸ் நிறுவனம் காலணிகளை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (50-38)

# யுத்தத்தினால் உயிரிழப்புகள், சொத்தழிவுகளை சந்தித்தவர்களுக்கு ஒரு வருடத்துக்குள் நஷ்டஈடு

## புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 13

கடந்தகால யுத்த அனர்த்தத்தின்போது உயிரிழப்புக்கள், உடைமைகள், சொத்து மற்றும் இழப்புக்களைச் சந்தித்தவர்களில் நஷ்டஈடுகோரி விண்ணப்பித்தவர்களுக்கு ஒரு வருட காலத்துள் அதனை வழங்கத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் இ.எ.சமரசிங்க இந்தத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற நடமாடும் சேவையில் கலந்துகொண்ட புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்தகால யுத்த சூழ்நிலையால் வடக்கில் பல்வேறு அழிவுகளை மக்கள் சந்திக்க வேண்டியிருந்தது. அவற்றில் தமது உடைமைகள், சொத்துக்களை இழந்தவர்கள் தமக்கு நஷ்டஈடு வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளனர். வடபகுதியிலிருந்து இதுவரை 2 ஆயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இடம்பெறுகின்ற நடமாடும் சேவை மூலம் விண்ணப்பித்தவர்களில் கணிசமான மக்கள் நன்மைபெறக் கூடியதாக இருக்கும்.

விண்ணப்பித்தவர்களுக்கு ஒரு வருட காலத்துக்குள் நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கு திறைசேரியின் அனுமதியும் கிடைக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்திலேயே நஷ்டஈடு வழங்கலைத் துரிதப்படுத்த முடியும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்தும் அதிக விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. வடபகுதி மக்களுக்கு முன்னுரிமை வழங்க நாம் ஆர்வமாக இருக்கிறோம்.

சொத்து இழப்புக்களுக்கு ஏற்ப நஷ்டஈட்டுத்தொகை வேறுபடும். மரணத்துக்கான நஷ்ட ஈட்டுத்தொகையை 2 லட்சத்திலிருந்தும் காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவிலிருந்தும் வழங்கி வருகிறோம்.

வடபகுதியிலுள்ள விதவைப் பெண் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கும் வீட்டுத் திட்டத்துக்கும் என எம்மிடம் திட்டம் உள்ளது. அதனை விரைவில் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்-என்றார். (50-14)

# தபால் பஸ்களைப் பயன்படுத்தி விரைவில் யாழ்ப்பாணம் - வெளியூர் அஞ்சல் சேவை

## வடமாகாணப் பிரதி அஞ்சல் மா. அதிபதி தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 13

தபால் பஸ்கள் மூலம் யாழ். குடாநாட்டுக்கும் வெளியூர்களுக்கும் இடையிலான தபால் சேவையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வடமாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபதி வி.குமரகுரு இத்தகவலை உதயனுக்கு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தபால்மா அதிபர் எம்.கே.திசநாயக்காவின் புதிய திட்டத்தின் பிரகாரம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வெளியூருக்கான துரித தபால் சேவையை மேற்கொள்வதற்கு அஞ்சல் மா அதிபர் இரண்டு புதிய பஸ்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கவுள்ளார்.

இந்தப் புதிய பஸ்கள் இங்கு வந்து சேர்ந்ததும் துரித தபால்சேவை உடனடியாக ஆரம்பிக்கப்படும்.

இந்த இரண்டு தபால் பஸ்களும் யாழ்ப்பாணத்தில் இருந்தும், கொழும்பில் இருந்தும் ஒரே சமயத்தில் தபால்சேவையை ஆரம்பிக்கும். இதன் மூலம் மக்கள் பெரிதும் நன்மையடைவர்.

இந்தத் தபால் பஸ்களில் யாழ்ப்பாணத்திலிருந்தும், கொழும்பில் இருந்தும் பொதிகளை ஏற்றி இறக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

அதேவேளை தற்போது வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான தபால் சேவை தினமும் இடம்பெற்று வருகின்றது. இதற்கென மூன்று தபால் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. (50-224)



கொமர்ஷல் வங்கியின் திருநெல்வேலிக் கிளை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

திறப்பு விழாவுக்கு வருகைதந்த விருந்தினர்களை வரவேற்பதை முதலாவது படத்திலும் இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கொமர்ஷல் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரவிடயஸ் நாடாவெட்டிக் கிளையைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் பதிதாக திறக்கப்பட்ட திருநெல்வேலி கொமர்ஷல் வங்கியின் கிளை முகாமையாளர் சி.ராஜமனோகரன் மங்கள விளக்கேற்றுவதை மூன்றாவது படத்திலும் வங்கியின் முதல் கொடுக்கல் வாங்கலைப் பிரதம விருந்தினர் ஆரம்பித்து வைப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: ரட்ணம், டிலீப்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு தடவைக்கு மேல் பதவிக்கு போட்டியிடும் யோசனையைக் கைவிடுகிறார் ஜனாதிபதி

## நிறைவேற்று அதிகார பிரதம மந்திரி பதவியை உருவாக்கவும் சம்மதம்

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எத்தனை தடவையானாலும் தொடர்ந்து அப்பதவிக்காகப் போட்டியிடுவதற்கு வசதி செய்யும் வகையில் அரசமைப்பில் திருத்தம் செய்யும் முயற்சியைக் கைவிடுவார் என்று தெரிகின்றது. இதற்கு பதிலாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதம மந்திரி பதவி ஒன்றை ஏற்படுத்துவதற்கு 'கொள்கை அளவில்' அவர் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் தெரிகின்றது.

கொழும்பில் இருந்து வெளிவருகின்ற ஆங்கில வாரப்பத்திரிகையொன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

ஜனாதிபதி ராஜபக்ஷவின் இந்த சிந்தனை மாற்றம் குறித்து எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பு மாற்றங்கள் மற்றும் வேறு அரசியல் தொடர்பான விவகாரங்கள் குறித்து இருதலைவர்களும் நேற்று முன்தினம் ஜனாதிபதியின் வாசஸ்தலமான ஜனாதிபதி மந்திரயவில் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடினார்கள்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழித்துவிட்டு நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதம மந்திரி பதவியை உருவாக்குவதானால் அரசுக்கு ஆதரவளிக்கத் தயாராய் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் பகிரங்கமாக அறிவித்து இரண்டு நாள்களின் பின்னர் ஜனாதிபதியின் இந்தத் தீர்மானம் வெளிப்படையாகியுள்ளது.

இம்மாதிரி முடிவு ஜனநாயகத்துக்கு ஆபத்தாக இருக்கலாகாது என்று விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். விக்கிரமசிங்க தமது காரியாலயத்தில் புதன்கிழமையன்று பத்திரிகை ஆசிரியர்களை சந்தித்து உரையாடியபோது இக்கருத்தை வெளியிட்டிருந்தார். பின்னர் பொதுக் கூட்டமொன்றிலும் அதனை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த அரசமைப்பு மாற்றங்கள் தொடர்பாக ஐ.தே. கட்சியின் முன்னாள் பிரதிநிதிகள் குழுவொன்றை அரசாங்கத்தரப்பினருடன் கலந்துரையாடச் செய்வதற்கும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு ஒப்புதல் தந்துள்ளார். இதன் முதல் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறும் என்று தெரிகின்றது.

ஐ.தே. முன்னணியின் பிரதிநிதிகளாக ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ.தே.க உதவித் தலைவர் கருஜயசூரிய, முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ராவூப் ஹக்கீம், காமினி ஜயவிக்கிரம பெரேரா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

இரு தலைவர்களும் அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் தொடர்பாகவும் விவாதித்ததாகத் தெரிகின்றது. (ப)


## மரண அறிவித்தல்

### பசுபதி கணபதிப்பிள்ளை (கணேசு)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி கணபதிப்பிள்ளை (கணேசு) நேற்று (12.07.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் முத்துலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜெயசங்கர் மற்றும் செல்வரஞ்சினி, காலஞ்சென்ற புஷ்பறஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவதாஸின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில்.
0217901065 (100524)

தகவல்:
மனைவி-முத்துலட்சுமி,
மருமகன்-ப.சிவதாஸ் [நாதஸ்வரம்]


# இலங்கையில் இருந்து தமிழகம் வந்த தமிழரை திருப்பியனுப்பியது இந்தியா

## விடுதலைப் புலிகளுடன் தொடர்பாம்

சென்னை, ஜூலை 13

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு விமானத்தில் வந்த இலங்கைத் தமிழ் அகதி ஒருவர் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவர் திருப்பியனுப்பப்பட்டார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரோடு அருகே பவானிசாகர் முகாமில் இருந்த சந்திரலோகு (வயது - 32) கடந்த ஆண்டு இலங்கை சென்றார். அவருடைய மனைவியும் ஊனமுற்ற குழந்தை இன்னும் இங்கு உள்ளனர்.

இலங்கையில் இருந்து தன் குடும்பத்தினரைப் பார்க்க சனிக்கிழமை இரவு விமா னம் மூலம் சந்திரலோகு சென்னை வந்தார். ஆனால் அவரை இறங்கவிடாமல் தடுத்த குடியேற்றத்துறை அதிகாரிகள் மறுபடி அவரை இலங்கைக்கு அனுப்பி வைத்தனர்.

அவர் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகொண்டவர் என்று தமிழக கியூப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர் எனவும், அதன் அடிப்படையில் சந்திரலோகுவை திருப்பி அனுப்புமாறு மத்திய அரசு கூறியது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் விமானம் மூலம் அவர் திருப்பி அனுப்பப்பட்டார் என அதிகாரிகள் தெரிவித்தனர். (சி)

# வலைப்பாட்டில் இன்று சுனாமி எச்சரிக்கை ஒத்திகை

யாழ்ப்பாணம், ஜூலை 13

சுனாமி பேரலையின் முற்காப்பு செயற்பாட்டு ஒத்திகை ஒன்று, இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பூநகரி, வலைப்பாடு கிராமத்தில் இடம்பெறவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி இணைப்பாளர் ப.சுதர்சனன் அறிவித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், கிராமத்தின் பங்குத்தந்தை, கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் இந்த நிகழ்வுக்கு பொது மக்களைக் கலந்துகொள்ளுமாறு உதவி இணைப்பாளர் கேட்டுள்ளார். (50-14)


# Susanya
## Travels Tours

★ யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு -கல்முனைக்குச் செல்ல!
★ கல்முனை - மட்டக்களப்பு- யாழ்ப்பாணம் செல்ல!!

இலகுவானதும் சுலபமானதுமான பயணத்துக்கான தீர்வு நம்மிடத்தே!!!

முன்கூட்டியே ஆசனங்கள் ஒதுக்கக்கூடிய இரவுநேர சொகுசு பஸ்சேவை தற்பொழுதிலிருந்து நடைமுறையில்.

**யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு- கல்முனை**
புறப்படும் நேரம் :
யாழ்ப்பாணம் மாலை 5.45 pm கல்முனையை அடையும் நேரம் காலை 5.00 am

பதிவுகளுக்கு:
மிலேனியம்,
(உல்லாசப் பயணிகள் விடுதி,இல. 76/60, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.)
தொ.பே: 021 222 5876/021 459 0052/ 0716016310
வரணி பாம்,
இல.145, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2868, 0777917691, 021 4900955

யாழ்ப்பாணத்தில் மிலேனியம், வரணிபாம் உட்பட வேறு பதிவிடங்களிலும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

**கல்முனை-மட்டக்களப்பு-யாழ்ப்பாணம்**
புறப்படும் நேரம்: கல்முனை மாலை 5.45 pm - மட்டக்களப்பு 6.45 pm- யாழ்ப்பாணம் வந்தடையும் நேரம் காலை 5 am.

மேலதிக விபரங்களுக்கு:
0725173746/0757856891/0715935658.





## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா இரஞ்சிதம்மா



நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் 83/15, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா இரஞ்சிதம்மா நேற்று (12.07.2010) திங்கட்கிழமை அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் கந்தையாவின் (ENK) மனைவியும் காலஞ்சென்றவர்களானவேலுப்பிள்ளை-விசாலாட்சி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- சின்னாச்சி தம்பதி யரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான அரசரெட்ணம், கோபாலபிள்ளை மற்றும் சொர்ணம்மா, பூமணி, நாகராசா, கனகராசா, யோக ராசா, பரமேஸ்வரன், நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, நடராசா, கந்தசாமி மற்றும் இராமாசிப்பிள்ளை, சிவஞானபிள்ளை ஆகியோரின் மைத்துனியும் தனரஞ்சிதராஜன் (கணக்காளர்), சகாதேவன் (கிராம உத்தியோகத்தர்), இந்திராதேவி, ஜெயலெட்சுமி, ஜெயானந்தன் (பதவிநிலை உத்தியோகத்தர்,பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம்), ஜெயதேவி (ஆசிரியை), ஜெயகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தவமணி, கலாதேவி, குகனேசபிள்ளை, ஆனந்தலிங்கம், நாகராணி, ஸ்ரீஸ்கந்தராசா (கிராம அலுவலர்), மனோகரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரதீபன் (கணக்காளர்), நித்யா (ஆசிரியை), சத்யா (இலங்கை வங்கி), திருமாறன் - குகப்பிரியா (பிரான்ஸ்), தேனுதயா (மக்கள் வங்கி), நிரஞ்சன் (பொறியியல்பீடம் 3 ஆம் வருடம்,பேராதனைப் பல்கலைக்கழகம்), தோஜிகா, தேனுஷா (பொறியியற்பீடம் மொறட்டுவ, முதலாம் வருடம்), துஷ்யந்தி, சபேசன், பிரியந்திணி,கஜதீபன், ஜனுசன் (கனடா), சஜிசன் (கனடா), நவாகினி, நவாஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.07.2010) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

83/15, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 1076

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் சத்தியசாயி சேவா நிறுவனத்தினரால் சாவற்காடுவாழ் முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்திக்குழி ஞானவைரவர் ஆலயத்தில் இடம்பெற்றது. இதில் 64 பெண் முதியவர்களுக்கும், 55 ஆண் முதியவர்களுக்கும் உடு புடைவைகள் வழங்கப்பட்டன.

இதன் ஆரம்ப நிகழ்வாக சாயி நிறுவனத்தின் பஜனை இடம்பெறுவதை முதலாவது படத்திலும், வரவேற்புரையை ந.செல்வச்சந்திரனும், சிறப்புரையை வடபிராந்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழுவின் தலைவரும் ஊர்காவற்றுறை நீதிபதியுமாகிய ஆர்.வசந்தசேனன் நிகழ்த்துவதையும் அடுத்துள்ள இரு படங்களிலும், முதியோர் சங்கப் பொருளாளர் திருவிளங்கம் உரையாற்றுவதை நான்காவது படத்திலும், முதியோர் ஒருவர் கௌரவிக்கப்படுவதை இறுதிப் படத்திலும் காணலாம்.

# பல்வேறு தேவைகளுக்கும் வாக்காளர் பதிவு அவசியம்; 18 வயதுக்கு மேற்பட்டோர் சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்!

## கூட்டமைப்பு எம்.பி.சிறிதரன் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வாக்காளர்களாகத் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இதற்கான ஊக்குவிப்புக்களை அரச அதிகாரிகள் கிராம மட்டத்தில் இருந்து வழங்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்காளர்களாகத் தம்மை இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சிறிதரன் எம்.பி. மேலும் கூறியதாவது-

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 18 வயதுக்கு மேற்பட்ட பலர் வாக்காளர்களாகத் தங்களைப் பதிவு செய்யவில்லை. எனவே இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக அனைவரும் தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்தல் வேண்டும்.

வாக்காளர்களாகப் பதிவதற்குக் கிராம அலுவலர்களிடம் விண்ணப்பங்களை பெற்று அவற்றைப் பூர்த்தி செய்து பதிவு செய்வதற்கான படிவத்தைப் பெறுதல் வேண்டும். ஏற்கனவே வாக்காளர்களாகப் பதிவு செய்தவர்களும் இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி தமது பதிவுகளைப் புதுப்பிக்க வேண்டும்.

ஒருவர் தம்மை வாக்காளராகப் பதிவு செய்வதன் மூலமே இந்த நாட்டின் பிரஜையாகத் தன்னை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் பல நன்மைகளையும் பெற்றுக் கொள்ள முடியும். வாக்காளர் பதிவு வேலை வாய்ப்புக்களைப் பெறத்தேவையான ஆவணங்களில் ஒன்றாக உள்ளது.

பிரஜை ஒருவர் அரசியல் உரிமைகளைப் பெறவும் நிவாரணங்கள், வீட்டுத் திட்டங்களைப் பெறவும் வாக்காளர் பதிவு மிகவும் அவசியமானது.

எனவே, மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வாக்காளராகப் பதிவு செய்யும் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது. புதியவர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கு உதவித் தேர்தல் ஆணையாளர்,பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள், கிராமிய அபிவிருத்திச்சபை, மாதர் சங்கங்களின் தலைவர்,செயலாளர்கள் போன்றோர் ஊக்குவிக்கவும் வேண்டும் -என்றார். (ஒ-6-14)

## சுன்னாகம் சிவபூதராயர் ஆலயம் புனரமைப்பு

சுன்னாகம், ஜூலை 13

சுன்னாகம் தெற்கு, சிவபூதராயர் ஆலயத்தில் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, கட்டடங்கள் புனரமைக்கப்படுவதுடன் சுண்ணாம்பாலான அலுவலகம், மடப்பள்ளி முதலானவை இடிக்கப்பட்டுப் புதிதாகக் கட்டப்படுகின்றன.

அத்துடன் ஆலயக் கூரை சிமெந்தினால் வில் வடிவில் அமைக்கப்படுவதுடன் தெட்சணாமூர்த்தி, சனீஸ்வரன், பரிவாரமூர்த்தி ஆலயங்களும் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன. (50-38)

# தெல்லிப்பழையில் நடந்த நடமாடும் சேவையில் 2ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்குபற்றினர்

யாழ்ப்பாணம், ஜூலை 13

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் கடந்த சனிக்கிழமை நடத்திய நடமாடும் சேவையின் போது இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடமாடும் சேவையில் புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகரா, பிரதியமைச்சர் காமினி விஜிதமுனி சொய்சா, அமைச்சின் செயலாளர் திஸநாயக்கா உட்பட அதிகாரிகளும் பங்குபற்றியிருந்தனர்.

இந்த நடமாடும் சேவையின் மூலம் கடந்த கால யுத்தம் காரணமாகப் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்தவர்கள், ஆதனங்களை இழந்தோர், கைத்தொழில் நடவடிக்கையால் பாதிப்புற்றோர் என இரண்டாயிரத்துக்கும் அதிகளவான மக்கள் பங்குபற்றினார்கள்.




இந்த நடமாடும் சேவையின்போது தெரிவு செய்யப்பட்ட 10 பேருக்கு நஷ்டஈட்டுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன. அத்துடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகத்துக்குப் புதிதாகத் தெரிவான ஏழு மாணவர்களும் இதன் போது விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.பல்லைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், இராணுவ அதிகாரிகள், பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலக அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-14)

# கடந்த 6 மாத காலப்பகுதியில் யாழில் 200 காச நோயாளிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆறு மாத காலப் பகுதியில் 200 பேர் காச நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காச நோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர். எஸ்.யமுனானந்தா இத்தகவலை தெரிவித்தார்.

கடந்த ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையான 6 மாத காலப்பகுதியில் சிகிச்சை பெற்றவர்களில் 200 பேருக்கு காசநோயின் தாக்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நோயாளர்களுக்கு சளியில் நோய்க்கிருமி உள்ளது கண்டுபிடிக்கப்பட்டு அதற்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன. (50-224)

## உள்ளூராட்சி வார நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 13

உள்ளூராட்சி வாரம்-2010 ஐ முன்னிட்டு வலி.மேற்குப் பிரதேச சபையில் இரு நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளன.

பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் விழா இடம்பெறும். வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இன்றுகாலை 7.30 மணிக்கு முன்பள்ளி சிறார்களின் கோலத்திறன் விழா இடம்பெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக 'எலைட்' நிறுவனத்தின் தலைவர் த.சீவரத்தினம் கலந்துகொள்வார்.

மாலை 2 மணிக்கு முன்பள்ளி சிறார்களின் அபிநயப்பாடல் திறன்விழா இடம் பெறும்.

இந்நிகழ்விற்கு வலிகாமம் வலய ஆரம்பப் பிள்ளைக் கல்வி அபிவிருத்திப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகநேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (50-302)

# பழுதடைந்த நிலையில் பழவகைகள் நகரப்பகுதிக் கடைகளில் விற்பனை

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்.நகரில் பழுதடைந்த பழங்களைச் சில வியாபாரிகள் விற்பனை செய்வதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அப்பிள், தோடம்பழம், றம்புட்டான் போன்றவற்றைச் சில வியாபாரிகள் பழுதடைந்த நிலையில் விற்பனை செய்வதாகவும், இவை குறைந்த விலையில் விற்கப்படுவதால் பொதுமக்கள் அவற்றை வாங்கிச் சென்று பின்னர் ஏமாற்றமடைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பழங்களை வாங்கி உள்ள சிலர் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர் எனவும் கூறப்பட்டது.

சுகாதாரப் பகுதியினர் இந்த விடயத்தில் அதிக அக்கறைகாட்டி பழுதடைந்த பழங்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (50-224)

# கைதிகளின் நிலைமையை நேரில் பார்வையிட்டார் பிரதியமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூலை 13

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்புப் பிரதி அமைச்சர் காமினி விஜிதமுனி சொய்சா, சிறைச்சாலை ஆணையாளர் வி.கே சில்வா சகிதம் யாழ். சிறைச்சாலைக்கு கடந்த 10 ஆம் திகதி விஜயம் செய்தார்.

யாழ். சிறைச்சாலைக்கு சென்ற பிரதி அமைச்சர் அங்கு கூடியிருந்த பொலிஸ் அதிகாரிகள், சிறைச்சாலை அதிகாரிகள் ஊழியர்கள் மத்தியில் உரையாற்றினார்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுடன் ஊழியர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றனர், சிறைச்சாலையின் தேவைகள், ஊழியர்களின் தேவைகள், கைதிகளின் நலன்கள் குறித்தும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் சிறைச்சாலையின் சுகாதாரம், ஆரோக்கிய நிலைமைகள் குறித்து அமைச்சர் நேரில் ஆராய்ந்தார். சமையலறையிலுள்ள உணவுப் பொருள்களின் தரத்தையும் அவர் சோதித்தார்.

சிறைச்சாலையில் உள்ள அறைகள் ஒவ்வொன்றுக்கும் நேரடியாகச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் நிலைமைகளை அமைச்சர் கேட்டறிந்தார்.

இந்த விஜயத்தின் போது அமைச்சின் செயலாளர் எஸ். திஸாநாயக்க, சிரேஷ்ட ஆலோசகர் எஸ். சதீஸ்குமார் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர். (50-14)

## நீர்வேலிப் பகுதியில் முகமூடித் திருடர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

நீர்வேலிப் பிரதேசத்தில் முகமூடி அணிந்த திருடர்கள் இரவு வேளையில் நடமாடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் திருடர்களின் திருட்டு முயற்சியை முறியடிக்க மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் நீர்வேலி கந்தசுவாமி கோயிலடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இரவு வேளையில் இந்த முகமூடித் திருடர்கள் நுழைந்தபோதும் வீட்டார் விழித்துக் கொண்டதால் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து அப்பகுதி மக்கள் இரவில் பதற்றத்துடன் பொழுதைக் கழிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற்கும் விலை போகாத அமிர்

**தமிழரசுக் கட்சியின் முன்னாள் செயலதிபர், காலஞ்சென்ற அ.அமிர்தலிங்கத்தின் மறைவின் 21ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

### "அமிர்" பற்றிப். ப.சிதம்பரம்

தலைவர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் படுகொலை 1989ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13ஆம் திகதி அரங்கேறியது. இக்கொலை பற்றியும் அமிர்தலிங்கம் பற்றியும் இந்தியாவின் இன்றைய மத்திய அமைச்சராக விளங்கும் தமிழரான திரு.ப.சிதம்பரம் அவர்கள் 1989 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17 ஆம் திகதி பின்வருமாறு கூறியிருந்தார்.

'தன் வாழ்நாளெல்லாம் இலங்கை வாழ் தமிழ் மக்களுடைய நலனுக்காகவே செயலாற்றிய திரு.அமிர்தலிங்கம் அவர்களை வேறொரு தமிழர் இயக்கத்தைச் சார்ந்தவர்களே படுகொலை செய்தது அழிக்கமுடியாத கறையாக அமைந்து விட்டது.

திரு. அமிர்தலிங்கம் அவர்களோடு 1986, 1987ஆம் ஆண்டுகளில் நெருங்கிப் பழகினேன். இலங்கை அரசோடு பேச்சுவார்த்தைகள் நடந்த காலத்திலே எனக்கு நல்ல ஆலோசனைகளைச் சொல்லிப் பேருதவியாக இருந்தார். அவருடைய ஆழமான அனுபவம், தீர்க்கமான அறிவு, அழுத்தமான கொள்கைப் பிடிப்பு என்னைப் பெரிதும் கவர்ந்தன.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் இன்னல்கள் இன்னும் முடியவில்லை. ஒரு நேரத்தில் ஒளிக்கீற்று தோன்றுகிறது. இன்னொரு நேரத்தில் இருள் மீண்டும் சூழ்ந்து கொள்கிறது. தமிழர்களுக்குப் புதிய விடியல் ஏற்படும் நேரத்தில் அவர்களுக்குத் தலைமை ஏற்று நடத்திச் செல்ல திரு.அமிர்தலிங்கம் அவர்கள் இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவர் மறைவு உலகத் தமிழருக்குப் பேரிழப்பு'.

### 'அமிரும்' எஸ்.ஜே.வியும்


மிகவும் கண்டிப்பாக மனித உரிமைகளையும், ஜனநாயகப் பாரம்பரியத்தையும் பேணிக்காத்த தந்தை செல்வா அவர்கள் திருவாளர் அமிர்தலிங்கத்தையோ அன்றி வேறு எவரையோ தமது வாரிசாகச் சிபார்சு செய்யவில்லை. அன்று (1974) திரு.அமிர்தலிங்கம் பற்றிக் கூறிய கருத்து இதுதான்.

"தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று இப்போது அதைக் கொண்டு நடத்தும் திரு.அமிர்தலிங்கத்திடம் நான் காணும் முக்கிய சிறப்பியல்பு அவருடைய அஞ்சாமையாகும். மிகப்பலம் வாய்ந்த எமது எதிரியான இலங்கை அரசாங்கத்தை எதிர்த்து நாம் போராடுவதற்கு அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களே வேண்டும்.

அமிர்தலிங்கத்திடம் பல சிறப்பியல்புகள் இருக்கின்றன. தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் திறமையாகப் பேசும் ஆற்றல் படைத்தவர். தலைவன் ஒருவனுக்கு வேண்டிய குணங்கள் அவரிடம் உண்டு. ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்குப் போராடுவதற்கு அவருக்குப் போதிய காலம் இருக்கின்றது. வயதைப் பொறுத்த வரையில் அவரை ஓர் இளைஞர் என்று தான் சொல்ல வேண்டும்." *(சுதந்திரன் 22.12.1974)*

### ஊழல் குற்றச்சாட்டுக்கு அப்பாற்பட்ட தலைவர்

திரு.அமிர்தலிங்கம் அவர்கள் 1927ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26ஆம் திகதி வட்டுக் கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகத்திற் பிறந்தவர். 1945ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகம் புகுந்து பி.ஏ பட்டம் பெற்று இப்பரீட்சையில் முதல் வகுப்பில் சித்தி பெற்றார். பின்னர் 1951 இல் வழக்கறிஞருக்கான சட்டப்படிப்பிலும் முதல் வகுப்பில் சித்தியடைந்து சட்டஅறிஞரானார். அப்போது தான் நமது பல்கலைக்கழகங்களை 'மாக்சிச' சித்தாந்தங்கள் ஆக்கிரமித்த காலம். இளம் அமிர்தலிங்கம் இவற்றைத் தமது கற்கை நெறியோடு கற்றது மட்டுமன்றி இவை பற்றி அக்காலத்திற் புகழ்பெற்ற மாக்சிசத் தலைவர்களிடமும் பாடம் கற்றார். எனினும் பல்கலைக்கழகத்தில் தமது தமிழ் ஆர்வத்தால் தமிழ்ச்சங்கத்தை நிறுவி அதன் முதல் தலைவராக விளங்கிய இவரைத் தமிழுணர்வுதான் கவர்ந்தது. தமிழ் மக்களின் விடிவுக்காக 1949இல் தந்தை செல்வாவினால் உருவாக்கப்பட்ட தமிழரசுக்கட்சியில் மிக இளமைக்காலத்தில் இணைந்து கொண்டார். மாறாக அன்று அவர் சட்டத் துறையில் மட்டும் கவனஞ் செலுத்தியிருந்தால் முதுபெரும் வழக்கறிஞராக ஒரு கோடீஸ்வரனாக வாழ்ந்திருப்பார். நமது தலைவர்கள் எல்லாம் தத்தம் துறைகளில் ஈடுபட்டுத் தமது வாழ்வுக்கென நல்ல பொருளாதாரப் பின்னணிகளை உருவாக்கிய பின்னர்



தமிழ் காங்கிரசிலிருந்து பிரிந்து செயற்பட்டதால்) பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. தந்தையின் சிந்தனைகள் வடகிழக்கு மாகாணங்களில் பட்டி தொட்டிகளிலும், பட்டினங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கின. கருத்துக்குக் கருத்தல்ல, கல் மாரியும் கிடைத்தது. பல இடங்களில் தமிழினம் செல்லவேண்டிய பாதை கல்லும் முள்ளும் நிறைந்து காணப்பட்டது. ஆயினும் பல்

துச்சென்ற மூத்த பரம்பரையினருடன் இளைஞனாக இந்தப் பெரிய அஞ்சலோட்டத்தில் இணைந்து இறுதிவரை சளைக்காது ஓடிக் காலனின் பிடியில் மட்டும்தான் செயலிழந்த கர்மவீரன் அமிர்தலிங்கமேதான்.

### இளைஞர்களும் இணைந்தனர்

1950களில் தலைவர் அமிர்தலிங்கம் உருவாக்கிய தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி நாளடைவில் வலுப்பெற்ற முன்னணியாக வளர்ச்சி கண்டதோடு 1970 களில் உருவாகிய தமிழ் இளைஞர் பேரவைக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தது. மூத்த பரம்பரையுடன் இணைந்து செயலாற்றிப் பின்னர் அவர்களிடமிருந்து தலைமைப் பொறுப்பை ஏற்று இளைஞர் பரம்பரையினரையும் இதில் இணைத்த பெருமை அமிர்தலிங்கம் அவர்களுக்குத்தான் உண்டு. இத்தகைய எதிர்பார்ப்புத் தந்தை செல்வாவுக்கு இருந்ததை 1951இல் திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டில் அவர் ஆற்றிய பின்வரும் உரை காட்டிநிற்கின்றது.

"இவ்வியக்கத்தில் பணிபுரியும் ஊழியர்களாகிய நாம் நம் தலைமுறையிலேயே நமது கோரிக்கை கைகூடுமென்று விசுவாசிக்கின்றோம். எம் தலைமுறையிற் கைகூடாவிடினும் நாம் இப்போரை நடாத்தி எமக்குப்

## தலைவனுக்கு வேண்டிய தகுதி உள்ளவர் என்று தந்தை செல்வாவினால் இனங்காணப்பட்டவர்

தான் அரசியலில் நுழைந்தவர்கள். ஆனால் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் இதற்கு விதிவிலக்காக அமைந்தவர். சட்டக்கல்லூரியிலிருந்து வெளியேறியதும் தந்தையின் இயக்கத்தில் இணைந்ததால் தமது அரசியல் வாழ்வுக்கு ஏற்றவாறு ஒரு பொருளாதாரப் பின்னணியை இவரால் உருவாக்க முடியவில்லை. இருந்தும், அவர் ஒரு தூய்மையானவர். எத்தகைய ஊழல் குற்றச்சாட்டுகளுக்கும் அப்பாற்பட்டவர். தலைவன் என்பவனின் வாழ்க்கை, அவனின் நடத்தை தொண்டர்களுக்கு முன்மாதிரியாக இருக்கும்படி வாழ்ந்தவர். தம்மை மட்டுமன்றித் தம் குடும்பத்தையே இன விடுதலைக்காக அர்ப்பணித்தவர். இவரது தியாகத்தினாலும் அப்பழுகற்ற தலைமையினாலும், வாழ்க்கையினாலும் தலைமை அவரையே தேடி வந்தது. மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து அவர்களின் பணியே தம்பணி எனக் கொண்டு செயற்பட்ட இவரை மக்கள் தமது தலைவர் எனச்சொல்லிப் பெருமைப்பட்டனர். பூரிப்படைந்தனர், கொண்டாடினர். இதய சுத்தியுடன் உடல், பொருள், ஆவி அத்தனையையும் தமிழின் விடுதலைப்போர் என்ற வேள்வித் தீய்க்கு ஆகுதி ஆக்கிய தலைவர் அமிர்தலிங்கம் போன்றோரின் வாழ்க்கையை நினைக்கும் போது மெய்சிலிர்க்கிறது.

### உரிமைப்போரில் தந்தையும் தனயர்களும்

தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனத்துடன், தமிழர் தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடுகளுடன் உருவாகிய இலங்கைத் தமிழரசுக்கட்சி இயக்கம் அதன் ஆரம்பகாலத்தில் (அகில இலங்கைத்

வேறு சவால்கள் மத்தியிலும் சளைக்காது தந்தையும், தனயர்களும், தொண்டர்களும் தமது பணிகளில் ஈடுபட்டனர். எனினும் அக்கால நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்று அரசாங்கத்தால் அளிக்கப்படும் வாகனச் சலுகையோ அன்றிப் பிற சலுகைகளோ இருக்கவில்லை. இதனால் பலர் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டாலும் துணிந்து தந்தையோடு துணைநின்று போராடிய இவர்களை என்றென்றும் நன்றியுடன் நினைவுகூருவது நமது கடமையாகின்றது.

மத்தியில் மந்திரிப் பதவிகளைப் பெற்று ஆளும் அரசுக்கு ஆலவட்டம் பிடித்து எப்படியும் சலுகைகளைப் பெற்றுக் காலத்தை ஓட்டலாம் என்று எண்ணியவர்களுக்கு தந்தையின் இயக்கத்தின் போராட்ட விதிகளான ஒத்துழையாமை, போராட்டம், ஹர்த்தால், கதவடைப்பு, சத்தியாக்கிரகம், சிறைவாசம் போன்ற சொற்பிரயோகங்கள் அந்நியமாகவே தென்பட்டன. இவையே தமிழரசுக் கட்சி தொடக்கி வைத்த உரிமைப் போராட்டத்தில் புழக்கத்தில் இருந்த சொற்பிரயோகங்களாகும். இதனை உதட்டளவில் மட்டுமன்றி உள்ளத்தளவிலும் நிலைநிறுத்திச் சுதந்திரப் போரை முன்னெடுத்

பின் வரும் சந்ததியினரின் கையிற்கொடுப்பது நமது கடன். எம்பின்னே அரும்பெரும் வீரர்களை எம்மினம் பெறக்கூடும். குறைந்த பட்சத்தில் அவர்களுக்கு அணிவகுப்பவர்களாகவாயினும் இருப்போமாக"

### பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் (சிரேஷ்ட துணைத் தலைவர் இலங்கைத் தமிழரசுக் கட்சி)

தலைவர் அமிர்தலிங்கத்தின் மேடைப் பேச்சுத் தனிரகமானது. உண்மையிலே 'நாவலராகிய' இவரின் பேச்சில் தமிழ் விளையாடியது. தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் சிறப்பாகப் பேசும் ஆற்றல் படைத்த தலைவரும் இவர்தான். இவரது கட்டுப்பாடான வாழ்க்கை, நாவன்மை, அஞ்சாமை, உள்ளத்தூய்மை ஆகியவற்றுடன் இவரது வாழ்க்கைத்துணையாக அமைந்த மங்கையர்க்கரசியின் உணர்ச்சிமிக்க தமிழ்த் தேசிய கீதங்களும் வடகிழக்கு மாகாணங்கள் எங்கணும் ஒலிக்க மூத்தோரும் இளைஞரும் இயக்கத்தில் இணைந்தனர்.

(மிகுதி நாளை தொடரும்)

## சைக்கிள் திருட்டு

சுன்னாகம், ஜூலை 13

முன்பள்ளி விளையாட்டுப் போட்டிக்கு வந்திருந்த அயல் முன்பள்ளி ஆசிரியை ஒருவரின் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சுன்னாகத்தில் நடைபெற்றது.

இப்பகுதியிலுள்ள முத்தமிழ் மன்ற முன்பள்ளி விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே துவிச்சக்கர வண்டி திருட்டுப்போயுள்ளது.

இதேபோன்று சுன்னாகம் மத்திய மருந்தகத்திலும் துவிச்சக்கர வண்டியொன்று அண்மையில் திருட்டுப்போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(5838)


சீட்டிழுப்பு இல. **2264** திகதி **11.07.2010**

**மஹஜன சம்பத** — அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து: **A** வெற்றி எண்கள்: **4 6 1 9 8 3**

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | A | 4 | 6 | 1 | 9 | 8 | 3 | ரூபா. | 11,726,905/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 4 | 6 | 1 | 9 | 8 | 3 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 6 | 1 | 9 | 8 | 3 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 06 |
| 3ம் பரிசுகள் | | | | 1 | 9 | 8 | 3 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 72 |
| 4ம் பரிசுகள் | | | | | 9 | 8 | 3 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 685 |
| 5ம் பரிசுகள் | | | | | | 8 | 3 | ரூபா. | 100/= | பரிசுகள் | 6998 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 3 | ரூபா. | 20/= | பரிசுகள் | 68876 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 4 | 6 | 1 | 9 | 8 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 08 |
| 8ம் பரிசுகள் | | 4 | 6 | 1 | 9 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 68 |
| 9ம் பரிசுகள் | | 4 | 6 | 1 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 688 |
| 10ம் பரிசுகள் | | 4 | 6 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 6858 |
| 11ம் பரிசுகள் | A | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 27485 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. **11,919,823.00**

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,191,720.00 ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும் தேசிய லொத்தர் சபை 234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline:2433631

www.nlb.lk



## முல்லைமாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 31.05.2010 இல் நிதிக்கூற்றுத் தயாரித்தல்

### முக்கிய அறிவித்தல்

மேற்படி எமது சமாசம் மீள்குடியமர்ந்த பின் 31.05.2010 இல் கணக்குகளை ஒழுங்குபடுத்தி நிதிக் கூற்றுத் தயாரிக்க வேண்டியுள்ளது. இதற்கமைய கீழ்வரும் விடயங்களை மேற் படி திகதியில் உறுதிப்படுத்தி உறுதிப்பத்திரத்தை 20.07.2010க்கு முன் தலைவர், சி.க.கூ.ச.சமாசம், முல்லை மாவட்டம், ஒட்டுசுட்டான் என்னும் முகவரிக்குப் பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

01) சமாசத்துக்கான வருமதிகள்
அங்கத்துவ சங்கங்கள் உட்பட ஏனையவர்கள்
அ) விவசாயக் கடன் ஆ) நீண்ட காலக் கடன்
இ) குறுங்காலக் கடன் ஈ) கால் நடை வளர்ப்புக் கடன்
உ) சூரியகலக் கடன் ஊ) தையல் மெசின் கடன்
எ) பொருள் கடன்கள் ஏ) கையிருப்புக் குறைவு வருமதி

02) சமாசம் செலுத்த வேண்டிய சென்மதிகள்
01) நிலையான் வைப்பு 02) சாதாரண சேம வைப்பு
03) கட்டாய சேம வைப்பு 04) சிறுவர் சேம வைப்பு
05) ஏனையவை

மேற்படி வைப்புக்களுக்கான தங்கள் வருமதிகளுக்கான பாஸ்புத்தகம், வைப்புச் சான்றிதழ், மூலப் பிரதிகள் சமாச அலுவலகத்தில் நிழல் பிரதியுடன் உறுதிப்படுத்தலுக்காக சமர்ப்பிக்க வேண்டும்.

இடம் பெயர்வு தொடர்பில் சமாசம் தொடர்பாக ஏதாவது ஆதாரங்களுடன் கூடிய தகவல்கள் எவரிடமாவது இருப்பின் அவற்றை ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கவும்.

*முல்லை மாவட்ட சி.க.கூ.சமாசம்*
*ஒட்டுசுட்டான்,*
*முல்லைத்தீவு.* (100502) தலைவர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாட்டில் யுத்தம் நிறைவடைந்துள்ளதால் கிழக்கு மாகாணம் கல்வியில் முன்னேற்றம்

## முதலமைச்சர் சந்திரகாந்தன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 13

''நாட்டில் யுத்தம் நிறைவடைந்துள்ளதால் கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் 9ஆம் நிலையிருந்த கல்வி, 2010ஆம் ஆண்டில் 6ஆம் நிலைக்கு முன்னேறியுள்ளது.''

- இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்வி அபிவிருத்திச் சபைச் சபையின் ஆதரவில் நேற்று முன்தினம் காலை, கல்லடி ஈ.டி.எஸ்.மண்டபத்தில் இடம்பெற்ற சாதனை படைத்த மாணவர் பாராட்டு விழாவில் அவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்வி அபிவிருத்திச் சபைத் தலைவர் கே.தேவசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திறமைமிக்க மாணவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மாகாண சபை உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள் உட்படப்பலர் கலந்துகொண்டனர்.

இங்கு தொடர்ந்துபேசிய முதலமைச்சர், நமது வளம் கல்வியே கல்வியால் மாத்திரமே நாம் இழந்த வளங்களைப் பெற முடியும். கல்வியில் முன்னேற முயற்சித்தல் அவசியமாகிறது. அதன்மூலம் நமது மாகாணம் கல்வித்துறையில் முன்னேற வாய்ப்புள்ளது - என்றார்.

பிரதிகல்விப் பணிப்பாளர் எஸ்.பாஸ்கரன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் டி.பிரசாந்தன், முதலமைச்சரின் ஊடக இணைப்பாளர் எஸ்.தேவராஜன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(ளி)

# அட்டாளைச் சேனையில் சனிக்கிழமைகளில் சந்தை

மட்டக்களப்பு, ஜூலை 13

அட்டாளைச்சேனை பிரதேச சபையும், வர்த்தக சங்கமும் இணைந்து அட்டாளைச் சேனையில் வாராந்த சந்தை நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன என அட்டாளைச் சேனை வர்த்தகர் சங்கச் செயலாளர் எம்.எஸ்.முகம்மட் இஸ்ஸதீன் தெரிவித்தார்.

அட்டாச்சேனை சந்தை சதுக்கத்தில் வாரத்தின் சனிக்கிழமைகளில் இந்த வாராந்த சந்தை இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாராந்த சந்தையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யும் வர்த்தகர் அனைவரும் தங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தற்காலிகக் கொட்டில்களில் வர்த்தகங்களை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யபட்டுள்ளன, உள்ளூர், வெளியூர் வியாபாரிகள் சனிக்கிழமை தோறும் இவ்வாராந்த சந்தையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள் - என்றும் தெரிவித்தார். (ளி)




# சுகாதார நிலையங்களை கையளிக்கத் தீர்மானம்

அம்பாறை, ஜூலை 13

கிழக்கு மாகாண சபையால் நிர்வகிக்கப்பட்டுவரும் பொலநறுவை மாவட்ட நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள சுகாதார நிலையங்களையும், வைத்தியசாலைகளையும் வட மத்திய மாகாண சபைக்கு கையளிப்பதற்கான தீர்மானத்தை கிழக்கு மாகாண சபை நிறைவேற்றியுள்ளது என மாகாண சபை அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை கூறினார்.

சிறிபுர மத்திய மருந்தகம், வெகர மத்திய மருந்தகம், கெகுலுவெல மத்திய மருந்தகம், சிறிபுர ஆயுர்வேத மத்திய மருந்தகம் ஆகியவையும், நுவரக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு, வெகரகல பொதுச் சுகாதாரப் பிரிவு ஆகியவையும் இவற்றில் கடமைபுரியும் ஆளணியினரையும் வடமத்திய மாகாண சபையிடம் கையளிப்பதற்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

26 ஆவது முதலமைச்சர் மாநாட்டிலேயே இதுதொடர்பான பிரேரணை ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது என்றும் மாகாண அமைச்சர் உது மாலெவ்வை மேலும் கூறினார்.

(ளி)

# உல்லை வைத்தியசாலையை தரம் உயர்த்த நடவடிக்கை

அம்பாறை, ஜூலை 13

பொத்துவில் உல்லை கிராமிய வைத்தியசாலையை தரம் உயர்த்துவதற்கான தீர்மானம் கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை கூறினார்.

அதேவேளை, கிழக்கு மாகாணத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 7 ஆயுர்வேத வைத்தியர்களை நியமிக்கவும் மாகாண சபை தீர்மானித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பெரும்போக அறுவடையின்போது, அறுவடை செய்யப்பட்டுள்ள பெருந்தொகையான நெல் விவசாயிகளிடம் கையிருப்பில் உள்ளது. அத்துடன், நெல்லின் விலைகளும் குறைவடைந்துள்ளன.விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவை விரைவுபடுத்துவதற்கான விசேட கூட்டத்தை மாகாண முதலமைச்சர் தலைமையில் நடத்துவதற்கும் இதில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மாகாண அமைச்சர்கள், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்கள், நெல் சந்தைப் படுத்தும் உயர் அதிகாரிகள், கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஆகியோர் உட்பட பல உயர் அதிகாரிகள் உத்தேசக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர். (ளி)

# கிழக்கில் இளைஞர், யுவதிகளுக்கு ஹோட்டல் கல்விப் பயிற்சி நெறி

மட்டக்களப்பு, ஜூலை 13

கிழக்கு மாகாணத்தில் வேலையற்ற, இளைஞர், யுவதிகள், பாடசாலையை விட்டு வெளியேறியவர்களுக்கு ஹோட்டல் கல்வி தொடர்பான பயிற்சி நெறிகளை வழங்க கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன், இது தொடர்பான விண்ணப்பங்களையும் கோரியுள்ளது.

சமையல்கலை, விடுதிபராமரிப்பு, உணவகம், மதுபானசாலை, வரவேற்பு ஆகியவை தொடர்பான பயிற்சி நெறிகளுக்காக ஜூலை 20ஆம் திகதிக்கு முன்னர், பணிப்பாளர், முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திணைக்களம், கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்க முடியும்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு பாடநெறி கட்டணம், சீருடைகள் என்பன இலவசமாக கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை திணைக்களத்தால் வழங்கப்படும்.

(ளி)

---

# லயன்களில் வாழும் பெருந்தோட்ட மக்களுக்கு அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 12,500 வீடுகள்

## அமைச்சர் ஆறுமுகன் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை13

பெருந்தோட்டப் பகுதிகளில் அபிவிருத்தியின்றி வாழ்ந்துவரும் சுமார் பத்து லட்சம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவுள்ளோம்.

அதன் ஒரு கட்டமாக எனது அமைச்சு அடுத்துவரும் ஐந்தாண்டுகளில் 12 ஆயிரத்து 500 வீடுகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது என அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் 2010, ஏப்ரல் 30ஆம்திகதி நிறுவப்பட்ட புதிய அமைச்சாகும்.

இப்புதிய அமைச்சு கால்நடை அபிவிருத்தி, இளைஞர் வலுவூட்டலும் பொருளாதார அபிவிருத்தியும், சமூக அபிவிருத்தி மற்றும் சமூக அநீதி ஒழிப்பு ஆகிய மூன்று அமைச்சுகளின் தொழிற்பாடுகளை ஒன்றிணைத்தே உருவாக்கப்பட்டுள்ளது.

கிராமிய அபிவிருத்தியில் தற்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, மகநெகும மற்றும் ஜனசபா கருத்திட்டங்களுடன் இணைந்து ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை அமைச்சு உருவாக்கியுள்ளது.

இத்திட்டம், மிகவும் பின்தங்கிய பகுதிகளை இனங்காணல் மற்றும் அபிவிருத்தியின் மத்திய நிலையமாக வருடாந்தம் 100 கிராமங்களையும், தோட்டங்களையும் மாற்றுவதற்கான திட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் பொருட்டு, அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல், மின்சாரம் வழங்கல், குடிதண்ணீர் மற்றும் நீர்ப்பா சனம் உள்ளிட்ட நீர் வழங்கல், பொது அபிவிருத்தி ஆகியனவும் இத்திட்டத்தில் அடங்கும்.

ஆகக் குறைந்த பட்ச வசதிகள்கூட இன்றி, லயன்களில் வாழும் மக்களுக்கு தனித்தனி வீடுகள் வழங்கவேண்டும்.

மொத்தம் சுமார் இரண்டு லட்சம் வீடுகள் கட்டப்படவேண்டும். இதுவரை 35,000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட வீடமைப்பு நம்பிக்கை நிதியத்தினதும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினதும் திட்டங்களின் ஊடாக ஆயிரத்து 680 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றை 2010 ஆம் ஆண்டுக்குள் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எனது அமைச்சானது அடுத்த ஐந்து ஆண்டுகளில் 12,500 வீடுகளை அமைக் கத் திட்டமிட்டுள்ளது.

தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையமானது கிராமிய பெருந்தோட்ட இளைஞர் சமுதாயத்தின் வர்த்தகத்துறை ஆற்றல்களை விருத்தி செய்வதன் பொருட்டு 14 பயிற்சி நெறிகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. இப்படி அமைச்சர் ஆறுமுகன் தனது நாடாளுமன்ற உரையில் தெரிவித்தார். (ளி)


# குண்டசாலை மஹவத்தைப் பகுதியில் வீதியைப் புனரமைக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 13

குண்டசாலை - மஹவத்தைப் பகுதியை அண்மித்த பல பாதைகளில் இடையிடையே காணப்படும் பாரிய குழிகளால் தாம் பலத்த அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் எனப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதிகளில் வாகனங்களைச் செலுத்திச் செல்வதிலும் பலத்த சிரமம் ஏற்படுகின்றது என வாகனச்சாரதிகளும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பாதைகளைச் செப்பனிட்டுத் தரவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)




# மாத்தளை மாவட்டத்தில் உபஉணவுப் பயிர்ச்செய்கை

மாத்தளை, ஜூலை 13

மாத்தளை மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு மாகாண விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தில் 300 ஏக்கர் நிலத்தில் சோளமும், 95 ஏக்கரில் நிலக் கடலையும், 80 ஏக்கரில் மிளகாய் உற்பத்தியும், 78 ஏக்கரில் பெரிய வெங்காய உற்பத்தியும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

இதற்கு மாகாண விவசாய அமைச்சு 15 லட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது என்றும் கூறப்பட்டது. (ளி)

# அரசியல்வாதியின் வீட்டில் பதுக்கப்பட்டிருந்த சந்தனக் கட்டைகள் மீட்பு: மூவர் கைது

கொழும்பு, ஜூலை 13

பதுளையில் அரசியல்வாதி எனக் கருதப்படும் ஒருவரின் வீட்டில் பதுக்கி வைக்கப் பட்டிருந்த சந்தன மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன எனப் பதுளைப் பொலிஸார் தெரி வித்தனர்.

அத்துடன் சந்தேகத்தின் பேரில் அங்கிருந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்.

இச்சம்பவங்கள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளன.

இவை குறித்து மேலும் தெரிவிக்கப் பட்டவை வருமாறு:-

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய குறித்த அரசியல்வாதியின் வீடு முற்றுகையிடப்பட்டு சந்தன மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

அவற்றின் பெறுமதி சுமார் ஐந்து லட்சம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மரக்குற்றிகள் துன்கிந்த, நீர்வீழ்ச்சிப் பகுதி, அரச வனவளத் திணைக்களத்திற்குச் சொந்தமான வனப்பகுதிகள், புனித பூமிப்பகுதி கள் ஆகிய இடங்களிலிருந்து சட்டவிரோத மாகத் தறிக்கப்பட்டவை.இந்த மரக்குற்றிகள் கொழும்பு மற்றும் கண்டி போன்ற இடங்களுக்கு விற்பனைக்காகக் கொண்டு செல்லப்படவிருந்தவை.இந்த நடவடிக்கை மிக நீண்டகாலமாகவே இரகசியமாக இடம் பெற்றுவந்துள்ளது - என்று பொலிஸா ரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

சந்தேகத்தின்பேரில் கைது செய்யப் பட்ட வர்களில் இருவர் சந்தன மரக்குற்றிகளைக் கொள்வனவு செய்ய வந்தவர்கள்.

அவர்கள் கண்டி, கொழும்பைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பாக் பதுளை பொலிஸார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

(ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.எஸ்.பி. சலுகை நிபந்தனைகளில் எந்தவிதமான மாற்றமும் இல்லை

## ஐரோப்பிய ஒன்றியம் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 13

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் இல்லை - என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைத் தூதர் பேர்னாட் சாவேஜ் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸை சந்தித்த பின்னரேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீளப்பெறுவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச்சு நடத்த இலங்கை அரசுக்குத் தொடர்ந்தும் வாய்ப்பிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்துக்கும், அரசுக்கும் பொதுவான வகையில் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறை ஒன்று குறித்து ஆராயப்படும் என இந்தச் சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருந்த நிபந்தனைகளில் சில, பாதுகாப்பு சம்பந்தப்பட்டதாகக் காணப்படுகின்ற நிலையில், அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அவற்றுள் மீள்குடியேற்றம் உள்ளிட்ட சில நிபந்தனைகள் தற்போதும் அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் விளக்கமளித்துள்ளார்.

எதிர்காலத்தில் சலுகைத் திட்டத்தைப் பெற்றுக்கொள்வது குறித்து, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தால் முன்வைக்கப்படும் ஆக்கபூர்வமான யோசனைத் திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று இலங்கை அறிவித்துள்ளது.

இலங்கையின் இறைமைக்குக் குந்தகம் ஏற்படாத யோசனைத் திட்டங்களை ஏற்றுக்கொள்ளத் தயார் என வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருத்தமற்ற நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த முடியாதென இலங்கை அரசு கடிதம் ஊடாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அறிவித்துள்ளது என்றும் அதில் கூறப்படுகிறது. (சி)

# ஜனாதிபதி மஹிந்தவின் தலையீட்டுக்கு மாலைதீவு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 13

மாலைதீவில் அரசியல் சுமுக நிலையை ஏற்படுத்துவது தொடர்பில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலையீட்டுக்கு எதிராக அந்தநாட்டு எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் மாலைதீவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அங்கு நிலவும் பிரச்சினைகளுக்கு அரசியல்ரீதியான முடிவுறுத்தலை வழங்க ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

இதன் பொருட்டே மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நசீட், மஹிந்த ராஜபக்ஷவை அழைத்திருந்தார்.

எனினும் இதற்கு தற்போது அந்த நாட்டில் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின், மாலைதீவு அரசியல் தலையீட்டுக்கு எதிராக நேற்று முன்தினம் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்படவிருந்தது.

எனினும் அது அங்கு நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக இன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அங்கிருந்த வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த மாலைதீவின் பிரதான எதிர்க்கட்சிகளின் தலைவர்களான, உமர் நசீர் மற்றும் அஹமட் ஆகியோர் உடனடியாக ஜனாதிபதி மொஹமட் நசீட் பதவி விலகவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். (சி)

# வாசகர் திருமுகம்

## கைதடியில் கண்சிமிட்டும் மின்விளக்குகள்

யாழ். குடாநாட்டிலும் மின்சாரசபை மக்களிக்கு மகத்தான சேவையாற்றி வருகின்றபோதிலும், மின்விநியோகத்தில் கடந்த பல நாள்களாக (மாதங்களாக) ஓர் சீரின்மையை அவதானிக்க முடிகின்றது.

கடந்த பல நாள்களாக கைதடி உட்பட தென்மராட்சியின் பல பகுதிகளில் மின்விநியோகத்தில் சீரற்ற நிலை இருப்பதாக அறிய முடிகின்றது. இதனை எழுதும் நோக்கம் சம்மந்தப்பட்டவர்களைக் குறை கூறுவதற்காக அல்ல, உங்கள் தரப்பிலும் ஏதாவது காரணங்கள் இருக்கலாம் அல்லது இப்படியான சிறு பிள்ளைத்தனமான மின்விநியோகம் இடம்பெறாது.

குறித்த நேர இடைவெளியில் மின்பாவனை அதிகமென்றால் அதனை மக்களுக்குத் தெரியப்படுத்தி குறித்த தினங்களில், குறிப்பிட்ட பிரதேசங்களில் மின்விநியோகம் குறித்த சில நேர இடைவெளியில் மின் தடைப்படும் என்று ஓர் ஒழுங்குமுறையில் கடைப்பிடித்தால் கூட மக்கள் தமது செயற்பாடுகளை அந்த அறிவிப்பிற்கேற்ப மேற்கொள்ள முடியும்.

இந்தச் சீரற்ற மின்விநியோகத்தினால் மக்கள்படும் சிரமங்களோ பற்பல. குறிப்பாக தேசியரீதியாக நடைபெறவுள்ள இரண்டு முக்கியமான ஜி.சீ.ஈ உ/த, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை என்பன நடைபெறுவதற்கு ஏறக்குறைய ஒரு மாதகாலமே உள்ளது. பெரும்பாலும் மின்வெளிச்சத்தில் கற்றுவந்த மாணவர்களுக்கு இந்த முன் அறிவித்தலற்ற, ஒழுங்குமுறையற்ற மின் வெட்டானது மாணவர்களின் இறுதிநேர துரிதமான நீண்ட நேர கற்றலுக்கும் மீட்டலிற்கும் பெரிதும் இடையூறாகவே உள்ளது. இது நாம் எழுதித்தான் தெரிய வேண்டும் என்பது அல்ல. இது பற்றி இப்பகுதியில் பல தடவைகள் செய்திகள் வந்து விட்டன. நோயாளிகள், முதியவர்கள் எனப் பலருமே பாதிப்படைகின்றனர். குறிப்பிட்ட நேரம் மின்தடைப்படும் என முன்பே தெரிந்திருப்பின் மாணவச் செல்வங்களும், பெற்றோரும், வழி நடத்துவோரும் தமது செயற்பாடுகளை அதற்கேற்ப ஒழுங்குமுறையில் தயார்படுத்த உதவியாக இருக்கும். கைதடியில் ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் இரவு 7 மணியிலிருந்து இரவு ஒன்பது மணி வரைக்குள் இரண்டு அல்லது மூன்று தடவைகள் ஒழுங்கு முறையின்றி மின் தடைப்படுகின்றது. இதன் காரணம் தான் என்ன? நடைமுறையில் உங்கள் பக்கத்திலும் சிரமங்கள் இருக்கக்கூடும். அதை மக்களிற்கு தெரியப்படுத்துவதும் நல்லதே.

எனினும் அனைத்து வசதிகளும் படிப்படியாகச் சீரடைந்து வருகின்ற இக்கால கட்டத்திலே மின்விநியோகமும் யாழ். குடாவில் சிறப்பாக அமைவதற்கு தொடர்புடைய உயர் அதிகாரிகள் சீரிய கவனம் மிகவிரைவில் எடுப்பார்கள். பிரதேசங்கள் எங்கும் சிறப்பான மின்விநியோகம் எல்லோருக்கும் கிடைப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்வார்கள் என்று எதிர்பார்ப்போம்.

கைதடி. அம்பலநாதன்

## இந்த மாணவர்கள் பற்றியும் சிந்திப்பார்களா?

ஜி.சீ.ஈ உயர்தரம் பரீட்சையில் பெருமளவு எண்ணிக்கையில் மாண வர்கள் சித்தியடைந்தாலும் குறைந்த எண்ணிக்கையினரே பல்கலைக்கழகம் செல்ல முடிகிறது. இதனால் அதிகளவு மாணவர்கள் வேறு நிறுவனங்களில் தமக்குரிய பட்டச் சான்றிதழுக்கான கற்கை நெறியைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை, அந்தவகையில் மாணவருக்கு உதவி வழங்கும் நிறுவனம் உயர் தொழில் நுட்ப நிறுவனம் என்றே சொல்லாம். (SLIATE) இது பல்வேறு வகையான கற்கை நெறிகளைக் கொண்டுள்ளது.

உதாரணமாக உயர் தேசிய கணக்கியல் கற்கை நெறியை (HNDA) தெரிவு செய்தால் இந்தக் கற்கைநெறி நான்கு வருட கால கற்கைநெறி ஆகும். அதில் முதலாம், 2 ஆம் வருடங்கள் தமிழ் மொழியிலும் திங்கள் தொடக்கம் வெள்ளிக் கிழமை வரைக்கும், 3ஆம், 4ஆம் வருடங்கள் ஆங்கில மொழியிலும் சனி, ஞாயிறுகிழமைகளிலும் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன.

ஆனால் இதுவரை காலமும் தொழில் வாய்ப்புப் பெற்றுக் கூட தமது கற்கை நெறியைத் தொடரக்கூடிய நிலைமை இருந்தது. ஆனால் 4ஆம் வருடத்தில் கற்கைநெறியைத் தொடரும் மாணவர்கள் தொழில் வாய்ப்புக் கிடைத்ததும் அவர்களது கற்கை நெறியைத் தொடர முடிவதில்லை. இதனால் அவர்கள் முதல் அரையாண்டு, இறுதியாண்டு பரீட்சைகளில் தவறுவதனால் அவர்கள் தமக்குரிய பட்டச் சான்றிதழைப் பெற முடியாதுள்ளது.

எனவே அவர்கள் செலவு செய்த 3 வருடங்கள் எதுவித பயனும் இல்லாமல் செலவழிக்கப்பட்டு விடுகின்றன. இதனை மனித நேயம் படைத்தவர்கள் சிந்திக்க மாட்டார்களா? மாணவர்களுக்கு நியாயம் கிடைக்காதா?

பாதிக்கப்பட்ட மாணவர் சார்பில்,
யாழ்ப்பாணம். தி.கௌரி

# 2011 இற்கு முன்னர் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையே எமது இலக்கு

## தமிழ்க் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

மோதல்களால் இடம்பெயர்ந்த மக்களிடையில் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர், இயல்பு வாழ்கையை ஏற்படுத்த வேண்டும் என்பதே தமது இலக்கு - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த நோக்கத்துக்காக எதிர்வரும் ஒரு வருட காலத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீவிரமாகச் செயற்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகும் வேளையில், அதனால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்புவாழ்கை மீளப் பெறப்பட்டிருக்க வேண்டும் என தாம் கருதுகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தேவை ஏற்படும் பட்சத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் அரசியல் தீர்வு மற்றும் மீள் குடியேற்றங்கள் குறித்து, இந்திய மற்றும் இலங்கை அரசுகளுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களிலும் கூட்டமைப்பு ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# நிபுணர் குழு விடயத்தில் அணிசேரா நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறும் முனைப்பில் இலங்கை

கொழும்பு, ஜூலை 13

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழுவை கலைப்பதற்கு அணி சேரா நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவை கலைப்பதற்கு அணி சேரா நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இந்தக் கடிதத்தின் ஊடாக எதிர்பார்த்தளவு வெற்றி கிட்டவில்லை எனவும், இதனால் இலங்கை அரசு மீண்டும் அணி சேரா நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் முனைப்புகளில் ஈடுபட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.

அமைப்பில் அங்கம் வகிக்கும் 118 உறுப்பு நாடுகளையும் இணைத்துக் கொண்டு ஐக்கிய நாடுகளின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க அரசு முயற்சி மேற்கொண்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை, மனித உரிமை பேரவை மற்றும் இலங்கையின் அனுமதியின்றி நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது என அணி சேரா நாடுகள் குற்றம் சுமத்தியிருந்தன.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிபுணர்கள் குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளியிடுமாறு அணிசேரா நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளிடம் இலங்கை மீண்டும் கடிதம் ஊடாகக் கோரியுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# சார்க் பொலிஸ் பிரிவு விரைவில் இந்தியத் தகவல்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

சார்க் பொலிஸ் படைப்பிரிவு விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது என இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச பொலிஸ் சேவையான இன்டர்போலின் அமைப்பை ஒத்த பொலிஸ் படையொன்று உருவாக்கப்பட உள்ளது.

'சார்க்போல்' என்ற பெயரில் இந்தக் பொலிஸ் துறை சேவை உருவாக்கப்பட உள்ளது எனவும், எல்லைகடந்த குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் 8 நாடுகள் இந்தப் பொலிஸ் துறைச் சேவையில் அங்கம் வகிக்க உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்ற சார்க் உள்துறை அமைச்சர்களின் மாநாட்டின்போது பிராந்திய பொலிஸ்துறை அமைப்பது குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஞானம்

ஓர் ஊரிலே ஒரு ராஜா இருந்தார்.அந்த ராஜாவுக்கு ஒரு ராணி இருந்தார். அவர்கள் அரண்மனைக்கு பெரிய பெரிய ஞானிகள் எல்லோரும் வருவது வழக்கம். அவர்களுடைய உபதேசங்களையெல்லாம் அந்த ராணி தொடர்ந்துகேட்டுக்கொண்டிருந்தார். அதனுடைய விளைவு,

அவரும் ஒரு ஞானி ஆகிவிட்டார். ஞானியாக மட்டும் இல்லை தன்னுடைய உருவத்தையும் மாற்றிக்கொண்டு ஆகாயத்திலே பறக்கும் சித்தியும் அவருக்கு கிடைத்தது.

ராஜா பார்த்தார். உடனே ராணியிடம் போனார். ''இதோ பார்! நானும் உன்னை மாதிரி ஞானி ஆக வேணும்... எனக்கு ஏதாவது உபதேசம் செய்ய'' என்று கேட்டார்.

''நீங்களும் ஞானியாக வேண்டும் என்றால்... எல்லாவற்றையும் துறப்பதற்குத் தயாரா இருக்க வேணும், எல்லாவற்றையும் எல்லாவற்றையும் விட்டு விடும் அளவுக்கு வைராக்கியம் இன்னும் உங்களுக்கு வரவில்லை...! என்றாள் ராணி!

'சரி' என்று பேசாமல் இருந்தார் ராஜா.

கொஞ்சம் காலம் சென்றது! அந்த ராஜா காட்டுக்குச் சென்று தவம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால் ராணிக்கு அதில் விருப்பம் இல்லை!

அதனால் அவர் சம்மதிக்கவில்லை.

ராஜா பார்த்தார்... அவருக்கு வேறு வழி தெரியாதா? அவர் சொல்லாமல் கொள்ளாமல் ஒரு நாள் இரவு புறப்பட்டு காட்டுக்குப் போய்விட்டார்.

ராணி பார்த்தாள். ஆகாயத்தில் பறக்கும் சக்தி அவளுக்கு ஏற்கனவே கிடைத்திருக்கு! இளம் முனிவர் மாதிரி தன்னுடைய உருவத்தை மாற்றிக் கொண்டார்!

காட்டுக்கு புறப்பட்டு பறந்து போனாள்...

ராஜா எங்கே இருக்கே இருக்கிறார் என்று தெரிந்தது. நேராக ராஜாவுக்கு முன்னாள் போய் இறங்கினார். இந்த இளம் முனிவர். அது தான் அந்த ராணி ராஜா தன் எதிரில் இளம் முனிவரைப் பார்த்தார் வணங்கினார்.

''நான் நிறைய காலம் தவம் செய்கிறேன் ஆனால் மன நிம்மதி எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. தாங்கள் தான் அருள் செய்ய வேண்டும்'' என்றார்.

அதற்கு அந்த இளம் முனிவர் ''எல்லாவற்றையும் துறக்க வேண்டும் என்று உங்கள் மனைவி ஒரு சமயம் உபதேசம் செய்தாளே! அதன் பிரகாரம் எல்லாவற்றையும் விட்டு விட்டீகளா? என்று கேட்டார். ''எல்லாத்தையும் விட்டுட்டேன். இன்னும் இந்த ஆச்சிரமத்தைத்தான் துறக்கவில்லை!'' என்று சொல்லிக் கொண்டே அந்த ராஜா ஆச்சிரமத்திலே இருந்த ஒவ்வொரு பொருளாக எடுத்து அக்கினியிலே போட்டார்.

''இப்போது போடுகிறீங்களே... இந்தப் பொருளெல்லாம் உங்களுக்குச் சொந்தம் இல்லையே...! இவையெல் லாம் பிரகிருதிக்கு அல்லவா சொந்தம்!'' என்றார் இளம் முனிவர். ''சரி... அப்படி என்றால் என்னுடைய உடம்பை நான் துறக்கிறேன்...'' என்றார் ராஜா.

இப்படிச் சொல்லிக் கொண்டு நெருப்பில் குதிக்கப் போனார். இளம் முனிவர் ராஜாவை உடனே தடுத்து நிறுத்தினார்.

''உடம்பும் உங்களுக்குச் சொந்தம் இல்லையே? அவையெல்லாம் பஞ்சபூதங்களுக்குச் சொந்தம்!'' என்றார்.

ராஜா யோசித்தார். ''அப்படி என்றால் எனக்கு என்னதான் சொந்தம்? என்று கேட்டார்.

''உங்க அகங்காரம்தான் உங்களுக்குச் சொந்தம் நீங்கள் துறக்க வேண்டியது அதைத்தான். அதை விடுங்கள் முதலிலே! அது உங்களிடம் இருக்கிறதாலேதான் இந்த உலகமே உங்களிடம் இருக்கிறதாக நினைக்கிறார்கள்! அகங்காரம் இருக்கிறதனாலேதான் இந்த உலகப் பொருள்கள் உங்களுக்குச் சொந்தம் என்று தோன்றுகிறது!'' அப்படி இளம் முனிவர் உருவத்திலே இருந்த ராணி சொன்னாள். உடனே, 'இதோ என்னிடம் இருக்கின்ற அகங்காரத்தை விட்டிட்டேன்! என்றார் ராஜா. அதற்குப்பிறகு தான் அந்த ராஜாவும் ஞானி ஆனார். ராணிக்கு கிடைத்த மாதிரியான சித்தி அவருக்கு கிடைத்தது.

*(சொன்னவர் :கோ.சுவாமிநாதன்.)*

# பூமி கருவறையா? கல்லறையா?

முல்லா நசுருதீன் ஊர் மக்கள் மத்தியில் இருக்கையில் அவ்வேளையில் வந்த பெரியவர் வணக்கம் தெரிவித்து அவருடன் அமர்ந்தார். முல்லாவின் காதில் ஏதோ சவால் விட்டார். முல்லா சிரித்துக் கொண்டு கொஞ்சநேரத்தில் சொல்கிறேன் என்றார். பின் பக்கத்தில் இருந்தவரைப் பார்த்து உழைக்காமல் பணக்காரர் ஆவது எப்படி என்ற யோசனை எனக்குத் தெரியும் எனக் கூறினார். கூட்டம் சேர்ந்து அவர் சொல்லும் யோசனையை கேட்க அமைதியாக இருந்தனர். முல்லா அப்பெரியவரைப் பார்த்து விட்டுச் செல்லும்போது கூட்டம் அலறியது. அப்போது முல்லா இப்பெரியவர் இவ்வூரில் எத்தனை முட்டாள் உள்ளனர் எனக் கேட்டார். அவ்விடைக்கு பதிலாக நீங்கள் கூட்டம் கூடினீர்கள் உழைக்காமல் பணக்காரனாக விரும்பும் எவனுமே அறிவாளி அல்ல முட்டாளே.

தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். லாட்டரி மக்கேட்டுக்களை நம்புவார்கள், சாமியார் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு ஏதாவது கொட்டிக் கொடுக்கும் என்று நம்பும் முட்டாள்கள் உழைக்காமல் முன்னேறமுடியாது. உழைக்காமல் மேலே வந்தவர்கள் ஒரு போதும் நிலைக்காது. புரிந்து கொள்ளுங்கள்.

உழைப்பு என்பது கல் உடைப்பது, உழுவது, கஸ்டப்பட்டு பாரம் சுமப்பது என்று பொருள் கொள்ள வேண்டாம். சினிமா, சீட்டு, சிட்டு, சிகரெட் என்கிற இளவயது இன்பங்களில் சேராமல் படிப்பது கூட உழைப்புத்தான்.

சிவாஜி எழுதிய நாடகத்தில் அதாவது 'இந்து சாம்ராட்சியம்'' என்பதில் தி.மு.க மாநாட்டில் அது நடக்க வேண்டும்.... எம்.ஜி.ஆர். கதாநாயகனாக பாராட்டிய மன்னன் வீர சிவாஜியாக நடிக்க வேண்டும். இதில் எம்.ஜி.ஆர்... மறுத்து விட்டார்.

இதனை அறிஞர் அண்ணாவிடம் இதை தெரிவித்து திரும்பும் போது கணேசன் கண்ணில் பட்டார்.''கணேசா நீ நடிக்கிறாயா'' என்றார் அண்ணா? அண்ணா நான் ரொம்பச் சின்னவன் என்று கணேசன் கூறினார். இந்தா சிவாஜி வசனம் நீ படிச்சுவை கேள்வி கேட்பேன் என்று கூறிவிட்டுச் சென்றார்.

அண்ணா திரும்பியதும் ஆச்சர்யம் காத்திருந்தது. அண்ணாவை இருக்க வச்சிட்டு கணேசன் சிவாஜியாக நடிக்க ஆரம்பித்தார். முழு வசனமும் மனப்பாடம் பண்ணியது போல இருந்தது. நம்ப முடிகிறதா. அதனால்தான் பின்னாளில் நாடகத்தை பார்த்து விட்டு பரபரப்பாக மேடை ஏறி வந்த தந்தை பெரியார் - யாரப்பா அந்தப் பையன் என்னமா நடிக்கிறான். என்று புகழ்ந்தபோது ''கணேசன்'' என்று அண்ணா அறிமுகஞ் செய்தார். கணேசன் அல்ல அவன் சிவாஜி கணேசன் என்ற பெயர் சூட்டப்பட்டது.

வசிட்டர் தமிழர் மகரிஷி தந்தை பெரியார் எட்டு மணிக்கே மேக்கப்புடன் தயாராக இருப்பார். பித்தோவன் என்ற இசை மேதை நாளைக்கு பதிநான்கு மணி நேரம் பயிற்சி செய்வார். எம்.எஸ். சுப்புலட்சுமி ஒரு பாடல் மேடையில் பாடும் முன்னர் பலநூறு முறை பயிற்சி மேற்கொள்வார். காந்தி அடிகள் நாளுக்கு பல மணி நேரம் உழைத்து சில மணி நேரம் ஓய்வெடுப்பார். காமராயரும் அப்படியே.

உலகம் மண்தான். ஆனால் அது உழைப்பவர்களுக்கு வயல் உழைக்க மறுப்பவருக்கு சுடுகாடு, பாடுபடுபவருக்கு கருவறை, பாடுபாடதவருக்கு கல்லறை இவ் உலகத்தை கல்லறையாக பயன்படுத்துவதா? கருவறையாக பயன்படுத்துவதா? மூடி வையுங்கள்.

*(சுகி சிவம்).*

# பெட்டியின் பெருமை



''எங்கே சார் ஓடுகிறீர்கள்?'' '' என் பெட்டியை ஒருவன் தூக்கிக் கொண்டு ஓடுகிறான்!'' ''நானும் உங்களுக்கு உதவி செய்யட்டுமா '' '' நீங்கள் எப்படி உதவி செய்ய முடியும்?'' ''உங்களுக்கு ஒத்தாசையா நானும் கொஞ்ச தூரம் உங்களுடன் ஓடிவர முடியும்'' இரண்டு பேரும் சேர்ந்து ஓடலாம் என்கிறீர்களா?'' ''ஆமாம்!'' ''சரி... வாங்கோ!'' '' இன்னும் கொஞ்ச நாளிலே திருட முடியாத பெட்டியெல்லாம் வரப்போவது தெரியுமா?'' '' அது எப்படி'' நீங்கள் ஒரு பெட்டிக்குள்ளே பணத்தை வைத்து எடுத்துக் கொண்டு போகிறீர்கள். அந்த சமயம் ஒருவன் வந்து அதைத் தட்டிப் பறித்துக்கொண்டு ஓடுகிறான். நீங்கள் கவலையே பட வேண்டாம்!''

''அது எப்படி கவலைப்படாமல் இருக்க முடியும்?'' '' உங்கள் கையிலேதான் ரிமோட் கண்ட்ரோல் இருக்குமே...!'' ''அது

என்ன

செய்யும்?'' '' நீங்கள் அதை அழுத்தினால் போதும் அவ்வளவுதான்...!'' '' என்ன ஆகும்...?'' '' திருடன் கையிலே

இருக்கின்ற பெட்டியிலே

மின்சாரம் உற்பத்தி யாகி 'ஷாக்' அடிக்க ஆரம்பித்து விடும்!''

''ஐயோ.... அப்போது ?'' ''

அதிகப்படியான அந்த மின்சார அதிர்ச்சியைத் தாங்க முடியாது. திருடன் பெட்டியை உதறி எறிந்து விட்டு ஓடியே போய் விடுவான். நீங்கள் சாவகசமாக நடந்து போய் பெட்டியை எடுத்துக்கொள்ளலாம்!'' ''பரவாயில்லையே...!'' '' அது சரி... இப்பொழுது உங்கள் பெட்டியை அவன் தூக் கிக் கொண்டு ஓடுகிறானே... அந்தப் பெட்டியிலே பணம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா?'' ''அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. அது வெற்றுப் பெட்டிதான்.. அதுவும் அதிகம் பழையது. நான்கு பக்கமும் ஓட்டை...!'' ''அப்படி என்றால் விடுங்கள்.. அதுபோனால் போகட்டும்!''

'' நான் அந்தப் பெட்டியைத் திருப்பி வாங்கிவருவதற்காக ஓடவில்லை...!'' '' பின்னே ...?'' '' அந்தப் பெட்டியினுடைய சாவி... இதோ என் கையிலே இருக்கிறது. இதையும் அவனிடம் கொடுத்து விடலாம் என்பதற்காகத்தான் ஓடுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# வணிகக் கல்வி | பகுதி - I

## SPECIAL GUIDE FOR 2010 A/L COMMERCE STUDENTS

* 01-20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகப்பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்க.

01. மூன்றாந்தர உற்பத்தி தொடர்பான சரியான கருத்தைத் தெரிவுசெய்க.
   1) மனித தேவைகளுக்காக இயற்கை வளங்களைப் பிரித்தெடுத்தல்.
   2) இயற்கை வளங்களைக்கொண்டு முடிவுப்பொருட்களை உற்பத்திசெய்தல்.
   3) சிறிய அளவில் மேற்கொள்ளும் உற்பத்தியாகும்.
   4) வர்த்தகச் சேவைகளையும், நேர்ச்சேவைகளையும் உள்ளடக்கியது.
   5) மூலப்பொருட்களையும், முடிவுப்பொருட்களையும், குறைவேலைகளையும் உற்பத்தி செய்தல்.

02. கைத்தொழிற் பொருட்களின் பிரதான வகைகளைக்கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க.
   1) நீண்டகாலத் தன்மையுள்ள பொருட்கள், குறுங்காலத் தன்மையுள்ள பொருட்கள்.
   2) திடமான பொருட்களும், திடமற்ற பொருட்களும், சேவைகளும்.
   3) மூலப்பொருட்கள், முதலீட்டுப்பொருட்கள், உதிரிப்பாகங்கள்.
   4) முடிவுப்பொருட்கள், இயந்திரங்கள், கருவிகள், சேவைகள்.
   5) வசதிப்பண்டங்கள், விசேடப்பண்டங்கள், கடையில் உள்ள பண்டங்கள், நாடாப் பண்டங்கள்.

03. வணிகங்கள் வெற்றியடைவதற்கு மிகவும் இன்றியமையாத அம்சம்,
   1) பேரளவு மூலதனம்.
   2) நம்பிக்கையான ஊழியர்கள்.
   3) இலாபத்தை உச்சப்படுத்துதல்.
   4) சந்தையில் நிலைத்திருத்தல்.
   5) வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துதல்.

04. பின்வருவனவற்றுள் சேவை ஒன்றின் விருப்பியல்பாக அமையாதது எது?
   1) களஞ்சியப்படுத்த முடியாமை.   2) பிரிக்க முடியாதது.
   3) தொட்டுணரமுடியாத தன்மை.
   4) நீடித்து உழைக்கும் தன்மை.
   5) வேறுபடும் தன்மை.

05. மீன்பிடித்தொழில், காட்டுத்தொழில், விவசாயம், சுரங்கத்தொழில் போன்றவற்றை உள்ளடக்கும் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பெயர்,
   1) மூன்றாம் நிலை உற்பத்தி.   2) கைத்தொழில் உற்பத்தி.
   3) முதனிலை உற்பத்தி.   4) விவசாய உற்பத்தி.
   5) இரண்டாம் நிலை உற்பத்தி.

06. இலங்கையில் தனியார்துறை வணிக அமைப்பைக்கொண்ட சரியான தொகுதியைத் தெரிவுசெய்க.
   1) கம்பனிகள், கூட்டுறவு, திணைக்களம், கூட்டுத்தாபனம்.
   2) தனியாள் வியாபாரம், பங்குடைமை, கூட்டுத்தாபனம், சபை.
   3) பங்குடைமை வியாபாரம், கூட்டுமுயற்சி, அரச கம்பனிகள்.
   4) வரையறுத்த கம்பனிகள், தனியாள் வணிகம், பங்குடைமை, கூட்டுறவு.
   5) கூட்டுறவு, கூட்டுத்தாபனம், கம்பனிகள், சபைகள், அங்கீகார வணிகம்.

07. வணிகம் ஒன்றைப் பதிவுசெய்தல் இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. அத்தகைய இரண்டுத் தொகுதிகளையும் தெரிவுசெய்க.
   1) சட்ட ஆளுமையுள்ள நிறுவனம் ஆக்குதல், நிலைத்திருத்தல்.
   2) வியாபாரத்தைப் பதிவுசெய்தல், சட்டரீதியாக்குதல்.
   3) வணிகப் பெயரைப் பதிவுசெய்தல், வணிகத்தைச் சட்டபூர்வமாக்குவதற்குப் பதிவு செய்தல்.
   4) உரிமையாளர்களின் பெயரைப் பதிவுசெய்தல், வணிகத்தைப் பதிவுசெய்தல்.
   5) பொறுப்புக்களை வரையறுப்பதற்கும், சட்ட ஆளுமையுள்ள அமைப்பாக மாற்றுவதற்கும்.

08. வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்று அதன் பதிவிற்காக கம்பனிப் பதிவாளருக்கு சமர்ப்பிக்க தேவையற்ற ஆவணம் எது?
   1) கம்பனி அமைப்பு அகவிதி.
   2) இயக்குநராகக் கடமையாற்றுவதற்கான சம்மதக் கடிதம்.
   3) செயலாளராகக் கடமையாற்றுவதற்கான சம்மதக் கடிதம்.
   4) கம்பனி அமைப்பு புறவிதி.   5) விண்ணப்பப்படிவம்.

09. தனது பெயரின் இறுதியில் வரையறுத்த என்ற பதத்தைப் பயன்படுத்த அவசியமற்ற கம்பனி எது?
   1) தனியார் கம்பனிகள்.   2) மக்கள் கம்பனிகள்.
   3) பொதுக்கம்பனிகள்.   4) கரைகடந்த கம்பனிகள்.
   5) அறநெறிக்கம்பனிகள்.

10. சாரதி பயிற்சி பாடசாலை ஒன்றை நிறுவுவதற்கு அனுமதிபெறவேண்டிய அமைப்பைத் தெரிவுசெய்க.
   1) உள்ளூராட்சி மன்றங்கள்.
   2) இலங்கை போக்குவரத்து சபை.   3) போக்குவரத்து அமைச்சு.
   4) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்.
   5) தனியார் போக்குவரத்து அமைச்சு.

11. பங்குதாரர் பொதுக்கூட்டத்திற்கு சமுகமளிக்காதபோது பொதுக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு வாய்ப்பளித்து வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்,
   1) ஆண்டறிக்கை.   2) கூட்டப்பிரதி.
   3) பொதுக்கூட்ட பங்குபற்றல் பத்திரம்.   4) பங்காணைப் பத்திரம்.
   5) பெருத்தினாசிப்பத்திரம்.

12. ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கான அழைப்பு அனுப்பவேண்டிய கால எல்லை,
   1) 10 வேலை நாட்களுக்கு முன்னர்.
   2) 20 வேலை நாட்களுக்கு முன்னர்
   3) 15 வேலை நாட்களுக்கு முன்னர்.
   4) 25 வேலை நாட்களுக்கு முன்னர்.
   5) 30 வேலை நாட்களுக்கு முன்னர்.

13. இலங்கை முதலீட்டுச்சபையின் பிரதான குறிக்கோள்,
   1) வரிச்சலுகைகளை வழங்குதல்.
   2) முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை நிர்வகித்தல்.
   3) வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான அங்கீகாரத்தை வழங்குதல்.
   4) முதலீட்டாளர்களுக்கான தகவல்களையும், ஆலோசனைகளையும் வழங்குதல்.
   5) கைத்தொழில் பேட்டையை நிர்வகித்தலும், ஆலோசனையை வழங்கலும்.

14. கூட்டுறவுச்சங்கம் தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.
   1) கணக்காய்வுக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றது.
   2) அங்கத்தவர்களின் இழிவு எண்ணிக்கை 10 ஆகும்.
   3) பங்கு ஒன்றின் பெறுமதி 10 ரூபா ஆகும்.
   4) முகாமை இயக்குநர்சபையால் நிர்வகிக்கப்படும்.
   5) இலாபம் பொதுசேவையை வழங்குவதற்கு பயன்படுத்தப்படும்.

15. அரச திணைக்களத்தின் கணக்குகளைப் பரிசீலனை செய்வதற்கு தகுதியுடையவர்,
   1) பங்குதாரர்களால் தெரிவுசெய்யப்பட்ட கணக்காய்வாளர்.
   2) பட்டயக் கணக்காளர் நாயகம்.
   3) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்.
   4) திணைக்கள ஆணையாளர்.
   5) அரச கணக்காய்வாளர் நாயகம்.

16. அங்கீகார வணிகத்தில் அங்கீகாரம் பெறுபவர் அங்கீகாரமளித்தவர்களுக்கு அங்கீகார உரிமைக்காக வழங்கப்படும் கட்டணம்,
   1) வாடகையாகும்.
   2) தனியுரிமைக் கட்டணமாகும்.   3) இறையாகும்.
   4) ஒப்புறுதித்தரகாகும்.   5) கட்டணமாகும்.

17. பின்வருவனவற்றுள் எது உத்தரவுபெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி ஒன்று வாடிக்கையாளர்களுக்கு ஆற்றும் தொழிற்பாடு அன்று,
   1) குத்தகைக்கு விடல்.
   2) வெளிநாட்டு நாணயமாற்று கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுதல்.
   3) சேமிப்பு வைப்புக்களை எற்றுக்கொள்ளுதல்.
   4) கடன் வழங்குதல்.
   5) நிலையான வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல்.

18. வங்கியினால் கொடுப்பனவுக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட காசோலை பின்வருவனவற்றில் எவ்வாறு அழைக்கப்படும்?
   1) குறுக்குக் கோடிட்ட காசோலை.   2) காவியின் காசோலை.
   3) அடையாளமிடப்பட்ட காசோலை.   4) அரச காசோலை.
   5) பணத்தொகை குறிப்பிடப்பட்ட காசோலை.

19. போக்குவரத்து முறைமையின் ஓர் அம்சமாக கருதக்கூடியது,
   1) பாதுகாப்பு.   2) விரைவு.   3) சொகுசு.
   4) ஊடகம்.   5) இயலளவு.

20. பின்வருவனவற்றுள் காப்புறுதித் தத்துவம் ஒன்றாகக் கருதமுடியாதது எது?
   1) காப்புறுதி செய்தகு உரிமை.
   2) உயர் நம்பிக்கைத் தத்துவம்.
   3) செலுத்தி முடிந்த ஆயுள் உறுதி.
   4) பதிலாள் வைப்பு.   5) இழப்பீட்டு உரிமை.

* 21-30 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான சொற்களை வெற்றிடங்களில் எழுதுக.

21. குறிப்பிட்ட சங்கம் அல்லது கம்பனி பதிவுசெய்யப்பட்டது என அச்சங்கத்திற்கு அல்லது கம்பனிக்கு வழங்கும் சான்று ................................ எனப்படும்.

22. கம்பனிக்கும், கம்பனிப் பதிவாளர் காரியாலயத்திற்கும் இடையில் தொடர்புக் கருமங்களை மேற்கொள்வதற்கு நியமனம் செய்யப்பட்டவர் ..................... ஆவார்.

23. வணிக நடவடிக்கையின்போது குறித்த சில நிலைமைகளில் சரியான நடவடிக்கைகளையும், பிழையான நடவடிக்கைகளையும் இனம் காண உதவுபவை ................. ஆகும்.

24. பங்குடைமையில் மூலதனத்தை ஈடுபடுத்தி இலாபநட்டத்தில் பங்கேற்று மக்கள் அறிந்திராத பங்காளர் ........................................ என அழைக்கப்படுவார்.

25. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆவணங்கள், செய்திகள், பொதிகள் என்பவற்றைப் பாதுகாப்பாக அனுப்பும்முறை ........................................ என அழைக்கப்படும்.

26. விமானத்தளங்களை அமைத்தல், பராமரித்தல், பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், தீர்வையற்ற கடைத்தொகுதிகளை நிர்ணயித்தல் ஆகிய தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் நிறுவனம் ................................ ஆகும்.

27. நீண்டகால நிதித்தேவைக்காக நடைமுறைக்கணக்கை பேணும் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய இலகு நிபந்தனை நிதி மூலம் ........................... ஆகும்.

28. கப்பல் மாநாடுகளில் பங்குபற்றல், நேர அட்டவணையை வழங்கல், கப்பல் தகவல் வழங்குதல் ஆகிய பணிகளில் ஈடுபடும் நிறுவனம் ......................... ஆகும்.

29. ஒரே வகையான தொழிலாளர்களை ஒன்றுசேர்த்து ஒரு தொகுதியாக மேற்கொள்ளப்படும் காப்புறுதித்திட்டம் .............................. எனப்படும்.

30. ஒரு வங்கியின் கிளை, அதே வங்கியின் வேறொரு கிளையூடாக அல்லது வேறொரு வங்கியிலுள்ள ஒரு கணக்கினூடாக நேரடியாக பணக்கொடுப்பனவு செய்யும்முறை .............................. எனப்படும்.

..............................................................................................................

..............................................................................................................

(13 ஆம் பக்கம் பார்க்க....)

ஆசிரியர்: திரு.R.திருச்செல்வம்,
ப/சரஸ்வதி தேசிய பாடசாலை, பதுளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ 31-40 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

31. அரசகரும செலாவணி என்பதை விளக்குக. (Official Exchange Rate)

32. "எதிர்கால நாணய மாற்று பதிவு" (Forward Exchange Rate) என்பதால் கருதப்படுவது யாது?

33. "வாகனங்களுக்கான தகுதிசான்றிதழ்" என்பதால் கருதப்படுவது யாதெனக் கூறுக?

34. "இலத்திரனியல் தபால்" எனப்படுவது யாது?

35. கிரயப்பட்டியல்களில் குறிக்கப்பட்டுள்ள 10% ஒரு மாதம் என்பதன் பொருள் என்ன?

36. ஏல வியாபாரத்திற்கும் மூடிய விற்பனைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.

37. "சட்டக்குறியீடு" என்பதால் கருதப்படுவது யாது?

38. ஏகவங்கிமுறை என்பதை விளக்குக.

39. H.A.C.C.P புள்ளி என்பதை விளக்குக.

40. "மாற்றத்தகு திபெஞ்சர்" என்பதை விளக்குக.

## பகுதி II

★ முதலாம், இரண்டாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. 1) வணிகங்களை வகைப்படுத்தும் அடிப்படைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
2) வணிகத்தின் பிரிவுகளை பாய்ச்சற்கோட்டு வரைபடத்தின் மூலம் எடுத்துக் காட்டுக.
3) தேவை, விருப்பம் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
4) உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் ஒரு நாடு அடையும் அனுகூலங்களை விளக்குக.
5) பகுத்தறிவான நுகர்வோன் என்பதால் கருதப்படுவது யாது?
6) தனியாள் வியாபாரத்துடன் ஒப்பிடும்போது பங்குடைமை ஒன்றின் அனுகூலங்கள் யாவை?
7) கம்பனி ஒன்றின் 'கடன்தீர் பரிசோதனை' என்பதை விளக்குக.
8) 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச்சட்டப்படி கம்பனிப் பதிவிற்காகச் சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் யாவை?

02. 1) காசோலை அடியிதழ் என்பதை விளக்கி கட்டளை இடுபவருக்கு அவ்வாறான அடியிதழின் முக்கியத்துவத்தை விளக்குக.
2) வணிகர் ஒருவர் ஏன் வணிகச்சூழல் காரணிகளில் அக்கறைகொள்ள வேண்டியது அவசியமாகும் என்பதை விளக்குக.
3) இயற்கைச் சூழலானது எதிர்நோக்கும் சவால்கள் யாவை?
4) திறைசேரி வைப்புச்சான்றிதழ் மூலம் ஏற்படும் அனுகூலங்கள் யாவை?
5) பல்தேசியக் கம்பனி ஒன்றின் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.
6) அரச திணைக்களம் ஒன்றை கூட்டுத்தாபனம் ஒன்றிலிருந்து வேறுபடுத்துக.
7) சங்கவகையான நிறுவகங்கள் என்பதால் கருதப்படுவது யாது?

03. 1) பணத்தின் முதன்மைத் தொழிற்பாட்டையும், வருவிக்கப்பட்ட தொழிற்பாடுகளையும் விளக்குக.
2) சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையிலான தொடர்பை விளக்குக.
3) திறந்த காசோலை என்பதால் கருதப்படுவது யாது?
4) வணிகவங்கி ஒன்று, நிதிக்கம்பனி ஒன்றிலிருந்து எங்கனம் வேறுபடும்?
5) அழைப்புக் கடன் எனப்படுவது யாது?
6) நிதிக்குத்தகை - தொழிற்பாட்டுக் குத்தகை என்பவற்றை வேறுபடுத்துக.
7) வணிகத்தாள் என்பதை விளக்குக.

04. 1) வணிக அழைப்புக்களுக்கான நிதித்தேவைகள் பலவகையாகும். அவற்றில் பிரதானமானவைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
2) 1. முதலீடுகளைச் சட்டரீதியான தன்மையை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு வகைப்படுத்த முடியும்?
2. முறைசார் முதலீட்டு வழிமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வழிமுறையாகும். இதற்குச் சார்பான காரணங்களைக் குறிப்பிடுக.
3) வைப்புச்சான்றிதழ் என்பதால் கருதப்படுவது யாது?
4) காசோலை மூலம் கொடுக்கல்வாங்கல் செய்வது பிரயோசனமான செயலாகும். இதன் மூலம் வணிகர் ஒருவர் அடையும் அனுகூலங்களைக் குறிப்பிடுக.
5) வரவு அட்டைக்கும், கடன் அட்டைக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு யாது?
6) "ஒற்றை வங்கி அமைப்பு", "வங்கிகளுக்கிடையிலான வலையமைப்பு" என்பவற்றைச் சுருக்கமாக விளக்குக.
7) "வணிகர் வங்கிகள்", வணிகர்களுக்கு வழங்கும் பல்வேறு சேவைகள் யாவை?

05. 1) காப்புறுதிக்கும் ஆயுளுறுதிக்கும் இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
2) காப்புறுதி மூலம் கிடைக்கும் முக்கியமான தொழிற்பாடுகளைக் குறிப்பிட்டு விளக்குக.
3) வணிக நடவடிக்கைகளுக்கு தொடர்பாடலின் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக.
4) தொடர்பாடல் செயற்பாட்டுப் படிமுறைகளைப் பாய்ச்சற்கோட்டு வரைபடம் மூலம் காட்டுக.
5) தொடர்பாடல் நடவடிக்கைகளை இருபிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவற்றைக் குறிப்பிட்டு விளக்குக.
6) போக்குவரத்து மூலம் கிடைக்கக்கூடிய பல்வேறு அனுகூலங்களைக் குறிப்பிடுக.
7) போக்குவரத்து ஒன்றின் அடிப்படை அம்சங்களைப் பாய்ச்சற் கோட்டு வரைபடத்தில் காட்டுக.

06. 1) வணிகர் ஒருவருக்கு களஞ்சியப்படுத்தலால் ஏற்படக்கூடிய பல்வேறு அனுகூலங்களைக் குறிப்பிடுக.
2) காரணிகருக்கும் தரகர்கருக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக.
3) இலங்கையில் தொழிற்பட்டுவரும் பல்வேறு சில்லறை வியாபாரங்களின் வகைகள் யாவை?
4) "ஏற்றுமதி காரணிப்படுத்தல்" என்பதனை விளக்குக.
5) மீள் ஏற்றுமதிக்கும், இறக்கியேற்றுமிட வியாபாரத்திற்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.
6) பகுதிக்கடைக்கும், பல்வகைக்கடைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
7) பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்புகள் எழுதுக.

| | |
|---|---|
| 1. மூலதன இலாபம். | 2. ஒப்பந்தித்த பண்டகசாலை. |
| 3. எதிர் வர்த்தகம். | 4. ஏற்றுமுறி. |
| 5. பிரதிநிதி சாட்சிப் பட்டியல். | 6. நாடோடிக்கலன். |
| 7. உரிமை வழங்கல். | 8. இரகசியப் பங்காளர். |

-நிறைவுற்றது-

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# வணிகக் கல்வி II

A.T.நந்தன் B.Com (Hons), MBA (Reading), CMA (SL)

## அலகு ரீதியான பரீட்சை நோக்கு வினாக்கள்

### ★ வணிக நிதி, மனிதவள முகாமைத்துவம்

### பகுதி - I

01. பின்வருவனவற்றுள் எது நேரில் நிதிமூலமாகும்?
1) வங்கி மேலதிகப்பற்று. 2) சாதாரண பங்குகளை வழங்கல்.
3) முன்னுரிமைப் பங்குகளை வழங்கல்.
4) நிறுத்தி வைத்த உழைப்பு. 5) திபெஞ்சர்களை வழங்குதல்.

02. வணிக நிதியின் பிரதான நோக்காகக் கருதக்கூடியது?
1) சரியான முறையில் அறிக்கையிடல்.
2) நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல். 3) நிதிவளத்தை முகாமை செய்தல்.
4) உரிமையாளரின் செல்வத்தை உச்சப்படுத்தல்.
5) மேற்குறித்த அனைத்தும்.

03. பின்வருவனவற்றுள் அகநிதி(Internal Source of finance) மூலமாக அமைவது,
1) வாடகைக் கொள்வனவு. 2) கடன் காரணிப்படுத்தல்.
3) ஈட்டு வைத்தல். 4) சொத்து விற்பனை.
5) தொகுதிக் கடன்.

04. பின்வருவனவற்றுள் எது நிதியிடல் தேவையினைத் தீர்மானிப்பத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணி (Deciding Factor of financing Requitment) ஆகும்?
1) மூலதன இணைப்பு. 2) வணிக இடர்.
3) மூலதனக் கிரயம். 4) ஆவணங்களின் கிடைப்பனவு.
5) மேற்போந்த அனைத்தும்.

05. பின்வருவனவற்றுள் எது கொழும்பு பங்கு பரிமாற்று நிலையத்தில் மாற்றீடு செய்ய முடியாத ஆவணங்களின் வகையாகும்?
1) சாதாரண பங்குகள். 2) முன்னுரிமைப் பங்குகள்.
3) கூட்டிணைக்கப்பட்ட தொகுதிக் கடன்கள் (Comporate Debentures)
4) திறைசேரி முறிகள் (Treasuary Bonds)
5) பங்கு ஆவணப் பத்திரம் (Share Warrant)

06. ஒரு நிறுவனம் செலுத்த வேண்டிய கடன் தீர்க்கும் காலத்தை வெளிப்படுத்தும் விகிதம் எது?
1) செயற்பாட்டு விகிதம். 2) இணைவு விகிதம்.
3) திரவத் தன்மை விகிதம். 4) இலாபத்தன்மை விகிதம்.
5) சந்தைசார் விகிதம்.

07. ஒரு வணிக நிறுவனத்தின் தேறிய தொழிற்படு மூலதனம் யாது?
1) நடைமுறைச் சொத்துக்கள் - நடைமுறைப் பொறுப்புக்கள்.
2) நிலையானச் சொத்துக்கள் - நடைமுறைப் பொறுப்புக்கள்.
3) மொத்த மூலதனம் - நீண்டகாலப் பொறுப்பு.
4) நடைமுறைப்பொறுப்புக்கள். 5) நடைமுறைச்சொத்துக்கள்.

08. கொழும்பு பங்குச் சந்தையை முகாமை செய்வது,
1) கொழும்பு தரகர் சங்கம்.
2) வரையறுத்த பங்கு பரிவர்த்தனை நிலையம்.
3) மத்திய வைப்பக முறை
4) இலங்கை பிணைகள் பரிவர்த்தனை ஆனைக்குழு.
5) இலங்கை முதலீட்டு சபை.

09. கரைக்கடந்த வங்கிச் சந்தைகளில் அந்நிய நாணய வங்கி அலகில் கணக்கினை பேண முடியாதவர்,
1) வெளிநாட்டவர். 2) வெளிநாட்டு மூதலீட்டாளர்கள்.
3) இலங்கை முதலீட்டு சபையால் அங்கீகரிக்கப்பட்டவர்கள்.
4) வதிவுள்ள இலங்கையர்.
5) இலங்கை மத்தமிய வங்கியால் அங்கீகரிக்கப்பட்டவர்.

10. வட்டி வருமானத்தையும் உயர் காப்பு மட்டத்துடனான திரவத்தன்மையையும் தருகின்ற மிகப் பொருத்தமான முதலீடு எது?
1) திறைசேரி முறிகள். 2) திறைசேரி உண்டியல்கள்.
3) தாபன முறிகள். 4) சாதாரண பங்குகள்.
5) அலகுப் பொறுப்புக்கள்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



சக ஊழியர் ஒருவர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படலாம். மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்வீர்கள். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசலாம். கோபம், உண்டாகும்.

### இடபம்




எந்த வேலையையும் உற்சாகத்தோடு செய்வீர்கள். நீண்ட நாள் நண்பர் ஒருவரைச் சந்தித்து முக்கிய விடயங்கள் குறித்து ஆலோசனை நடத்துவீர்கள். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். உங்களைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

### மிதுனம்



ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். எதிர்பார்த்த பணவரவுகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். அரசியல் தொடர்புடையவர் அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். பெண்கள் சிலரை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைப்பீர்கள். வெளியூர்களில் இருக்கும் ஒருவரைத் தொடர்புகொண்டு பேச முற்பட்டு, அவர்கள் கிடைக்காமல் போகலாம்.

### கடகம்



கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்கும் நாள். சகோதரிகள் வழியில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். சில வேலைகளை காலதாமதமாகத் துவக்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு உற்சாகம் தரும். மாமன், மைத்துனர்களிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறலாம். சந்தோஷம் பெறும் நாள்.

### சிங்கம்



நல்லவர்கள், கெட்டவர் எனப் பார்க்காமல் நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். குறுக்கு வழியில் சில காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள். நண்பர்கள் உங்களிடம் உதவிகள் கேட்டு நச்சரிக்கலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டும்.

### கன்னி



வெளியூர் பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையும். பகட்டான ஆடை,ஆபரணங்கள் அணிவதில், விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதிலும் நாட்டம்செல்லும். செலவுகளைச் சந்தித்தாலும், அதற்கேற்ற பணவரவுகள் வரும். திட்டமிட்ட வேலை ஒன்று முடியாமல் போனாலும், திட்டமிடாத வேலை ஒன்று முடியலாம்.

### துலாம்



தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். மலை போல் குவிந்த வேலைகளையும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டு முடிப்பீர்கள். இரண்டு நாள்களாக உங்களின் மனதை உறுத்திக் கொண்டிருந்த பிரச்சினை ஒன்று சுமுகமாக முடிவுக்குவரும். உறவினர் ஒருவருக்காக நீங்கள் மற்றவர்களிடம் பரிந்து பேசுவீர்கள்.

### விருச்சிகம்



ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். எதிர்பாராத பண உதவிகள் கிடைக்கலாம். உங்களின் வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். நீங்கள் கேட்ட உதவியைசெய்ய மனமில்லாமல் உறவினர்கள் கையை விரிக்கலாம்.

### தனுசு



அடுத்த சிலரின் வேலைகளையும் நீங்கள் சேர்த்துச் செய்யலாம். எதிர்பார்த்த பண உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் கடும் வார்த்தைகளைப் பேச வேண்டாம். நொடிப் பொழுதில் முடிந்துவிடும் என நினைத்த வேலை ஒன்றுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். காத்திருப்புகள், இழுத்தடிப்புகள் நேரும்.

### மகரம்



இனிமையான அனுபவங்களால் கவலைகளை மறப்பீர்கள். சில விடயங்களில் உங்களின் யோசனைகளுக்கு மற்றவர்கள் மத்தியில் வரவேற்பு இருக்கும். நீண்ட நாள் ஆசையொன்று எளிதில் நிறைவேறி திருப்தி காண்பீர்கள். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை அடையாளம் கண்டு கொள்வீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

### கும்பம்



தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய மிகுதிகள் வந்து சேரலாம். தொல்லை கொடுத்த சிலர் தோள் கொடுக்க முன்வருவர். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் சிலருக்காக கணிசமான பணத்தைச் செலவிடுவீர்கள். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி பெறுவீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

### மீனம்



புதுமையான அனுபவங்களைப் பெறலாம். வேண்டாத சிலரால் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். கடினமான சில வேலைகளையும் கஷ்டப்பட்டு செய்து முடிப்பீர்கள். ஒருவர் மூலம் சில வேலைகளை முடிக்க முற்பட்டு அது முடியாமல், மற்றொருவர் மூலம் முடிக்கலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்ய நேரிடலாம்.

---


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் இராசையா சண்முகநாதன்

மலர்வு 20.11.1948

உதிர்வு 24.06.2009

திதி: 13.07.2010



அன்புள்ள அப்பாவே!
ஆண்டு ஒன்று ஆனபோதும்
ஆறவில்லை எம்துயரம்,
உறங்காத விழிகளுடன்
உங்களை நாம் தேடுகிறோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய,
இறைவனை வேண்டுகிறோம்.

என்றும் உங்கள் நினைவில்:
மனைவி, பிள்ளைகள்.

29A, சந்தனமாதாகோயில் வீதி,
கண்டுக்குழி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2221097

(100287)


# எதிர்ப்புப் போராட்டத்தை ஐ.நாவின் சில சக்திகள் பெரிதுபடுத்தியுள்ளன

## கோத்தபாய தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

ஐக்கிய நாடுகள் அமைப்பின் சில சக்திகள் அண்மையில் நடைபெற்ற எதிர்ப்புப் போராட்டத்தைப் பெரிதுபடுத்தியுள்ளன என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளுடன் சிறந்த உறவுகளைப் பேண வேண்டும் என்ற அரசின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை எனவும், அதற்காக இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையைப் பலவீனப்படுத்தும் நோக்கில் சில சக்திகள் பிரச்சினைகளைப் பூதாகரமாக வெளிப்படுத்த முயற்சிக்கின்றன என்றும் அவர் சுற்றம் சாட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திக் காரியாலயம் போராட்டங்களால் மூடப்படவில்லை எனவும், சில காலங்களுக்கு முன்னரே குறித்த அலுவலகத்தை பாங்கொக்கிற்கு இடம் நகர்த்த தீர்மானிக்கப்பட்டிருந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த காரணத்தால் சில மேற்குலக நாடுகள் இலங்கை மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு செயற்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உண்மையை நிலைமையைக் கொழும்பில் உள்ள இராஜதந்திரிகள் உலக நாடுகளுக்கு வெளிப்படுத்துவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

விமல் கட்சியின் போராட்டங்கள் தொடர்பில் கொழும்பு இராஜதந்திரப் பிரதிநிதிகளுக்கும், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற உள்ளது என்றும் -30 ஆண்டு காலமாக கொடிய யுத்தத்தை வெற்றி கொண்ட இலங்கை தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள்ள சர்வதேச சமூகம் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (சி)


## அறைகள் வாடகைக்கு உண்டு

பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையில் உணவு வசதிகளுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட அறைகள் ஆண்களுக்கு உண்டு. நிறுவனங்களுக்கு SALES REP வழங்கப்படும். தொடர்பு 0779578244 பார்வை யிடும் நேரம் சனி, ஞாயிறு மட்டும் (100749)

## வாடகைக்குத் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் சிறிய நிறுவனம் ஒன்றுக்கு, களஞ்சியமாக பயன்படுத்த யாழ்.நகரை அண்டிய பகுதியில் அறை ஒன்று வாடகைக்குத் தேவை. (கடைத் தொகுதிகள் உள்ள அறை விரும்பத்தக்கது).
தொடர்பு: 0777917737

(100501)

## வீடு விற்பனைக்கு

நல்லூர் பின்வீதி முடமாவடிச் சந்திக்கும் தலங்காவற் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772720112.

(100746)

## சோதிடம்

கல்வி, தொழில், திருமணம், புத்திரர், நோய், வெளிநாட்டுப் பயணம் முதலான உங்கள் கேள்விகளுக்கு உரிய பதில் உடனே தரப்படும். ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம் பார்த்துப் பலன் சொல்லப்படும்.
த.சிவானந்தன் (பிரபலசோதிடர்),
100, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்து மகளிர் கல்லூரி முன்பாக)
தொ.பே: 0778998[illegible]

(100[illegible]55)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பூமியில் ஜனனம்
04 . 02 . 1962



சாயிபகவான் அடியில்
24 . 06 . 2009

திதி: 13.07.2010 (ஆனி பூர்வ துதியை)

அமரர் கதிரவேலு உமாபாலன்(உமா)

சாயிஅன்பன்- சமய ஆன்மீகவாதி.

தம்பி உமா பார்க்கும் இடமெல்லாம்
கேட்கும் ஒலிகளெல்லாம் உந்தன் குரல்.
ஓராண்டு புரண்டு ஓடினாலும்
எமது கண்களில் இன்னமும் நீர் வாழ்கின்றீர்.
இன்று உமது ஆத்மா சாந்தி பெற அனைத்து தெய்வங்களையும் வேண்டி நிற்கின்றோம்.

சகோதரிகள், மைத்துனர், பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஓம்ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம்,
கந்தசாமி ஆசிரியர் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

(100421

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் வேலுப்பிள்ளை கந்தையா



தோற்றம் 1928 . 11 . 14

மறைவு 2009 . 06 . 24

அன்புக்கோர் இலக்கணமாய்
அவனியில் உதித்த தந்தையே!
வருடம் ஒன்று ஓடி மறைந்தாலும்
எங்களால் உங்களை மறக்கமுடியவில்லை.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

'கமலபதி',
மாகியப்பிட்டி,

(100716)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.11.1992

✱ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் யுத்தநிறுத் தம் ஒன்றை ஏற்படுத்தும் 'குவாக்கர்' சமா தானக் குழுவின் முயற்சிகள் தடைப் பட்டுள்ளதாகத் தெரிவிப்பு. எனினும் பேச்சு நடத்துவதற்கு இன்னும் வாய்ப் புள்ளதாகவும் விமர்சிப்பு.

✱ ஜேர்மனியில் தங்கியுள்ள வெளி நாட்டு அகதிகளுக்கு வழங்கப்பட்டு வரும் அகதி நிவாரண உதவிகளை குறைப்ப தென ஜேர்மனிய அரசு முடிவு.

17.11.1992

✱ நேற்றுக்காலை கொழும்பில் தற் கொலைப்படை வீரரொருவர் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இலங்கை கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ தமது காருடன் சேர்ந்து சிதறிப் பலியானதாகத் தெரிவிப்பு.

✱ கடற்படைத் தளபதி கொல்லப் பட்ட குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு விடு தலைப் புலிகளே காரணம் என இலங்கை இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத்முன சிங்க தெரிவிப்பு.

18.11.1992

✱ கடற்படைத் தளபதி விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட சம்பவத் துக்கு பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முப்படை களின் பிரதம தளபதி என்ற வகையில் பொறுப்பேற்று ஜனாதிபதி பிரேம தாஸ பதவி விலக வேண்டும் என தென்னிலங்கை எதிர்க் கட்சிகள் வலியுறுத்தி வருவதாகத் தெரிவிப்பு.

✱ மணலாறு மாவட்டத்தில் இலங்கை இராணுவத்தினர் மீது விடுதலைப் புலி கள் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு படை யினர் பலியானதாகத் தெரிவிப்பு.

19.11.1992

✱ வவுனியா - செட்டிகுளத்தில் இராணு வத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் சிங்கள முஸ்லிம் மக்களை குடியமர்த்த அரசு திட்டமிட்டு வருவதாகக் குற்றச் சாட்டு.

✱ வடக்கு - கிழக்கு யுத்தத்தை பேச்சு வார்த்தை மூலம் விரைவில் முடிவுக்குக் கொண்டுவருமாறு தெற்கின் மதகுரு மார்கள் மற்றும் அறிஞர்கள் கொண்ட சமாதானக் குழு அரசை வலியுறுத்தி வரு வதாகத் தெரிவிப்பு.

20.11.1992

✱ வவுனியா - செட்டிகுளம் பகுதியில் இராணுத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்கு தலில் 10 இராணுத்தினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

✱ வடக்கு - கிழக்கு யுத்தத்தில் ஈடுபட் டுள்ள அரச படையினர் மத்தியில் நிலவும் ஆள்பற்றாக்குறையைப் போக்க கூடுத லான ஆள்களைத் தருமாறு கொழும் பிலுள்ள தமிழ்க் குழுக்களிடம் இராணுவத் தரப்பு கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரி விப்பு.

21.11.1992

✱ மற்றொரு முக்கிய பிரமுகரைக் கொல்வதற்கு விடுதலைப் புலிகள் மேற் கொண்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை. இந்த முயற்சியில் ஈடுபட்ட தாகக் கருதப் படும் இரு சந்தேக நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத் தில் ஜனாதிபதியின் செயலாளர் விஜயதாசவின் மெய்ப்பாது காவலர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரி விப்பு.

✱ கொழும்பு நீதவான் நீதிமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப் புச் சம்பவம் ஒன்றில் கொலை வழக் கொன்றில் சம்பந்தப்பட்ட மூன்று எதிரி களும் சிறைக்காவலர் சிலரும் கடும் காயங் களுக்குள்ளானதாகத் தெரிவிப்பு.

22.11.1992

✱ கொழும்பில் தற்கொலைத் தாக்கு தல்களினால் எழுந்துள்ள அச்சநிலையை அடுத்து முக்கிய அரசுப் பிரமுகர்களை யும் படைத்தளபதிகள் மற்றும் அதிகாரிகளை யும் பாதுகாப்பதற்காக புதிய உத்தி குறித்து அரசு தீவிரமாக ஆலோசித்து வரு வதாகத் தெரிவிப்பு.

✱ இலங்கையில் இப்போது அவசர கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

23.11.1992

✱ கொழும்பில் இயங்கி வரும் விடு தலைப் புலிகளின் உறுப்பினர்களைக் கண்டுபிடிக்க போதிய எண்ணிக்கை யான உளவு அதிகாரிகள் இல்லாததால் புலி களின் செயற்பாட்டை கொழும்பில் தடுப் பது மிகவும் கஷ்டம் என இராணு வத்தரப்பு தெரிவிப்பு.

✱ வீடுகளில் குடும்பத்தினர் தவிர்ந்த மற்றையோரை பொலிஸாருக்கு அறிவிக் காமல் தங்கவைப்பதைத் தடுக்கும் அவ சரக கால பிரமாணம் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருவதாக அரசு அறிவிப்பு.

24.11.1992

✱ மாதகலில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் நேற்று திடீரென நடத் திய அகோர ஷெல் தாக்குதலில் சுழிபுரம் பகுதியில் 5 பொதுமக்கள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

✱ தமிழர் மீது இனப்படுகொலையை கட்டவிழ்த்துவிட்டிருக்கும் இலங்கை அரசையும் அதன் அதிகாரிகளையும் விசா ரணை செய்ய சர்வதேச குற்றவியல் விசா ரணை மன்றம் ஒன்றை ஐ.நா. சபை நிய மிக்க வேண்டும் என இந்திய மக்களுக் கான உலக அமைப்பு ஐ.நா.சபையிடம் கோரிக்கை.

25.11.1992

✱ பலாலி இராணுவ முகாமின் கிழக் குப் பக்கத்தில் அமைந்திருந்த இராணுவக் காவ லரண் தொடர்மீது விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய தாக்குதலில் 150 காவல ரண்கள் தகர்க்கப்பட்டதாக வும் 50க்கும் அதிகமான படையினர் உயிரிழந்ததாகவும் தெரிவிப்பு.

✱ கடற்படைத் தளபதி தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்ப வம் தொடர்பாக கொழும்பில் நூற்றுக் கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட் டுள்ளதாகத் தெரிவிப்பு.

26.11.1992

✱ ஜே.வி.பி. இயக்கத்தில் தமிழ் இளை ஞர்களும் சேர்ந்து வருவதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவிப்பு.

✱ முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல் மீதான வழக்குகளை அரசு வாபஸ் பெறாது எனவும் அவர் நாடுதிரும்பும் பட் சத்தில் வழமையான சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் டி.பி.விஜயதுங்க நாடாளுமன்றத்தில் தெரி விப்பு.

27.11.1992

✱ நுணாவில் கிழக்கில் நேற்று இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சு சம்பவம் ஒன்றில் பதுங்கு குழியில் இருந்த சிறுவ னும் அவனது சகோதரனும் மண்ணினால் மூடுண்டு மரணமானதாகத் தெரிவிப்பு.

✱ பெற்றோல் பவுஸர் ஒன்றுக்குள் ஒழித்திருந்து மாஸ்கோவிலிருந்து செக் கோசிலேவேக்கியாவுக்குள் நுழைய முயன்ற 25 இலங்கைத் தமிழர்கள் மயங் கிய நிலையில் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டதாகத் தெரிவிப்பு.

28.11.1992

✱ இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறை யிலான தீர்வு ஒன்றை முன்வைக்க சுதந்தி ரக் கட்சி இணக்கம் தெரிவித்த சில மணி நேரத்தில் அம் முடிவிலிருந்து அக் கட்சி யின் தலைவியான சிறிமாவோ பின் வாங்கி யுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ எமக்குத் தெரியாமல், வெளியே உணரப்படாமல் இந்த மண்ணில் ஓர் அரசுக்கான அடித்தளம் அமைக்கப்பட்டு வருகின்றது. எமக்கு விடுதலை நிச்சயம் கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை என விடுதலைப் புலிகள் பிரமுகர் யோகரத் தினம் யோகி தெரிவிப்பு.

29.11.1992

✱ அரசாங்கத்துக்கு இராணுவத் தோல்வி ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாகவே அது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண வேண்டிய நிர்ப்பந்தத் துக்கு ஆளாகியுள்ளது என அரசியல் ஆய் வாளர்கள் தெரிவிப்பதாக ஏஜென்சி செய்தி கள் தெரிவிப்பு.

✱ சகல கட்சிகளும் ஒன்றிணைந்து இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்றை உருவாக்க வேண்டும். அம் முயற்சியில் வெற்றி பெற்றால் அதனை வைத்து அர சாங்கம் அரசியல் லாபம் பெற முயற்சிக் காது என ஜனாதிபதி பிரேமதாஸ வவுனியா வில் வைத்துத் தெரிவிப்பு.

30.11.1992

✱ இலங்கையில் தமிழீழம் கோரி நடந்து வரும் பிரிவினைவாதப் போரை நிறுத்து வதற்கான அமைதி முயற்சிகள் பேணப் படாத பட்சத்தில் பயங்கர அரசியல் பிரச் சினைகளை இலங்கை எதிர்கொள்ள நேரும் என அரசியல் மற்றும் இராணுவ விமர் சகர் கள் தெரிவித்திருப்பதாக ஏஜென்சி செய்தி கள் தெரிவிப்பு.

✱ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண 9 மாகாண எல்லைகளை அடிப் படை யாகக் கொண்ட சமஷ்டி அரசமைப்பு யோச னையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட 7 தமிழ் அரசியல் கட்சிகள் முற்றாக நிராகரித்துள்ளதாகத் தெரிவிப்பு.

# சைவ பரிபாலன சபையின் சைவநெறித் தேர்வில் அகில இலங்கை ரீதியில் வெற்றியீட்டியோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை13

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யால் கடந்தாண்டு நடத்தப்பட்ட அகில இலங்கை சைவநெறித் தேர்வில் சைவநெறி, தமிழ் மொழி ஆகிய பாடங்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களின் விவரம் வருமாறு,

தரம் - 2

முதலாமிடம் - சிவகோணேசன் சிவாம் சன்(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), இரண்டா மிடம் - அபிநயா செவ்வந்தி நாதன் (சத்தி யசாயி பாடசாலை), மூன்றா மிடம் - ரமேஸ் வசி கரன் (பரு.சித்தி விநாயகர் வித்தியாலயம்).

தரம் - 3

முதலாமிடம் - சிவகோணேசன் மனா மிர்தன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), இரண்டாமிடம் - தாரகா விஜேந்திரன் (கொக் குவில் இந்து ஆரம்ப பாட சாலை), அனிற்றா கைலாசபதி (ஏழாலை தெற்கு அ.மி.த.க பாட சாலை), மூன்றா மிடம் - பக்தராஜாபவதார கன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை).

தரம் - 4

முதலாமிடம் - காருண்யா பார்த்தீபன் (புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயம்), இரண்டாமிடம் - சாத்விகா விக்ன ராஜா (சத்தி யசாயி பாடசாலை), மூன்றா மிடம் - கம்சா யினி மகேந்திரம்(கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

தரம் - 5

முதலாமிடம் - வைஷ்ணவி கண்ண தாசன்(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), இரண் டாமிடம் - கிருன்சிகா ஜெயக்குமார் (கரந் தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), மூன் றாமிடம் - சபிதா வரதராசா (ஊரெழு கணேச வித்தியாலயம்).

தரம் - 6

முதலாமிடம் - பபிந்தா உதயகுமார் (கோண்டாவில் இந்து மகா வித்தியால யம்), இரண்டாமிடம் - மனோஷிகா குல வீர சிங்கம் (தேவரையாளி இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் - கார்த்திகா மதுர நாயகம் பிள்ளை (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

தரம் - 7

முதலாமிடம் - கார்த்திகா சிவப்பிரகாசம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டா மிடம் - விதுசா லிங்கசபேசன் (உடுவில் மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் - நிலுஜா மகா தேவன்(வேம்படி மகளிர் உயர்தர பாட சாலை).

தரம் - 8

முதலாமிடம் - சுமித்தா செல்வராஜன் (கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்), இரண்டாமிடம் - மயூரி புவனேந்திரன் (வேம் படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மூன்றா மிடம் - சுசி விக்னேஸ்வரன் (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

தரம் - 9 சைவநெறி

முதலாமிடம் - கிருஷாந்தி கிருஷ்ணா னந்தன் (தேவரையாளி இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - விஜிதா சுரேஸ்குமார் (மகா ஜனக் கல்லூரி), மூன்றாமிடம் - சிறீ நங்கை யோகநாதன்(தேவரையாளி இந்துக் கல்லூரி).

தரம் - 10 சைவநெறி

முதலாமிடம் - தர்மிக்கா கோபாலகுமாரன் (வடமராட்சி இந்து மகளிர் கல் லூரி), இரண்டாமிடம் - குணாநந்தசீலன் நிலக் ஷன் (யாழ்.இந்துக்கல்லூரி), மூன்றா மிடம் - இந்திரகுமார் விஜு (யாழ். இந்துக் கல்லூரி).

தரம் - 11 சைவநெறி

முதலாமிடம் - சரண்ணியா ஸ்ரீகாந்தன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டா மிடம் - சரண்யா பாலேந்திரன் ( விக்னேஸ் வராக் கல்லூரி), மூன்றா மிடம்-இரவீந் திரராசா இராஜப்பிரவிந்தன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

தரம் - 12 - இந்து நாகரிகம்

முதலாமிடம் - மயூரி லோகேஸ்வர சர்மா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண் டாமிடம் - ஷாலினி சிவராசா (வரணி மகா வித்தியாலயம்), மூன்றாமிடம் - ஆரணிக்கா மகாதேவா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

தரம் - 12 - இந்துசமயம்

முதலாமிடம் - நித்தியானந்தன் பாபு தரன் (மகாஜனக் கல்லூரி), இரண்டா மிடம் - கஜேந்தினி ஈசன் (சங்கானை சிவப் பிரகாச மகா வித்தி.), மூன்றாமிடம் - பிரிய தர்சினி தர்மலிங்கம் (இராமகிருஷ் மிஷன் மகா வித்தி).

தரம் - 13 - இந்துநாகரிகம்

முதலாமிடம் - தங்கராசா தயாபரன் (கோண் டாவில் இந்து மகா வித்தி.), இரண்டா மிடம் - ரவிச்சந்திரிக்கா நவரட்ணம் (நெல்லியடி மத்திய மகா வித்தி.), மூன்றா மிடம்- சிந்துஜா ஞானசேகரம் (முத்துத் தம்பி மகா வித்தி).

தரம் - 13 - இந்து சமயம்

முதலாமிடம் - மகேஸ்வரன் மயூரஸ் (மகாஜனக் கல்லூரி), இரண்டாமிடம் - பத்மநாதன் பார்த்தீபன் (வட்டு. இந்துக் கல் லூரி), மூன்றாமிடம் - செல்வி செல்வலிங் கம் (மகாஜனக் கல்லூரி).

தரம் - 9 - தமிழ்மொழி

முதலாமிடம் - சோபனா பாலச்சந்திரக் குருக்கள் (இளவாலை மெய்கண்டான் வித்தி.),இரண்டாமிடம் - விஜிதா தவராசா (விக்ரோறியாக் கல்லூரி), மூன்றாமிடம் - புஸ்பகுமார் வைஷ்ணவன் (தொல்புரம் விக்னேஸ்வரா).

தரம் - 10 - தமிழ்மொழி

முதலாமிடம் - மகாலிங்கம் கார்த் தீபன் (மீசாலை வீரசிங்கம் ம.வி), இரண்டா மிடம் - துளசி அம்பிகாநிதி (வரணி ம.வி.), மூன்றாமிடம் - அருளானந்தம் ஆராஅமுதன் (யாழ். இந்துக் கல்லூரி).

தரம் - 11 - தமிழ்மொழி

முதலாமிடம் - இரவீந்திரராசா இராஜப் பிரவிந்தன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - கஸ்தூரி சந்திரசேகரம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மூன்றா மிடம் - வனிதா பாலசுப்பிரமணியம் (சாவ கச்சேரி இந்துக் கல்லூரி).

தரம் - 13 - தமிழ்மொழி

முதலாமிடம் - பாரதி பொன்னையா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இரண்டா மிடம் - சுமதி புவனேஸ்வரன் (மானிப் பாய் மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் - ஜெனனி மகேந்திரன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

(எ-201)

# ஊனமுற்றோர் புனர்வாழ்வுத் திட்டமாதிரிக் கணக்கெடுப்பு

நாவற்குழி ,ஜூலை13

சமூக சேவைகள் அமைச்சின் கீழ், அங்கவீனமுற்றோருக்கான தேசிய செய லகம், ஊனமுற்றோர் புனர்வாழ்வுத் திட் டத்துக்கான மாதிரிக் கணக்கெடுப்பைச் செய்யவுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவி லிருந்தும் தலா 10 ஊனமுற்றோர் மாதிரிக் கணக்கெடுப்பில் தெரிவு செய்யப்பட் டுப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

சமூக சேவைகள் அலுவலர்கள் இப் படிவங்களைப் பதிவு செய்யும் நடவடிக் கைகளில் தற்போது ஈடுபட்டுள்ளனர். இப்படிவங்கள் பிரதேச செயலகம் மூலமாக அங்கவீனமுற்றோர் செயலகத் துக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளது.

பின்னர் பிரதேச செயலகப் பிரிவில் வாழும் அங்கவீனர் அனைவருக்கும் இப் படிவங்கள் மூலம் தனித்தனியாகக் கணக் கெடுப்புச் செய்யப்படவுள்ளன. (எ-121)

# மிகச்சிறிய அமைச்சரவை: இலங்கை உலக சாதனை

## கிண்டலடிக்கிறார் மங்கள சமரவீர

கொழும்பு, ஜூலை 13

உலகின் மிகச் சிறிய அமைச்சரவையைக் கொண்ட நாடு என்ற உலக சாதனையை இலங்கை படைத்துள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய அமைச்சரவையில் இரண்டு அமைச்சர்களே கடமையாற்றுகின் றனர் எனவும் ஏனையவர்கள் அவர்களின் கைப்பொம்மைகளாகச் செயற்பட்டு வரு கின் றனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள் ளார்.

அரசின் மொத்த செலவில் 63 வீதம் ராஜபக்ஷ குடும்பத்தாருக்காக ஒதுக்கப்பட் டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு ஆண்டுகளாக இலங்கை யின் சட்டம் - ஒழுங்கு பாரியளவில் வீழ்ச்சி யடைந்துள்ளன என்றும் - பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் பல்வேறு அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப் பட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப் படாமையால் சர்வதேச ரீதியில் பாதிப்பு ஏற் படக்கூடும் என 2006ஆம் ஆண்டு டிசெம் பர் மாதம் 13ஆம் திகதி தாம், ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக அறிவித்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சியின் வருகையும் எம்மவர் வாழ்வியல் மாற்றங்களும்

விஞ்ஞானம் வேக வேகமாய் வளர்ந்த போது மனித வாழ்க்கை முறைகளும் அதற்கேற்ப மாற்றம் கண்டன.

மனித குலத்தின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு மனிதன் விஞ்ஞானத்தில் இருந்து கண்டெடுத்த அற்புத முத்துக்கள் ஏராளம்! ஏராளம்!.

அதில் ஒன்றுதான் தொலைகாட்சி. இது எமது நாட்டினுள் குறிப்பாக குடாநாட்டினுள் வந்ததும் எமது வாழ்க்கை முறைகளை மாற்றிப்போட்ட விதம் குறித்து இங்கே பதிவு செய்யப் படுகின்றது.

1970 முதல் 1977 வரை இலங்கையின் பொருளாதாரம் இறுக்கமாக மூடப் பட்டிருந்தது. 1977 ஜூலை மாதத்தின் பின்னர் திடீரெனத் திறந்து விடப்பட்ட போது 1978 இல் தொலைக்காட்சி என்பதும் புதிய வரவாக இருந்தது.

ஜே.எல்.பெயார்ட் எனும் விஞ்ஞானியால் தொலைக்காட்சி கண்டுபிடிக் கப்பட்டு மிக நீண்ட காலத்திற்குப் பின்பே எமது நாட்டினுள் தொலைக் காட்சி நுழைந்து கொண்டது.

தொலைக்காட்சி என்பதைக் காட்சி வானொலி எனும் சொல் கொண்டு பி.பி.சி தமிழோசையில் சங்கர் எனும் தமிழறிஞரான ஒலிபரப்பாளர் அழைத்ததும் நினைவு கூரத்தக்கது.

யாழ். குடாநாட்டினுள் 1978 இலேயே தொலைக்காட்சியைக் கொண்டுவந்து பொதுமக்களுக்குக் காட்டிய பெருமை யாழ். மாநகரசபைக்குரியது.

சுப்பிரமணியம் பூங்காவில் தொலைக் காட்சிப் பெட்டியொன்று உயரமான சிமெந்துக் கட்டில் வைக்கப்பட்டிருந்தது. அதில் இந்தியாவின் தூரதர்ஷன் தொலைக்காட்சி பார்ப்பதற்காக யாழ். குடாநாட்டின் சகல பாகங்களிலுமிருந்து மக்கள் கூடுவர். கறுத்த எறும்புகள் ஆயிரக்கணக்கில் மொய்த்தது போன்று அடிக்கடி தெரியும் திரையில் இடையிடையே ஒளிக் கீற்றாகப் படம் தெரியும். தெளிவற்றதாகவும், விளங்காமல் இருந்தாலும்கூட அதைப் பார்ப்பது எமக்குப் பரவசம் தந்தது. ஒரு காலத்தில் ஆடம்பரப் பொருளாகக் கருதப் பட்ட தொலைக்காட்சி அத்தியா வசியப் பொருளாகப் இன்று பலரது வீடுகளுக் குள் புகுந்துவிட்டது வேறு விடயம்.

இலங்கை - ஜப்பானிய நட்புறவின் அடையாளமாக கொழும்பு -07 இல் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் அலைவரிசைக் கோபுரமும் அன்பளிப் பாகக் கட்டி 1982 இல் வழங்கப்பட்டது.

'ரூபவாஹினி' எனும் சிங்களச் சொல்லுக்குத் தமிழில் தொலைக்காட்சி எனப் பொருள் தருவது பலருக்கும் தெரியாமல் இருக்கலாம். ரூபவாஹினியை இலவசமாகக் கொடுத்துவிட்டு தொலைக் காட்சிப் பெட்டி விற்பனையை ஏகபோக வியாபாரமாகக் கொண்டு ஜப் பான் பல மடங்கு பணம் உழைத்தது பரகசியம்.

அப்போது வந்த சொனி Sony ரக தொலைக்காட்சிப் பெட்டிகள் இன்று வரையும் சில வீடுகளில் 'பவர்' குன்றாது இருப்பதனையும் காணலாம். ரூபவாஹினி வருவதற்கு முன்பு 1980 இலேயே தொலைக்காட்சியுடன் டெக் இணைத்து வீடியோ கசற்றில் படம் காண்பிக்கும் புதிய வியாபாரம் ஒன்று வேகமாகப் பெருக்கெடுத்தது. பெரும் பணக்காரர்கள் சொந்தமாக வீடுகளிலேயே தொலைக்காட்சியை வைத்திருக்க நடுத்தர வர்க்கமும், வறிய மக்களும் இரண்டு ரூபா கொடுத்துப் படம் பார்த்தனர்.

இதனால் தியேட்டர் என்ற ஒன்றுக்குள் மட்டும் அடங்கிப் போயிருந்த சினிமாவுக்கு திடீரென விடுதலை கிடைத்தது.

வீடியோ என்ற ஊடகம் மூலமாக சினிமா பட்டிதொட்டியெங்கும் பரவியது.

தென்னிந்தியாவில் வெளியாகும் தமிழ் படங்கள் இலங்கைவர இரண்டு, மூன்று வருடங்களாகிய நிலைமை ஒரே நாளில் தலைகீழாக மாறியது.

கள்ளக் கடத்தல் மூலமாக வடமராட்சியின் கரையோரம் மூலமாகவும் கப்பல், விமானம் மூலமாகவும் இலங்கைக்குள் வீடியோ கசற்றாக சினிமா நுழைந்தது.

வீடியோ கசற் தொலைக்காட்சி, டெக் வாடகைக்குக் கொடுக்கும் வியாபாரம் பட்டி தொட்டியெங்கும் பரவியது.

இப்போதிருக்கும் ஆட்டோ அப்போது இல்லை. கார் அல்லது ரக்சியில் ஒலி பெருக்கி கட்டி ஊர்ஊராகத் திரிந்து இன்ன திகதியில் இந்த ஊரில் இந்தப் படம் காண்பிக்கப்படும். அதற்குரிய கட்டணம் இவ்வளவு என்று அறிவிக் கப்படும்.

தூர உள்ளவர்கள் சைக்கிள்களில் சென்றும் படம் பார்ப்பர். ஒரு படமாயின் இரண்டு ரூபாவும் மூன்று படமாயின் ஐந்து ரூபாவும் எனக் கட்டணம் வசூலிக்கப்பட்டது.

முக்கிய சந்திகளில் படம் காண்பிக்கப்படுவது பற்றிய அறிவிப்பு ஒட்டப் பட்டிருக்கும். கடையடி, கோயில் சந்தையடி என மக்கள் கூடும் இடமெங்கும் படம் காண்பிக்கப்படுவது பற்றியே கதையாகவிருக்கும்.

சிவராத்திரிக்கு கோயில்களில் பூசை, பஜனைகளில் சிலர் விரதமிருக்கப் பலர் சிவராத்திரி விசேட காட்சியில் விடிய விடியப் படம் பார்த்ததும் நிகழ்ந்தது.

ஆலயங்களின் திருவிழாக்களில் உபயகாரர்கள் திருவிழா முடிந்ததும் இரவு முழுவதும் படம் காண்பிக்கும் பழக்கமும் இருந்தது. திருமணம், மங்கைப் பருவ மங்கல நீராட்டு விழா, புதுமனை புகுதல் ஆகியவை இடம் பெற்றால் 3 ஆம் நாளோ, 4 ஆம் நாளோ இரவு முழுவதும் இலவசமாகப்படம் காண்பிப்பது ஒரு மரபாக மாறியிருந்தது. இவ் வழக்கம் இப்போதும் அங்கொன்றும், இங்கொன்றுமாக நிகழவே செய்கின்றது. அக்காலத் தில் ஆலய, சனசமூக, பாடசாலை வளர்ச்சி நிதிக்கு என்று படங்கள் காண் பித்து நிதி சேர்க்கும் வழககமும் இருந்தது.



இம் மாற்றங்கள் தியேட்டருக்கு இருந்த கவர்ச்சியை நிறையவே குறைத்து விட்டன.

இதனால் குடும்பமாகச் சென்று ஆற அமர இருந்து படம் பார்க்கும் நீண்ட நாள் வழக்கம் ஒன்று வேகமாகவே விடைபெறத் தொடங்கியது.

ரூபவாஹினியின் வரவின் பக்கம் மீண்டும் போவோம். கொழும்பில் தற்போதும் இருக்கும் பிரபலமான நகைக் கடையொன்றின் அனுசரணையில் ஒவ்வொரு புதன்கிழமை இரவும் சினிமாப்படம் காண்பிக்கப்பட்டது. தொலைக்காட்சி இருந்த மிகச் சிலரது

**-வே.தபேந்திரன்-**

வீடுகளில் ஊர்முழுதும் ஒன்று கூடிப்படம் பார்க்கும். எப்போதாவது இருந்து விட்டு தமிழ் நாடகம் காண்பிக்கப்படும். வாரம் ஒரு நாளில் கலை அரங்கம் எனும் நிகழ்வும் இடம் பெற்றது. மிகுதியாவும் சிங்கள நிகழ்ச்சிகள்தான். புதன்கிழமை இரவுப் படங்களில் எம் .ஜி.ஆர் நடித்த படங்கள் தவிர யாவரினது படங்களும் காட்டப்பட் டன. எம்.ஜி.ஆரைத் தவிர்த்தது. அக்கால அரசியலோ தெரியவில்லை. பார்த்த படங்களின் கதைகளைப் பாக்காதோருக்குச் சொல்லும் வழக்கமும் இருந்தது. 1983 ஜூலை மாத இனக் குழப்பங்களால் புதன்கிழமைப் படமும் அற்றுப்போனது.

இலங்கையில் தனியார் தொலைக் காட்சி அலைவரிசைகளுக்கு அனுமதி வழங்கும் முறை 1990களில் தான் வந்தது. அதுவரையில் அரசின் ஏகபோக மாகவே தொலைக்காட்சி இருந்தது.

ரூபவாஹினி வர முன்பு 1980 இல் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் போட் டிகளை என் சிறு பராயத்தில் 1981 இல் பாடசாலையில் வீடியோவில் பார்த்த ஞாபகம் நிழலாடுகிறது.

1976 இல் தான் செய்மதித் தொழி நுட்பத்தைப் பயன்படுத்தி கனடா நேரடி ஒளிபரப்பு முறையை அறிமுகம் செய்தது. ஆயினும் எமது நாட்டில் ரூபவாஹினி யின் வரவின் பின்னரான ஆண்டுகளில் தான் நேரடி ஒளிபரப்பு வந்தது.

1977ற்குப் பின்பு எம்மவர் நிறையப் பேர் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லத் தொடங்கினர். செல்வம் ஈட்டி 1980 முதல் தாயகம் திரும்பத் தொடங் கியபோது ரீ.வி.டெக்குடன் வந்தனர். ரூபவாஹினியை வட மாகாணத்தில் தெளிவாகப் பார்ப்பதற்காக கிளிநொச்சி கொக்காவிலில் தொலைத் தொடர்புக் கோபுரமொன்றும் அமைக்கப்பட்டது. இதனால் யாழ்ப்பாணத்து வீடுகளில் அன்ரனாக்கள் உயர எழும்பத் தொடங்கின.

இன்றைய கேபிள்கள்போல அன்றும் புதுவகை வியாபாரமொன்று முளைத் தது. தொலைக்காட்சி அன்ரனா மூலமாக சுமார் 4 கிலோ மீற்றர் வட்டாரத்துக்குள் படங்களை ஒளிபரப்புச் செய்யும் முறையே அது. ஒளிபரப்பு உரிமையா ளர்கள் அன்ரனா உள்ள வீடுகளுக்குச் சென்று காட் ஒன்றைக் கொடுத்து படம் பார்ப்பதற்காக மாத வாடகை வசூலிக் கும் வழக்கமும் இருந்தது.

அக்காலத்தில் வீடுக ளில் நிகழும் மங்கல நிகழ் வுகளைப் படம் பிடித்துக் கொடுக்கும் புதிய வகை வியாபார மொன்றும் உரு வாகியது. பிறந்த நாள் கொண்டாடுவதும் கட்டா யச் சடங் கென்ற நிலை உருவாகியது. வீடியோ எடுக்காமல் கொண்டாட் டமே இல்லை என்ற நிலையும் உருவாகியது. இன்று கீ பேத்டேயும் வந்துவிட்டது.

கோண்டாவில் வடக்கு இலங்கையிலேயே "வீடியோ கிராமம்" என்ற பெயரை எடுக்குமளவு அங்குள்ளோர் இத்தொழி நுட்பத்தில் பேர் பெற்றவர்களாகினர்.

பொது நிகழ்வுகளை எல்லாம் வீடியோவில் பதிவு செய்யும்வழக்கம் எங்கும் பரவியது.

மினி தியேட்டர், மினி சினிமா, நகர, கிராம வேறுபாடின்றி புது வியாபாரமாக உருவாகியது. சில தியேட் டர்கள்கூட மினி சினிமாக்களை உருவாக் கிப் பணம் உழைக்கும் காலமாற்றம் ஏற்பட்டது. இதேவேளை ஆபாசப் படங்கள் காண்பித்து பிடிபட்டுத் தண்டனை பெற்ற மினி சினிமாக்களும் உள்ளன.

1980, 1983 இற்கு பின்பு ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளை நோக்கிய எம்மவரின் புலம் பெயர்வு ஏற்பட்டது. அதன் பயனாக பண வரவுகள் வேகமாக உள்நிகழ ரி.விக்களும் அன்ரனாக்களும் பலரது வீடுகளில் முளைத்தன. 1990 ஜூனில் உள்நாட்டு யுத்தம் மீண்டும் தொடங்கியது. மின்சாரம் இல்லாத யாழ்ப்பாணமாகியது. இறுக்கமான பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது.

தேவைதான் கண்டு பிடிப்புக்க ளின் தாய் என்பார்கள்.

அதுபோல சைக்கிள் டைனமோ வினைச் சுழற்றி றேடியோ கேட்பதும், ரி.வி.பார்ப்பதும் எமக்கு அறிமுகமா கியது. ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் பெற்றுப்படம் பார்த்ததும் நிகழ்ந்தது.

1996 இல் நிலப்பரப்பில் மீதான ஆளுகை கைமாறியதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கு மின்சாரம் மீளவும் படிப்படியாக வந்தது. அப்போது 'டிஷ்' அன்ரனாக்களைப் பாவித்து இந்திய தமிழகத்து அலைவரிசைகளையும் சர்வதேச அலைவரிசைகளையும் பார்க் கும் புதிய முறை உருவாகியது.'டிஷ் அன் ரனாக்களின்' வருகையால் கொழும்பிலி ருந்து ஒளிபரப்பாகும் தேசிய தொலைக் காட்சிகளின் செல்வாக்கு மங்கியது.

கேபிள் மூலமாக இணைப்புக்களை வழங்கும் புதிய வியாபாரமொன்றும் உருவாகியது. ஆயிரக் கணக்கில் கேபிள் இணைப்புக்களை வழங்கி அதனைப் பராமரிக்கத் தனியாக ஆள்களை வேலைக்கு வைத்திருப்போரும் உள் ளனர். தொலைபேசிக் கம்பங்களும், மின்சாரக் கம்பங்களும் கேபிள் இணைப் பாளர்களுக்குக் கைகொடுத்தன.

கேபிள் இணைப்பு மூலமாக அல்லது 'டிஷ்' அன்ரனா மூலமாக தொலைக்காட்சி பார்க்கும் முறை வந்தபோது சின் னத்திரை தொடர் நாடகங்கள் பார்க்கும் புதுப்பழக்கம் மக்களைத் தொற்றியது. சின்னத்திரை நடிகர்களும் நட்சத்திர அந் தஸ்துப் பெற்றனர். பெரிய திரை நடிகர்க ளும் சின்னத்திரைக்குப் போனார்கள்.

போதைவஸ்துப்போல மயக்கும் அந்த நாடகங்கள் மக்களை வசீகரித்து விட்டன. வீடுகளிலும், அலுவலகங்களிலும், பொது இடங்களிலும், தொடர் நாடகங் களைப் பற்றிய கதையாகியது.

மின் தடை வந்தால் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் பெற்றுத் தொடர் நாட கங்களைச் சிலர் பார்க்கும் அளவுக்கு ஆள்களை மயக்கிவிட்டது.

2008 நவம்பரில் நிஷா சூறாவளி அடித்து ஒருவாரம் மின்சாரம் இல்லாத போது தொடர் நாடகங்களுக்கு அடி மையானோர் பட்டபாடு சொல்ல முடியாது. ஜெனரேட்டரைப் பயன்படுத்தி தொடர் பார்த்த சிலரும் உள்ளனர். குடும்பப் பெண்கள், முதியோர் வெளியிடங்களில் போவதைக் கூடியளவு தவிர்த்து வீடுக ளுக்குள் தொடர் நாடகம் பார்க்கப் பிரியப் பட்டனர். இதைப் பார்ப்பதற்காக உழைக் கப் பஞ்சிப்பட்ட ஆண்களும் உள்ளனர்.

குடும்பப் பெண்கள் இரவு உண வாக பாண் அல்லது பிட்டு தயாரிப் பதற்கே விரும்பும் வழக்கம் உருவா கியது. தோசை, இடியப்பம், இட்லி, அப்பம் போன்றவை தயாரிப்பதனால் ரீ.வி. தொடர்ச்சியாகப் பார்க்க முடியாது என்பதே அதற்குக் காரணம்.

பிட்டென்றால் மாவைக் கொத்திக் கொத்தியே பார்க்கலாம். பின் அடுப்பில் வைத்து விட்டும் பார்க்க முடியுமல்லவா? (உஷ் சிரிக்காதீர்கள்) கோயில்களில் இரவுத் திருவிழாவுக்குச் செல்லும் பக்தர் களின் தொகையும் வீழ்ச்சியடைந்தது.

தேர்த்திருவிழா என்றால் கூட முற்பகல் 10 மணிக்குள் முடித்துவிட்டு தொடர்பார்க்க ரகசியமாக ஓட்டம் பிடிப்போரும் உள்ளனர்.

கல்வியில் சாதனை படைக்கும் மாணவரின் பெற்றோரைக் கேட்ட போது தங்கள் வீட்டில் மாலை 6 மணி முதல் இரவு 8.30 மணிவரையும் ரீ.வி. போடாமல் கல்வியினைக் கவனிப் பதே காரணமென்கிறார்கள்.

ஏனைய பெற்றோர்களே! இதனை நீங்களும் பின்பற்றிப் பாருங்களேன்.

கேபிள் இணைப்பு மூலம் 24 மணி நேரமும் சினிமா படம் தரும் அலை வரிசையும் உள்ளது. நாளுக்கு இரு படம் தரும் அலைவரிசையும் உள்ளது.

இவற்றின் வருகையும் சி.டி பிளேயர், டி.வி.டி பிளேயர் எம்.பி 4 ஆகியவற்றின் வருகையும் சினிமாத் தியேட்டர்களுக்கு மூடு விழா ஏற்ப டுத்தி விட்டது.

டெக், வீடியோ, கசற் என்பவை நூதனசாலையில் பார்க்கும் காலம் வருமெனக் கூறுமளவுக்கு அவையும் வழக்கொழிந்து போகின்றன.

கேபிள், சி.டி, டி.வி.டி வருகை மாணவர்களின் கல்வித் தரத்தை மோசமாகச் சீரழித்து விட்டதென கல்வி யியலாளர் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்திய தமிழகத்திலிருந்து வந்த பலர் கூறினார்கள்: அங்கு ஏராளம் தொலைக் காட்சி அலைவரிசைகள் இருக்கின்றன. ஆயினும் அங்கு மாணவரின் கல்வி அக் கறை, கல்வித் தரம் என்பவை உயர்வா கவே உள்ள தென்கிறார்கள். இங்கு மட் டும் ஏன் இந்த நிலை? தொடர் நாடகங் களில் விளம்பர இடைவேளை வரும்போது தான் வீடுகளில் உள்ளோருக்கு சாப் பாடு, தேநீர் கொடுக்குமளவுக்கு அவை எம்மவரைக் கட்டிப் போட்டுவிட்டது.

போதாக்குறைக்கு மடிக் கணனி, கணனி மூலமாகவும் படம் பாக்கு மளவுக்கு தொழில் நுட்பம் எகிறிப் பாய்ந்து வருகின்றது. விஞ்ஞான தொழில்நுட் பத்தின் வேகமான வளர்ச்சியும் அவை மலிவு விலையில் கிடைப்பதும் மக்களின் வாழ்க்கை முறையையும் பழக்க வழக்கங் களையும் மாற்றி வருவதை மேலே பார்த்தோம்.

வாழ்ந்த வாழ்வின் சுவடுகள் மீது மீண்டும் நடந்து பார்ப்பது ஒரு சுக அனுபவமல்லவா. தொழில் நுட்பங் களின் வரவுகளையும் எமது வாழ்க் கைக்கோல மாற்றங்களையும் பட்டியல் இட்டுள்ளேன்.

தெரியாத தலை முறையொன்று தெரிந்து கொள்வதுடன், எமது வாழ்க்கை முறையும் ஆவணமாகி விடுமென்று இங்கே பதிவு செய்துள்ளேன். ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி நடமாடும்சேவை மூலம் பலன் எதுவும் கிடைக்கவில்லை

## கலந்துகொண்ட மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜூலை13

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் நடமாடும் சேவை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் காலை 9.30மணியளவில் ஆரம்பமான இந்த நடமாடும் சேவையில், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர, பிரதி அமைச்சர் காமினி விஜிதமுனி சொய்சா, அமைச்சின் உயரதிகாரிகள், கிளிநொச்சி அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், செயலக உயரதிகாரிகள், பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யுத்த காலத்தில் ஏற்பட்ட இழப்புக்கள், அங்கவீனங்கள், சொத்து இழப்புக்கள் போன்றவற்றிற்கான இழப்பீடுகளை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. இவற்றை ஏராளமான பொதுமக்கள் பெற்று பூர்த்தி செய்த பின்னர் மீள ஒப்படைத்தனர்.

தடுப்பு முகாம்களில் உள்ளவர்கள், காணாமல் போனவர்கள் தொடர்பான விண்ணப்பங்களை அமைச்சரும், பிரதி அமைச்சரும் நேரில் பெற்றுக்கொண்டனர்.

மீள் குடியேற்ற அமைச்சின் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டு மீள்குடியேறிய மக்களுக்கான தற்காலிக வீடுகள் வழங்கப்படாமை, கொடுப்பனவு வழங்கப்படாமை, வாழ்வாதார உதவிகள் வழங்கப்படாமை போன்ற பிரச்சினைகளைக் கேட்டறிந்து விண்ணப்பங்களையும் பெற்றுச் சென்றனர்.

புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்கள் அனைவரும் இன்னும் மூன்று மாதங்களில் விடுவிக்கப்படுவரென அமைச்சர் டியூ குணசேகர கூறினார்.

ஏதாவது உடனடித் தீர்வு கிடைக்குமென எதிர்பார்த்து வந்த மக்கள் பின்னர் அறிவிக்கப்படலாம் என்ற அறிவிப்புக்களால் ஏமாற்றமடைந்து செல்வதைக் காண முடிந்தது. (க-405)




## முதியோர் நடமாடும் சேவை

கிளிநொச்சி,ஜூலை 13

முதியோர்களுக்கான நடமாடும் சேவையொன்று இன்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இன்று காலை 8.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணிவரை இந்த முதியோர் நடமாடும் சேவை நடைபெறும். இதனை சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.

இதில் முதியோர் அடையாள அட்டை வழங்குதல், சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ஊக்குவிப்பு நிதி வழங்குதல், மற்றும் முதியோர் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கான முன்னெடுப்புக்கள் என்பன மேற்கொள்ளப்படவிருக்கின்றன. (க-405)

## நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை கிளிநொச்சியில் இயங்க நடவடிக்கை

கிளிநொச்சி , ஜூலை 13

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை கிளிநொச்சியில் மீண்டும் தனது பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இதன் முதற்கட்டப் பணிகளாக கரடிப்போக்குச் சந்தியில் உள்ள சபையின் அலுவலகத்தைப் புனரமைக்கவுள்ளது. அத்துடன் அந்தப் பகுதிகளில் உள்ள நீர்த் தாங்கிகளைத் துரித கதியில் புனரமைப்புச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாங்கிகளை புனரமைப்புச் செய்வதன் மூலம் கிளிநொச்சி நகர மக்களுக்கு முதற்கட்டமாக குழாய் மூலம் குடிநீரை விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (6-224)

## ஏ-9 வீதியூடான பயணத்திற்கு புதிய நடைமுறை; வன்னிக்கான ஐ.நாவின் பணிகள் முடக்கம்

கொழும்பு, ஜூலை13

ஏ-9 வீதியூடாக வன்னிப் பிரதேசத்திற்கு செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள புதிய பிரயாண நடைமுறை காரணமாக ஐ.நா. நிறுவனங்களால் வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் மனிதாபிமானப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. நிறுவனங்களுக்கு சொந்தமான வாகனங்கள் மட்டுமல்ல ஜனாதிபதிச் செயலகக் குழுவின் அனுமதியைப் பெற்ற உள்ளூர் சர்வதேச தொண்டு நிறுவனங்களுக்குரிய வாகனங்களும் வன்னிப் பிரதேசத்திற்குச் செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டுமென்ற புதிய பிரயாண நடைமுறை அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் இந்த நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் வன்னிப்பகுதிக்குச் சென்று பணியாற்ற முடியாமல் ஒரு வாரத்திற்கு மேலாக முடங்கியுள்ளனர். இதன் காரணமாகவே இவர்களால் வன்னிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்த மனிதாபிமானப் பணிகள் யாவும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

உலக உணவுத்திட்டத்தினால் வழங்கப்படும் உணவுப்பொருள்கள் கூட்டுறவுச் சங்க லொறிகள் மூலமாக வன்னிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. (க)

## மாவடி அம்மன் ஆலயத்தில் நித்திய பூஜைகள் ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூலை 13

கிளிநொச்சி, இராமநாதபுரம், மாவடி அம்மன் ஆலயத்தில் ஜூலை 6 ஆம் திகதி முதல் நித்திய பூஜைகள் ஆரம்பமாகி சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

ஜூலை 5 ஆம் திகதி கிரியைகள் இடம்பெற்று சாந்தி நடைபெற்று, 6 ஆம் திகதி பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று நித்திய பூஜைகள் ஆரம்பமாகியுள்ளன.

இராமநாதபுரம் பகுதியில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் இந்த ஆலயத்தில் நித்திய பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பெருமளவானோர் ஆலயப் பூஜையில் கலந்துகொள்வதாகக் கூறப்படுகின்றது. (எ-405)

## மன்னாரில் சகல பொருள்களும் அதிகரித்த விலையில் விற்பனை

மன்னார்,ஜூலை 13

யுத்தம் நிலவிய காலங்களில் மன்னாருக்கு வரும் சகல பொருள்களும் மதவாச்சியில் இறக்கப்பட்டுப் பின் வேறு லொறிகளில் ஏற்றப்பட்டு மீண்டும் பறையனாலங்குளத்தில் இறக்கப்பட்டு மீண்டும் ஏற்றப்பட்டு சில வேளைகளில் உயிலங்குளத்திலும் இறக்கியேற்றப்பட்டே அங்கு போய்ச் சேர்ந்தன. அதன் விளைவாக அதிகரித்த விலைக்கே விற்கப்பட்டன. மக்களும் நிலைமையறிந்து இப்பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.

தற்போது நிலைமை முற்றாக மாறிவிட்டது. கொழும்பு மற்றும் தம்புள்ளையிலிருந்து சகல பொருள்களும் எவ்விதத் தடங்கல்களுமின்றி அன்றைய தினமே இங்கு வந்து சேர்கின்றன. இருந்தாலும் அதிகரித்த விலையில் ஒரு சதந்தானும் இங்கு குறைக்கப்படவேயில்லை. இதன் விளைவாக மன்னார் மக்கள் இன்னும் அதிகரித்த விலைகளிலேயே உணவுப் பொருள்கள், வீட்டுப் பாவனைப் பொருள்கள், இலத்திரனியல் பொருள்கள், இறைச்சி மற்றும் மரக்கறி வகைகளை வாங்குவதாகப் புகார் தெரிவிக்கின்றனர்.

விலங்கு வேளாண்மைக்குப் பெயர் போன மன்னாரில் ஒரு கோழிப் பண்ணை கூட இங்கு இல்லை. இதனால் கோழி இறைச்சி மதவாச்சி, வென்னப்புவ, கொற்றமுல்ல ஆகிய இடங்களிருந்தே இங்கு கொண்டு வரப்படுகின்றது. (50-80)

## இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூலை 13

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் சங்கீதம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பயிற்சி வகுப்புக்கள் கடந்த 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதாக கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி ஐ.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

ஒரு வருடகாலத்தைக் கொண்ட இப் பயிற்சி நெறிகள் சனி, ஞாயிறு, விடுமுறை நாள்களில் பாடசாலை மாணவர்களுக்கும் ஏனைய நாள்களில் மற்றவர்களுக்குமான பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விரைவில் கணனிப் பயிற்சிகள் மற்றும் தொழிற்பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் கூறப்படுகின்றது. (50-405)

## நெடுங்கேணி அஞ்சல் அலுவலகத்துக்கு அடிக்கல் நடும் வைபவம் நாளை

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சின் உதவியுடன் நெடுங்கேணி அஞ்சல் அலுவலகம் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இந்த அஞ்சல் அலுவலகத்துக்கான அடிக் கல் நடும் வைபவம் நாளை புதன்கிழமை நடைபெறும் என்று வடமாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு தெரிவித் தார்.

அதேவேளை நாணாட்டான், யோகபுரம் போன்ற தபாலகங்களின் கட்டுமாணப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன-என்றார். (50-224)










அண்மையில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விளையாட்டு நிகழ்வின் இடைவேளையின்போது இசையும் அசைவும் நிகழ்வு இடம்பெறுவதை முதல் படத்திலும், சிறுவர்கள் போட்டிக்குத் தயாராக இருப்பதை இரண்டாவது படத்திலும், விருந்தினர்களான வடமாகாண விளையாட்டுப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, ஓய்வு பெற்ற கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் வ.யோகநாதன், பிரதேச இராணுவ அதிகாரி, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, பாடசாலையின் அதிபர் அ.பங்கையற்செல்வன் ஆகியோர் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும், விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற இளங்கோ இல்லத் தலைவர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜாவிடம் இருந்து கேடயத்தைப் பெற்றுக் கொள்வதை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: கிளிநொச்சிச் செய்தியாளர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலும் தெற்கிலும் உள்ள முற்போக்குச் சக்திகள் நாட்டின் நன்மை கருதி ஒன்றிணைய வேண்டும்

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் டியூ குணசேகர

யாழ்ப்பாணம்,ஜூலை 13

நாட்டின் நன்மை கருதி வடக்கிலும் தெற்கிலும் உள்ள முற்போக்கு சக்திகள் இணைய வேண்டிய தருணம் இதுவாகும்.

இவ்வாறு தெரிவித்தார் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான டியூ குணசேகர.

கடந்த 10ஆம் திகதி யாழ்.ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் இடம் பெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் 67ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியின் 67ஆம் ஆண்டு இம்மாதம் 3ஆம் திகதி நிறைவு பெறுகிறது. இதனை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் வருட நிறைவு நிகழ்வை நடத்துகின்றோம்.

வடக்கில் கட்சிக்கு பணியாற்றியவர்களையும் கட்சியை ஆரம்பிப்பதற்கு உறுதுணையாக இருந்தவர்களையும் நாம் இத்தருணத்தில் பெருமையுடன் நினைவு கூருகின்றேன். வடக்கில் மேலும் பலர் எமது இடதுசாரி அமைப்புடன் சேர்ந்து கொண்டுள்ளனர்.

இன்று வடக்கில் மீண்டும் பல துன்பகரமான சம்பவங்களுக்கு மத்தியில் அரசியல் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம். இச்சந்தர்ப்பத்தில் நடந்து முடிந்த கசப்பான சம்பவங்களை நான் நினைவுகூர விரும்பவில்லை. எமது கட்சி 67 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. 1920இலிருந்து கட்சி வரலாறு ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் காலத்திலிருந்து ஆரம்பம் இடம் பெற்றது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் ஹன்டி பேரின்பநாயகம் தலைமையில் அன்று உதயமானது. அகில இலங்கை இளைஞர் காங்கிரஸ் 1931ஆம் ஆண்டில் உதயமானது.

சூரியமல் அமைப்பு 1933 இல் ஆரம்பமானது. இலங்கை சமசமாஜக் கட்சி 1935 இல் ஆரம்பிக்கப்பட்டது. இவை அனைத்தும் அந்நிய நாட்டு சக்திகளுக்கு எதிர்க்கும் முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பமானவையாகும். 1917ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஒக்ரோபர் புரட்சி ஆசிய மக்களை விழிப்படையச் செய்ததுடன் சுதந்திரத்திற்காக போராடவும் தூண்டியது. பொன்னம்பலம் அருணாசலமே முதன் முதலில் ஒக்ரோபர் புரட்சி தொடர்பான செய்தியை இலங்கை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தினார் என்பதனை சிலர் அறிவார்கள். இதன் காரணமாக இவர் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிரானவராக இனங்காணப்பட்டார்.

நாம் கடைசியாக 1976ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தோம். அன்று காங்கேசன்துறை தேர்தல் தொகுதிக்காக இடம்பெற்ற இடைத் தேர்தலில் வி.பொன்னம்பலத்தை வேட்பாளராக நிறுத்த அச்சந்தர்ப்பத்தில் அங்கு வந்தோம்.

நாம் பல சந்தர்ப்பங்களை சரித்திரத்தில் தவறவிட்டுள்ளோம். இத்தகைய தவறுகளை மீண்டும் நாம் செய்துவிடக்கூடாது. தேசிய இணக்கப்பாடு எட்டப்படவில்லை. இதுவே நாம் விட்ட முக்கிய தவறுகளாகும். இன்றும் நாம் அதனையே செய்கின்றோம். கட்சி என்ற ரீதியில் நாம் தேசிய விடயம் தொடர்பாக பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளோம்.

ஐக்கிய இலங்கைக்குள் பிராந்திய அதிகாரப் பகிர்வை (உதாரணமாக அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுதல்) முதன் முதலில் நாட்டிற்குள் அறிமுகப்படுத்தியது. 1944ஆம் ஆண்டில் சமூக, பொருளாதார கலாசார உறவுகள் தொடர்பில் இந்த விடயம் முன்வைக்கப்பட்டது.

இந்த நாடு சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து ஆட்சியில் இருந்தவர்கள் அரசியல் ரீதியாக சுயநல அரசியல் மற்றும் குறுகிய மனப்பான்மையுடன் செயற்பட்டதன் காரணமாக வரலாற்று ரீதியான பல்வேறு தவறுகளை இழைத்துவிட்டனர். இதனால் தேசத்தை கட்டியெழுப்புகின்ற வாய்ப்பு தவறவிடப்பட்டது. அதேநேரம் வடக்கில் இருந்து செயற்பட்ட தமிழ் காங்கிரஸ் மற்றும் சமஷ்டி கட்சியினரும் ஒரே கட்டமைப்பிற்குள் இருந்தவாறும், அவர்களது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறும் தங்களது அரசியல் தாற்பரியம் மற்றும் வகுப்பு ரீதியான உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

அவர்கள் பல்வேறு விடயங்கள் குறித்து எதிர்ப்புத் தெரிவித்தனர். விவசாய நெற்காணி சட்டமூலம், சர்வதேச விருப்பத்திற்கு அமைய தேசிய மயமாக்கல், போக்குவரத்து துறையில் தேசிய மயமாக்கல், துறைமுகம், அதேபோன்று இந்திய வம்சாவளி மக்களை இந்நாட்டில் தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளக்கூடிய பிரஜா உரிமை சட்டமூலம் போன்ற விடயங்கள் எல்லாம் மாறுபட்ட நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தன.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் கம்யூனிஸ் கட்சியினரும் லங்கா சமசமாஜ கட்சியினரும் எப்போதும் உறுதியான ஒரு நிலைப்பாட்டில் இருந்து வந்துள்ளோம். இதனால் வடக்கிலும், தெற்கிலும் தீவிரவாதிகளினால் பல்வேறு தாக்குதல்களுக்கும் முகம் கொடுக்க நேரிட்டது.

வடபகுதியில் தேசிய ஒற்றுமையையும் ஜனநாயகத்தையும் விரும்பிய இடதுசாரி அரசியல் கட்சிகள் ஒதுக்கித் தள்ளப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டன. மிதவாத தமிழ் தலைவர்களும் விட்டு வைக்கப்படவில்லை.

13ஆவது திருத்தத்திற்கு ஆதரவு தெரிவித்தவர்களும் வடபகுதி பயங்கரவாதிகள் மற்றும் தென்பகுதி பெரும் போக்காளர்கள் ஆகியோரின் கைகளிலிருந்து தப்ப முடியவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 48 பேர் ஜே.வி.பி.யினாலும் 6 பேர் புலிகளாலும் கொல்லப்பட்டனர்.

தமிழர்களுக்கு எதிராகவும் இந்தியர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் புலிகளுக்கு எதிரான அரசியல் கோட்பாட்டை கடைப்பிடித்தும் ஜே.வி.பி.யினரும் ஹெல உறுமயவினரும் நடவடிக்கை மேற்கொண்ட போதிலும், 30 வருடகால வரலாற்றில் புலிகள் அவர்கள் மீது எந்தவித தாக்குதலையும் மேற்கொள்ளவில்லை.

வெவ்வேறு தரங்களைச் சேர்ந்த தீவிரவாதிகள் தங்களது சொந்த நன்மை கருதி பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் போக்கை கடைப்பிடித்து வந்ததை வரலாறுகள் தெரிவிக்கின்றன.

வடக்கிலும் கிழக்கிலும் தீவிரவாதிகளும் மேற்போக்காளர்களும் இடதுசாரி இயக்கத்தையும் முற்போக்கு சக்திகளையும் பயணம் வைத்தே முன்னேறி வந்துள்ளனர். இதன் காரணமாக நாட்டில் சமநிலை இழக்கப்பட்டது.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான வழியாக பயங்கரவாதத்தையோ அல்லது வன்செயல்களையோ எமது கட்சி ஆதரிக்கவில்லை. எமது கைகளில் இரத்தக்கறை படியவில்லை. எமது கட்சி தேசாபிமானம் மிக்க சர்வதேச அடிப்படையிலான ஒரு கட்சியாக இருந்து வந்துள்ளது.

20 வருடகாலத்தில் உலகம் பாரிய மாற்றங்களைத் தந்துள்ளது. முக்கியமான மாற்றங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. முதலாளித்துவத்தின் கோட்டைகள் எனக் கருதப்படும் அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பாவும் நாம் எதிர்பார்த்ததையும் பார்க்க துரிதமாக வீழ்ச்சியடைந்து வருகின்றன.

உலகப் பொருளாதாரத்தில் ஆசியாக் கண்டம் முன்னிலை வகிக்கிறது. சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் பொருளாதார ரீதியில் பாரிய முன்னேற்றம் கண்டு வருகின்றன. இதேவேளை 13 இடதுசாரி அரசாங்கங்களுடன் லத்தீன் அமெரிக்கா மறுமலர்ச்சி கண்டுள்ளமை லத்தீன் அமெரிக்காவின் அரசியல் வரைபடத்தையே மாற்றியமைத்துள்ளதை அடுத்து அமெரிக்கா தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆபிரிக்கக் கண்டத்தை ஜனநாயகப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன. ஆபிரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலும், ஆபிரிக்காவுக்கும் லத்தீன் அமெரிக்காவுக்கும் இடையிலும், ஆபிரிக்காவுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இடையிலும் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆசியாவுக்கும் யூரோ ஏஷி யாவுக்கும் இடையிலும் ரஷ்யா - சீனா - இந்தியா என்பவற்றுக்கும் இடையில் தொடர்புகள் ஆரம்பித்துள்ளன.



புதிய பொருளாதார நாடுகளான பிரேஸில் இந்தோனேசியா, தென்னாபிரிக்கா, ஆர்ஜென்ரீனா ஆகிய நாடுகள் முன்னணி நிலைக்கு வந்துள்ளன. சர்வ வியாபியான டொலரின் செல்வாக்கு பலமிழந்துள்ளது. உலக நாடுகளின் வெளிநாட்டு நாணய மாற்று றிசேவ்களில் 75 சதவீதமானவை அபிவிருத்தியடையும் நாடுகளுக்கு சொந்தமானவை. உலக வெளிநாட்டு நாணயமாற்று றிசேர்வில் மூன்றில் ஒரு பங்கு சீனா வசமுள்ளது.

உலக நாடுகள் மத்தியில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளில் புதியதான உண்மை நிலை இவையாகும். இதன் காரணமாகவே இலங்கை சம்பந்தமாக மேற்கு வல்லரசுகள் தங்களது சொந்த விருப்பத்தின்படி நடந்து கொள்ள முடியாமலும் சொந்த விருப்பத்தை திணிக்க முடியாமலும் உள்ளன. இதனை ஏற்றுக்கொள்வதற்கு பிரபாகரன் தவறியிருந்தார்.

உலகின் இடதுசாரி இயக்கம் மறுமலர்ச்சி கண்டுள்ளது. உலக நாடுகள் மத்தியில் இடதுசாரி உலக மயமாக்கலும் முற்போக்கு சக்திகளின் அதிகாரமும் இன்று மேம்பாடு கண்டுள்ளன. எனவே, சர்வதேச மற்றும் தேசிய அரசியல் சூழல் எமக்கு சாதகமாகவுள்ளது. வடக்கிலும் தெற்கிலுமுள்ள முற்போக்கு மற்றும் ஜனநாயக சக்திகள் இணைந்து பணியாற்ற வேண்டிய தருணம் இதுவாகும். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 67ஆவது ஆண்டு நிறைவின் போது வடபகுதி மக்களுக்கு விடுக்கப்படும் செய்தி இதுவே - என்றார். (50)

# உண்ணாவிரதப் போராட்டங்களில் கோமாளிகளை ஈடுபடுத்தாதீர்கள்

## அரசிடம் ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 13

கோமாளிகளை உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபடுத்த வேண்டாம் என அரசிடம் ஐ.தே.க. கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு தொடர்பான சர்ச்சைக்கு இராஜதந்திர ரீதியிலான அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ஸவை தாம் இழிவுபடுத்த முயற்சிப்பதாக பிரதி அமைச்சர் வீரகுமார திஸாநாயக்க வெளியிட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் சாகும் வரையில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றபோது, கட்சியின் பிரதி அமைச்சர் உணவு உட்கொண்டு வந்தார் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழுவிற்கு தமது கட்சியும் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற போதிலும், அதனை இராஜதந்திர முறையில் அணுகவே விரும்புகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாறாக கோமாளிகளை உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபடுத்துவதால் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)


## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்:
20.07.1933

விண்ணில்:
13.07.2009

திருமதி செல்வமணி லூசியா லியோ
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை உங்கள் பிரிவின் துயர்
சிலுவை நிழல் உங்கள் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவீர்

Dr.சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (100913)

மருமகன் - ராசகுமார்
மகள்மார் - லொலிற்றா,யோகமலர்.

## விற்பனைக்கு

நல்லூர், நாவலர் வீதிக்கு அண்மையில் 3½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 0789136878 (100517)

## தரம் 5 மாணவர்களுக்கான
## மாபெரும் புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்கு -2010

24ஆம், 25ஆம் திகதிகளில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில்
"வித்தியா கீர்த்தி சிறிசம்மான"
மட்டுநகர் ந.சந்திரகுமார்
ஆசனம் மற்றும் ஒழுங்கமைப்பு செய்தல் பொருட்டு 15.07.2010க்கு பின் பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

Mathuram Institute
Dutch Road, Irupalai Kopay South.

## எழுதுவினைஞர் தேவை

உயர் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு ஆங்கில, கணனி அறிவுடைய பெண் எழுதுவினைஞர் தேவை. ஜூலை 14, 15ஆம் திகதிகளில் நேரில் வரவும்.

CAPSTONE
No.01, Brown Road, Jaffna.
Tel: 0779148753, 0777883084

**BIT New Batch registration** MIS
முடிவுத்திகதி 31.07.2010
1st, 2nd, 3rd year and final project
அடிப்படையிலிருந்து முற்று முழுதாகக் கற்பதற்கு...
MM Projector, Broadband facility
# 74, Sabapathy Lane, Thalaiyaali, pirambady,Jaffna. Director
TPNo: 0776577359

## இதய அஞ்சலி



ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் குடும்பநல உத்தியோகத்தராகப் பணியாற்றி வேலணைப் பிரதேச வைத்தியசாலையில் கடந்த (10.07.2010) அன்று அகால மரணமடைந்த குடும்பநல உத்தியோகத்தர்

செல்வி சரவணை தர்சிகா

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கம்,
யாழ்.மாவட்ட கிளைச் செயலகம்,
இல.40, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (100511)

தலைவர், செயலாளர்,
செயற்குழு உறுப்பினர்கள்
மற்றும் அங்கத்தவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட செயலகத்தின் உதைபந்தாட்டம்

# தீபன், தசரதனின் அதிரடிக் கோல்களினால் சம்பியனானது உடுவில் பிரதேச செயலகம்!

வலி.வடக்கு, ஜூலை 13

தீபன், தசரதன் அடித்த அதிரடிக் கோல்களினால் உடுவில் பிரதேச செயலக உதைபந்தாட்ட அணி யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவுப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் உடுவில் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டதுடன், பார்வையாளர்களின் விமர்சனங்களுக்கும் அணிகள் உள்ளாகின.

முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெறும் வாய்ப்புக்கள் பல கிடைத்த போதிலும் இரு அணிகளும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த தவறிய நிலையில் ஆட்டம் சம நிலையில் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் புதிய உத்வேகத்துடன் களமிறங்கி மோதிக்கொண்டதுடன், கோல் பெறும் வாய்ப்புக்களையும் தவறவிட்ட வண்ணம் இருந்தார்கள்.

இந்த நிலையில் உடுவில் பிரதேச செயலக அணியின் முன்கள வீரர் தீபன் தனக்குக் கிடைத்த பந்தை அடித்து ஒரு கோலைப் பெற்றுக்கொண்டார். இது உடனடியாக சர்ச்சைக்குள்ளாகிய போதிலும் பக்க நடுவர் சரியான முடிவை எடுத்து நடுவர் கோல் என உறுதிப்படுத்தினார்.

தொடர்ந்து இரு அணிகளும் விளையாடிய போதிலும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி பல கோல்களை உரிய முறையில் அடிக்கத் தவறிய வண்ணம் இருந்த நிலையில் மேலும் ஒரு கோலை தசரதன் தனது அணிக்குப் பெற்றுக் கொண்ட நிலையில் பருத்தித்துறைப் பிரதேச செய லக அணியின் பின்கள வீரர்கள் பந்தை முன்னுக்கு அடித்துக் கொடுத்தும் முன்கள வீரர்கள் சந்தர்ப்பத்தைத் தவற விட்டனர்.

ஆட்ட நிறைவில் உடுவில் பிரதேச செயலக அணி 02:00 என்ற கோல் கணக்கில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியை வெற்றிபெற்று யாழ்.மாவட்ட சம்பியனாகியது. (86)

## 'தியாகிகள்'தின வெற்றிக் கிண்ண ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

தியாகிகள் தினத்தையொட்டி பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பினர் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை புதன்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* பி.ப. 3.45 மணி எவரெஸ்ட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணி களமிறங்குகின்றது.
* பி.ப. 5 மணி இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி களமிறங்குகின்றது. (இ-23)




## குமரன் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்டம்; ஆவரங்கால் மத்திய வி.க. அணி சம்பியன்!

யாழ்ப்பாணம், ஜூலை 13

கைதடி மேற்கு குமரன் விளையாட்டுக் கழகத்தின் 28ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியில் இடம்பெற்று வந்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட போட்டியாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டது. (6-23)

## 190 ஓட்டங்களினால் யூனியன் வி.கவை வென்றது யாழ்.பல்கலைக்கழக அணி!

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் வீ.டி.ஜெயரட்ணசிங்க வெற்றிக் கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் பந்து பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி 190 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கடந்த சனிக்கிழமை யாழ்.பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற அரை இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியும் யூனியன் விளையாட்டுக்கழக அணியும்மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணியினர் 44 ஓவர்கள் நிறைவில் 279 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செல்ரன் 37 ஓட்டங்களையும், தசிதன் 32 ஓட்டங்களையும் ரம்மியராகுலன் 54 ஓட்டங்களையும், ஜனார்தனன் 47 ஓட்டங்களையும், சிறி றஜீவன் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

280 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களமிறங்கிய யூனியன் விளையாட்டுக் கழக அணியினர் 31:2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் தர்சன் 21 ஓட்டங்களையும், ஜோன்சன் 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ்.பல்கலைக்கழக அணி வீரர்களான ஜனார்த்தனன் 3 விக்கெட்டுக்களையும், திவாகரன் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (6-23)

## சென்.பற்றிக்ஸை 3 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டது யாழ். மத்திய கல்லூரி!

யாழ்ப்பாணம் ,ஜூலை 13

யூலியஸ் கனிஸ்ரனின் நிதானமான ஆட்டத்தினால் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை மூன்று விக்கெட்டுக்களினால் வெற்றி கொண்டது யாழ். மத்திய கல்லூரி அணி.

இலங்கை துடுப்பாட்ட சங்கத்தினால் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 15 வயது பிரிவினர்களுக்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றனர். பிறங்கிளின் 20 ஓட்டங்களையும் பிரசாந் 13 ஓட்டங்களையும் கஜேந்திரன் 18 ஓட்டங்களையும் கபிலன் 13 ஓட்டங் களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.உதிரிகளாக 47ஓட்டங்கள் கிடைத்தன.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர் யூலியஸ் கனிஸ்ரன் 10 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களைப் பெற்று மூன்று விக்கெட்டுக்களையும் சமிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் ஜெயந்திரன் மூன்று ஓவர்கள் பந்து வீசி ஆறு ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் பெனசியஸ் 5 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 142 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என களம் இறங்கிய யாழ்.மத்திய கல்லூரி 38 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கான 142 ஓட்டங்களை பெற்றது.

இதில் யூலியஸ் கனிஸ்ரன் ஆட்டம் இழக்காமல் 58 ஓட்டங்களையும் சஞ்சேயன் 11 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 46 ஓட்டங்கள் கிடைத்தன.பந்து வீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களான கஜேந்திரன் ஆறு ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களை கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வினுசாந் 7 ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் எடிசன் 4 ஓவர்கள் பந்து வீசி, 25 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் எட்வின் ஒன்பது ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களை கொடுத்து ஒரு விக்கெட்டையும் நிஷந் 10 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்கள் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (6-23)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு ,ஜூலை 13

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்குகளான யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குகளில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* வடமராட்சி வல்வை விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்ப்பாணம் பாரதி விளையாட்டுக்கழகம்.
* பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் எதிர் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகம். (6-86)





வடமாகாணத் திணைக்களம் நடத்திய மாவட்ட, மாகாண மட்ட தடகளப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற பண்டத்தரிப்புப் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அணிகளைப் படங்களில் காணலாம்.
மாவட்ட மட்டத் தடகளப் போட்டிகளில் கலந்துகொண்டு ... மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி சாதனை படைத்த வீராங்கனைகளை இரண்டாவது படத்திலும் ... (படங்கள் - குமரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன விடியலுக்காக அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல் தொடர்ந்து போரிடுவோம்

## கைதாவதற்கு முன் அக்கினிப்புயல் சீமான் குமுறல்



சென்னை, ஜூலை 13

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விருப்பத்திற்கு ஏற்ப சோனியாவின் மத்திய அரசும் இங்குள்ள தமிழக அரசும் வேண்டுமானால் செயற்படலாம். ஆனால் உண்மைத் தமிழன் என்னால் அவ்வாறு செயற்பட முடியாது. எனவே, எமது இன விடியலுக்காக அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல் தொடர்ந்து போராடுவோம்.

- இவ்வாறு 'ஈழத்தமிழ் ஆதரவு அக்கினிப்புயல்' சீமான் குமுறியுள்ளார்.

நேற்று பொலிஸாரால் கைது செய்யப்படுவதற்கு முன்னதாக அவர் விடுத்திருந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தமிழக மீனவர் செல்லப்பன், இலங்கைக் கடற்படையால் கொல்லப்பட்டமை குறித்த சம்பவத்தில் நான் பேசிய பேச்சை வைத்து தமிழகப் பொலிஸார் என் மீது பொய் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

600 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் கடந்த 60 ஆண்டுகளாக இலங்கைக் கடற்படையால் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் விலைமதிப்பற்ற வலைகள், படகுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. தமிழக மீனவர்கள் சிங்களவர்களால் தினமும் கொல்லப்படும் பொழுதோ, அவர்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படும் பொழுதோ, மீனவனின் வலை அறுக்கப்படும் பொழுதோ மத்திய - மாநில அரசுகள் துளியும் கவலைப்படவில்லை.

மென்மையான முறையில் கடிதம் எழுதினார்கள். குறைந்தபட்சம் ஒரு கண்டனம் கூடத் தெரிவிக்கவில்லை. ஆனால் மத்திய, மாநில ஆளும் அரசுகள், நான் பேசிய பேச்சுகள் சிங்களவரின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுபவையாகக் கருதுகின்றன.

600 தமிழ் மீனவர்களின் உயிருக்கு இல்லாத மதிப்பு நம் இனத்தைக் கொல்லும் சிங்களவருக்கு இருப்பதை நினைத்தால் நாம் வாழ்வது தமிழ்நாட்டிலா இல்லை இலங்கையிலா என்னும் எண்ணம் எழுகின்றது.

ஆஸ்திரேலியாவில் ஒரு மாணவன் தாக்கப்பட்டால் கொதிக்கும் இந்திய மனம் எண்ணற்ற மீனவர்களின் உயிருக்கு சிறு அசைவைக் கூட தெரிவிக்க மறுக்கின்றதே?

பாகிஸ்தானி கசாப் மும்பையில் துப்பாக்கியில் சுட்டால் எல்லை கடந்த பயங்கரவாதம் என்று பாகிஸ்தானை எதிர்க்கும் இந்தியா, தினசரி மீனவரைக் கொலை செய்யும் இலங்கை அரசுடன் விருந்து வைத்து மகிழ்கின்றதே? ஏன்?

பிஜி தீவில் குஜராத்தி தாக்கப்படும் பொழுது துடிக்கும் இந்தியா, இங்கு சாகும் மீனவன் பற்றிக் கவலைப்படாமல் கிரிக்கெட் விளையாட வழியனுப்பி வைக்கின்றதே? ஏன்?

செத்தவன் தமிழன் என்பதால்தான் எல்லோரும் பாராமுகம் காட்டுகின்றார்களா? இது தான் இந்திய ஒருமைப்பாட்டின் லட்சணமா?

சென்ற வருடம் லட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டு தமிழினம் ஒடுக்கப்பட்ட பொழுது அதற்குப் பேருதவியும் பெரும் ஆதரவும் அளித்த மத்திய, மாநில அரசுகள் இன்று நம் எல்லையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவன் கொல்லப்படும் பொழுதும் இலங்கைக்கு உறுதுணையாய் இருப்பது தமிழர்களை மிகுந்த வேதனைக்கு உள்ளாக்குகின்றது.

இன விடியலுக்கான பணியை நாம் செய்தே தீருவோம். அடக்குமுறைச் சட்டங்களைக் காட்டி என்றும் எங்களை அச்சுறுத்த முடியாது.

ராஜபக்ஷவின் விருப்பத்திற்கு ஏற்ப சோனியாவின் மத்திய அரசும் இங்குள்ள தமிழக அரசும் வேண்டுமானால் செயற்படலாம், உண்மைத் தமிழன் என்னால் செயற்பட முடியாது. ஆகவே அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல் தொடர்ந்து போராடுவோம்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இந்தியச் செய்திகள்**

# 2050 இல் மக்கள் தொகையில் சீனாவை இந்தியா விஞ்சிவிடும்!

புதுடில்லி,ஜூலை 13

இந்திய மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் குறித்து மத்திய அரசு சார்பாக ஒரு புள்ளி விவரம் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, கடந்த 100 ஆண்டுகளில் இந்திய மக்கள் தொகை 5 மடங்காக அதிகரித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு கணக்குப்படி இந்தியாவில் 119 கோடியே 80 லட்சம் மக்களும், சீனாவில் 134 கோடியே 50 லட்சம் மக்களும் இருந்தனர். இந்தியாவில், கடந்த 5 ஆண்டுகளில் 1.4 சதவீதம் உயர்ந்துள்ளது. ஆனால், சீனாவைப் பொறுத்தவரை கடந்த 5 ஆண்டுகளில் 0.6 சதவீதம் மட்டுமே மக்கள் தொகை அதிகரித்தது.

எனவே, இதே வீதத்தில் சென்றால் 2050 ஆம் ஆண்டில் சீனாவை இந்தியா முந்திவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது, இந்தியாவில் உள்ள மக்கள் தொகையை விட 2026 ஆம் ஆண்டில் கூடுதலாக 37 கோடியே 10 லட்சம் மக்கள் அதிகரித்து விடுவார்கள். உத்தரப்பிரதேச மாநிலத்தில் மட்டும் இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 22 சதவீதம் பேர் இருப்பார்கள். தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், கேரளா ஆகிய நான்கு மாநிலங்களிலும் சேர்த்து 13 சதவீதம் பேர் இருப்பார்கள்.

அதேநேரத்தில், பாகிஸ்தானை பொறுத்தவரை 2009 ஆம் ஆண்டில் 18 கோடி மக்கள் தொகை இருந்தது. அங்கு, கடந்த ஐந்து ஆண்டுகளில் 2.2 சதவீதம் என்ற அளவில் மக்கள் தொகை அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டுப் பிரச்சினையை வைத்து போரிடுவோரைத் தண்டிக்க புதியசட்டம்

## அமைச்சர் துரைமுருகன் எச்சரிக்கை

சென்னை, ஜூலை 13

வெளிநாட்டுப் பிரச்சினையை மையமாக வைத்து தேச ஒற்றுமைக்கு எதிராகப் பேசுபவர்களைத் தண்டிக்க புதிய சட்டம் கொண்டுவரப்படும் - என்று தமிழக சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வார விடுமுறை நாட்களில் குடும்ப நல நீதிமன்றங்கள் செயற்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன் தொடக்க விழா சென்னை உயர் நீதிமன்றத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவில் அமைச்சர் துரைமுருகன் பேசியவை வருமாறு -

தமிழகத்தில் உள்ள சிலர் மத்திய, மாநில அரசுகளுக்கும், தேச ஒற்றுமைக்கும் எதிராக கருத்துகளை பரப்புவதையே தங்களது வேலையாகக் கொண்டுள்ளனர்.

சட்டம் - ஒழுங்கைப் பாதிக்கும் வகையான எதிர்ப்பான கருத்துகளைத் தெரிவிக்கும் அவர்கள், பேச்சுரிமை என்ற திரையின் பின்னால் ஒளிந்துகொள்கின்றனர்.



அரசை வெளிநாட்டுப் பிரச்சினையில் இழுத்துவிடும் தவறைச் செய்யும் அவர்கள் சட்டப்படி சில விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும்.

இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இப்போதுள்ள சட்டங்கள் போதா என்றால் புதிய சட்டம் கொண்டுவரவும் அரசு தயங் காது.

தமிழகத்தில் நான் சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் இதுவரை 159 நீதிமன்றங்கள் திறக்கப்பட்டுள்ளன. 190 சிவில் நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். விரைவு நீதிமன்றங்கள், தடா நீதிமன்றங்கள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு நீதிமன்றங்களும் மாநிலத்தில் அதிகமாகத் தொடங்கப்பட்டுள்ளன.

- இப்படி அவர் பேசினார்.

# நித்தியானந்தா சுவாமி சொற்பொழிவு: நடிகை மாளவிகா உட்பட பலர் பங்கேற்பு

பெங்களூர்,ஜூலை 13

பல்வேறு வழக்குகளில் சிக்கி 80 நாள்களுக்கு பின்னர் நித்யானந்தா சுவாமி 'ப்ரீடம்' (சுதந்திரம்) என்ற தலைப்பில் பக்தர்களிடையே ஒன்றரை மணி நேரம் சொற்பொழிவு நிகழ்த்தினார்.



நடிகை மாளவிகா உட்பட பலர் அவரது காலில் விழுந்து ஆசி பெற்றனர்.

பல்வேறு வழக்குகளில் சிக்கிய நித்தியானந்தாவுக்கு, பிடதி ஆசிரமத்தில் தங்கலாம், மத சம்பந்தமான கூட்டம், பிரார்த்தனைக் கூட்டம், போதனைக் கூட்டம் போன்றவற்றை நடத்தக்கூடாது என்று கர்நாடக உயர்நீதிமன்று நிபந்தனைகளை விதித்திருந்தது. இந்த நிபந்தனைகளைத் தளர்த்துமாறு நித்தியானந்தா உயர்நீதிமன்றில் மனுச் செய்தார்.

மனுவை விசாரித்த நீதிபதி சுபாஷ் ஆதி, மதசார்பு போதனைகள், ஆன்மிகக் கூட்டங்களை மாதத்திற்கு ஒருமுறை நித்தியானந்தா நடத்தலாம். ஆனால், நகரை விட்டு வெளியே செல்ல அனுமதி இல்லை என உத்தரவிட்டார்.

இதையடுத்து, நித்தியானந்தா உடனடியாகச் சொற்பொழிவுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். பிடதி ஆசிரமத்தில் நேற்று முன்தினம் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. 'ப்ரீடம்' என்ற தலைப்பில் நித்தியானந்தா சொற் பொழிவு நிகழ்த்தினார்.

நித்தியானந்தா தனது சொற்பொழி வில்-

எனது பக்தர்கள் அகிம்சை வழியில் செயற்பட்டதால்தான் என்னால் வெற்றி பெற முடிந்தது. சிறையில் இருந்தபோது எனது ஆன்மா வெளியேதான் சுற்றியது. மக்களின் அழைப்புகளுக்குப் பதில் கூறினேன். சிறையில் இருந்ததாகவே கருதவில்லை - என்று கூறினார்.

# கண்ணதாசனின் மகள் விசாலி கிறிஸ்தவ மதத்திற்கு மாறினார்



மதுரை, ஜூலை 13

கவியரசு கண்ணதாசனின் மகளான விசாலி கண்ணதாசன் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியுள்ளார்.

இவர் தந்தையின் வழியில் கவிதை எழுதுபவர் - நல்ல பேச்சாளர் - திரைப்படங்களிலும் நடித்துள்ளார். சில வருடங்களுக்கு முன்பு ரி.வியில் நிகழ்ச்சி ஒன்றையும் வழங்கினார்.

இந்த நிலையில் விசாலி திடீரென கிறிஸ்தவ மதத்திற்கு மாறியுள்ளார். மேலும், தனது பெயரையும் ஜெனீபர் என மாற்றிக் கொண்டுள்ளார்.

அர்த்தமுள்ள இந்து மதம் என்ற நூலை எழுதியவர் கண்ணதாசன். இந்த நிலையில் அவரது மகள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரூ. 50 ஆயிரம் கோடி செலவில் இந்திய கடற்படைக்கு 6 நீர்மூழ்கிக் கப்பல்கள்!

புதுடில்லி,ஜூலை13

இந்தியக் கடற்படைக்கு ரூபா 50 ஆயிரம் கோடி செலவில் புதிதாக 6 நீர்மூழ்கி கப்பல்கள் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இன்னும் 6 அல்லது 7 ஆண்டுகளில் அவை கட்டி முடிக்கப்பட்டு கடற்படையில் சேர்க்கப்படும்.

இந்தியக் கடற்படையில் தற்போது இருக்கும் நீர்மூழ்கிக் கப்பல்களில் 15 கப்பல்களுக்கு மிகவும் வயதாகி விட்டன. எனவே, 2015 ஆம் ஆண்டில் பாதிக்கும் மேற்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்கள் ஓய்வு பெற்று விடும். ஓய்வு பெறும் கப்பல்களில் 10 கப்பல்கள், ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட கைலோ வகையை சேர்ந்தவை. 15 நீர்மூழ்கிக் கப்பல்களும், 2012 ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு ஒன்று வீதம் வழியனுப்பி வைக்கப்படவுள்ளது.

எனவே, புதிதாக நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்குவது குறித்து முடிவு செய்வதற்காக, இராணுவத் தளவாடங்கள் கொள்முதல் கவுன்ஸில் கூட்டம் டில்லியில் நடந்தது. இராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோனி தலைமையில் நடந்த அந்த கூட்டத்தில், புதிதாக 6 நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்க முடிவு செய்யப்பட்டது.

இந்த 6 நீர் [illegible] களை மும்பையில் உள்ள மஸாகான் கப்பல் கட்டும் துறைமுகத்தில் கட்டவும், விசாகப்பட்டினத்தில் உள்ள இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளத்தில் ஒரு கப்பலைக் கட்டவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியோடு அந்தக் கப்பல்கள் உருவாக்கப்படும்.

மீதம் உள்ள இரண்டு கப்பல்கள், நேரடியாகவே வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து இறக்குமதி செய்யப்படும். அல்லது இந்தியாவில் உள்ள தனியார் கப்பல் கட்டும் தளங்களில் வெளிநாடு நிறுவனங்களின் உதவியோடு கட்டப்படும். தற்போதைய நிலையில், ஒவ்வொரு நீர்மூழ்கி கப்பலுக்கும் தலா ரூபா 8,500 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஏ.ஐ.பி. எனப்படும் தொழில்நுட்பத்துடன் இந்தக் கப்பல்கள் இருக்கும். இந்தத் தொழில்நுட்பம் காரணமாக, நீண்ட நாட்களுக்கு தண்ணீருக்குள்ளேயே இருக்க முடியும். டீசல் மற்றும் மின்சக்தி உதவியோடு இவை இயங்கும். குறிப்பிட்ட நாட்களுக்கு ஒருமுறை தண்ணீருக்கு மேலே வந்து ஒட்சிசன் மற்றும் பற்றரி ரீசார்ஜ் போன்றவற்றை செய்து கொள்ளும். அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல், தண்ணீருக்குள் இருக்கும் காலத்துக்கும், இதற்கும் சிறிதளவு மட்டுமே வித்தியாசம் உண்டு.

ஆறு நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டுவதற்காக ரஷ்யாவைச் சேர்ந்த ரோஸோ போரோ நெக்ஸ்போர்ட், பிரான்ஸை சேர்ந்த ஆர்மரிஸ், ஜெர்மனியைச் சேர்ந்த எச்.டி.டபிள்யு, ஸ்பெயினைச் சேர்ந்த நவந்தியா ஆகிய கப்பல் கட்டும் நிறுவனங்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. புதிதாக வாங்கப்படும் 6 நீர்மூழ்கிக் கப்பல்களும் 6 அல்லது 7 ஆண்டுகளுக்குள் கடற்படையில் சேர்க்கப்பட்டுவிடும்.

எந்தவொரு போரிலும், போரின் போக்கையே மாற்றிவிடும் சக்தி நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு உண்டு. அதுவும், அணு ஆயுதங்களை தாங்கிய ஏவுகணைகளை வைத்திருந்தால் மிகவும் சக்தி வாய்ந்தவையாக மாறிவிடும். அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய இரண்டு நாடுகளிலும் அணு ஆயுதங்கள் குறைக்கப்பட்டு வருகின்றன. எனினும், நீர்மூழ்கிக் கப்பல்களில் பொருத்தும் வகையிலேயே அந்த நாடு களின் 60 சதவீத அணு ஆயுதங்கள் அமைந்துள்ளன.

இந்தியாவில் அணுஆயுத நீர்மூழ்கிக் கப்பல்கள் கிடையாது. எனினும், அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் நீர்மூழ்கிக் கப்பல்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் சம்பியன்



ஜோகனஸ்பர்க், ஜூலை 13

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடந்த பரபரப்பான இறுதி ஆட்டத்தில், ஸ்பெயின் அணி 1-0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தி முதல் முறையாக சம்பியன் கிண்ணத்தை வென்றது.

19ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டத் திருவிழா கடந்த மாதம் 11ஆம் திகதி தென்னாபிரிக்காவில் தொடங்கியது. ஆபிரிக்கக் கண்டத்தில் முதல் முறையாக நடத்தப்பட்ட இந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் மொத்தம் 32 அணிகள் பங்கேற்றன.

பிரேஸில், ஆர்ஜென்ரீனா, இங்கிலாந்து, ஜேர்மனி, போர்த்துக்கல், இத்தாலி, பிரான்ஸ் ஆகிய முன்னணி அணிகள் ரசிகர்களின் எதிர்பார்ப்புகளைப் பொய்யாக்கி வெளியேறின. 'லீக்', 'ரவுண்டப்-16', காலிறுதி, அரையிறுதி என அனைத்துச் சுற்றுக்களிலும் அசத்திய ஐரோப்பிய அணிகளான நெதர்லாந்து - ஸ்பெயின் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

உலகமே ஆவலுடன் எதிர்பார்த்த ஸ்பெயின்-நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டி ஜோகனஸ்பேர்க் சாக்கர் சிட்டி மைதானத்தில் இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணிக்குத் தொடங்கியது.

இப்போட்டியைக் காண தென்னா பிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா வருகை தந்திருந்தார். அதேவேளை, போட்டி ஆரம்பமாக முன்னர் பொப் பாடகி ஷகீரா 'வாகா வாகா' பாடலைப் பாடி நிகழ்வை மேலும் சிறப்பித்திருந்தார்.

தங்களது முதல் உலக கிரீடத்திற்காக இரு அணி வீரர்களும் தொடக்கத்திலிருந்தே மல்லுக்கட்டினர். முதல் 15 நிமிடங்கள் ஸ்பெயின் வசமே பந்து சுற்றிக்கொண் டிருந் தது.

11ஆவது நிமிடத்தில் ஸ்பெயினின் நட்சத்திர வீரரான டேவிட் வில்லா அடித்த பந்து வலைக்கு வெளியே சென்று ஏமாற்றியது.

இதன் பிறகு நெதர்லாந்து தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியது. 17ஆவது நிமிடத்தில் 'பிரிகிக்' வாய்ப்பில் ஸ்னீடர் கோல் எல்லை நோக்கி அடித்த பந்தை, ஸ்பெயின் கோல் காப்பாளர் கேசில்லாஸ் தடுத்து விட்டார். பின்னர், ஆட்டத்தில் முரட்டுத்தனம் தலைதூக்கியது. எதிரணி வீரர்களை மிதிப்பது, தள்ளிவிடும் போக்கு அதிகரித்தது. நடுவரிடமும் அடிக்கடி வாக்குவாதம் செய்தனர். முதல் பாதி நேரத்தில் கோல் ஏதும் விழாத நிலையில், நெதர்லாந்துத் தரப்பில் 3 வீரர்களுக்கும், ஸ்பெயின் தரப்பில் 2 வீரர்களுக்கும் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது.

2ஆவது பாதியிலும் இதே நிலையே காணப்பட்டது. குறிப்பாக நெதர்லாந்து அணி வீரர்களே அதிகமாக முறையற்ற விதத்தில் ஆடினர். இவர்கள் நடுவரால் எச்சரிக்கப்பட்டனர்.

இறுதிப்போட்டிக்கே உரிய ஆக்ரோஷமும், பரபரப்பும் களத்தில் காணப்பட்டது. வெற்றிக் கோலைப் பதிவு செய்ய, இரு அணி வீரர்களும் அடிக்கடி எதிரணி கோல் கம்பத்தை முற்றுகையிட்டபடி இருந்தனர். இதில் 62ஆவது நிமிடத்தில் நெதர்லாந்துக்குக் கோல் அடிக்க அருமையான வாய்ப்புக் கிடைத்தது. ஆர்ஜன் ரோபன் தனிஆளாக கோல் நோக்கிக் கொண்டு வந்த பந்தை, அருகில் வந்து அடித்தபோது ஸ்பெயின் கோல் காப்பாளர் கேசில்லாஸ் தனது காலால் தடுத்து பந்தை வெளியே திருப்பினார். இதனால் பெரிய ஆபத்திலிருந்து ஸ்பெயின் தப்பியது.

அதே சமயம் ஸ்பெயின் வீரர் டேவிட் வில்லாவுக்கும் நிறைய வாய்ப்புகளை, சக வீரர்கள் உருவாக்கிக் கொடுத்தனர். ஆனால், அவரது முயற்சிகள் அனைத்தையும் நெதர்லாந்து முறியடித்து விட்டது. 75, 76ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்துத் தொடுத்த தாக்குதலுக்கும் பலன் கிடைக்கவில்லை. இதனால் 2ஆவது பாதியும் கோல் இன்றி முடிந்தது.

2ஆவது பாதியில் நெதர்லாந்து தரப்பில் 3 வீரர்களுக்கும், ஸ்பெயின் தரப்பில் ஒரு வீரருக்கும் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது.

பின்னர், 15 நிமிடங்கள் கூடுதல் நேரமாக ஒதுக்கப்பட்டன. அதிலும் கோல் ஏதும் கிடைக்கவில்லை. இந்தக் கூடுதல் நேரத்தின் போது நெதர்லாந்தின் ஹெய்டிங்கா சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால், 10 வீரர்களுடன் நெதர்லாந்து ஆடவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டது.

இதன் பின்னர் மீண்டும் ஒதுக்கப்பட்ட 2ஆவது கூடுதல் நேரத்தில் ஸ்பெயின் கோல் அடித்து உச்சக்கட்டப் போராட்டத்தை முடிவுக்குக்கொண்டு வந்தது. 119ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் ஆன்ட்ரஸ் இனியஸ்டா இந்தக் கோலை அடித்தார். அதுவே வெற்றிக் கோலாகவும் அமைந்தது.

திரிலிங்காக நகர்ந்த இந்த ஆட்டத்தின் முடிவில் ஸ்பெயின் அணி 1-0 என்ற கோல் கணக்கில் நெதர் லாந்தை வீழ்த்தி உலக சம்பியன் மகுடத்தைச் சூடியது.

## சிறப்பு விருதுகள்



டீகோ போர்லான்



தோமஸ் முல்லர்



ஆன்டரஸ்



இகோர் கேசிலாஸ்

உருகுவே வீரர் டீகோ போர்லானுக்குச் சிறந்த வீரருக்கான 'தங்கப் பந்து' விருது வழங்கப்பட்டது. ஜேர்மனி இளம் வீரர் தோமஸ் முல்லருக்கு 'தங்கக் காலணி' விருது வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உலகக் கிண்ணத் தொடரிலும் சிறந்த வீரர் ஒருவருக்கு அடிடாஸ் 'தங்கப் பந்து' விருது வழங்கப்பட்டு வருவது வழமை.

இந்த விருதுக்கான போட்டியில் ஸ்பெயின் வீரர் டேவிட் வில்லா, நெதர்லாந்தின் வெஸ்லி ஸ்னைடர் ஆகியோருடன் உருகுவே வீரர் டீகோ போர்லானும் இருந்தார்.

'தங்கப் பந்து' விருதுக்குரிய வீரரைத் தெரிவு செய்ய பத்திரிக்கையாளர்களிடம் வாக்கெடுப்பு ஒன்று நேற்றுமுன்தினம் நடந்தது.

இதில், உருகுவே வீரர் டீகோ போர்லான் முதலிடம் பெற்று தங்கப் பந்து விருதைத் தட்டிச் சென்றார். இந்த உலகக் கிண்ணத் தொடரில் அவர் 5 கோல்களை அடித்துள்ளார்.

சிறந்த இளம் வீரருக்கான விருதை ஜேர்மனியின் தோமஸ் முல்லர் பெற்றார். இது தவிர அதிக கோல்கள் அடித்தமைக்காக வழங்கப்படும் 'தங்கக் காலணி' விருதும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர் இந்த உலகக் கிண்ணத் தொடரில் 5 கோல்களை அடித்ததோடு, 3 கோல்கள் அடிக்கவும் உதவியாக இருந்தார்.

சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை ஸ்பெயின் வீரரான இகெர் கேசிலாஸ் பெற்றார். இவருக்குத் 'தங்கக் கையுறை' வழங்கப்பட்டது.

இறுதியாட்டத்தின் நாயகனாக ஸ்பெயினின் ஆன்டரஸ் இனியஸ்டர் தெரிவுசெய்யப்பட்டார்

சிறந்த அணிக்கான விருது ஸ்பெயினுக்கு வழங்கப்பட்டது.

# கிளிநொச்சி அமைச்சரவைக் கூட்டம் வெறும் ஏமாற்று என்கின்றன எதிர்க்கட்சிகள்

கொழும்பு, ஜூலை 13

அரசு கிளிநொச்சியில் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்துவது ஓர் ஏமாற்று வித்தை, போலி கண்காட்சியென பிரதான எதிர்க்கட்சிகள் கடும் கண்டனத்தைத் தெரிவிக்கின்றன.

இதற்குச் செலவிடும் பணத்தைக் கொண்டு மீள்குடியமர்த்தப்பட்டு மரங்களின் அடியில் அவல வாழ்க்கை நடத்தும் மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்திருக்கலாம் எனவும் இக்கட்சிகள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவைக் கூட்டத்தை கிளிநொச்சியில் அரசு நடத்தவுள்ளது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் மனித உரிமைகள் தொடர்பான பிரதி செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன எம்.பி. கூறியவை வருமாறு:-

### வீணடிக்கப்படும் வரிப்பணம்

மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் மரங்களின் கீழ் அவல வாழ்க்கை வாழ்கின்றனர். அவர்களுக்கு வீடுகள் இல்லை. அடிப்படை வசதிகள் இல்லை. குடிதண்ணீர் இல்லை. இந்த நிலையில் மில்லியன் கணக்கான ரூபா செலவில் கிளிநொச்சியில் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்துவது அந்த மக்களை ஏமாற்றும் செயலாகும். இதனால் அங்குள்ள மக்களுக்கு எதுவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை. மக்களின் வரிப்பணம் இதனால் வெறுமனே வீணடிக்கப்படுகின்றது.

44 அமைச்சர்கள் கிளிநொச்சிக்கு வருவதற்கான வாகனங்கள், அவர்களது பரிவாரங்கள், பாதுகாப்புக்கான வாகனங்கள் என கிளிநொச்சிக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் செல்லும். கிளிநொச்சியில் பொலிஸ், இராணுவம் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்த வேண்டும். இவ்வளவுக்காகும் செலவைக் கொண்டு மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்குப் பல வசதிகளை செய்துகொடுத்திருக்கலாம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு எம்.பி. அநுரகுமார திஸாநாயக்க இது தொடர்பாக கூறியவை வருமாறு:-

### அமைச்சரவைக் கூட்டம் ஒரு கண்காட்சி

அமைச்சரவைக் கூட்டத்தை கிளிநொச்சியில் நடத்துவதென்பது வெறுமனே ஒரு கண்காட்சியாகும். அமைச்சரவைக் கூட்டத்தை எங்கு நடத்துவதென்பது முக்கியமல்ல. அக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தான் முக்கியமானது.

கிளிநொச்சி மக்களுக்கு இன்று விவசாயம் மேற்கொள்வதற்கு வசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டும். உற்பத்தி செய்யும் விளைச்சலுக்கு நல்ல விலை பெற்றுக்கொடுக்கவேண்டும்.

இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண் டும். யுத்தம் காரணமாக வீடுகளை இழந்தவர்கள் ஏராளம். இவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக்கொடுக்கவேண்டும். இவ்வளவு தேவைகள் இருக்கும்போது கிளிநொச்சியில் மில்லியன் கணக்கான ரூபாவை செலவிட்டு அமைச்சரவைக் கூட்டத்தை நடத்துவது எதற்கும் உப யோகமற்ற ஒரு கண்காட்சி என்றே கருதவேண்டும்.

### அரசியல் பித்தலாட்டம்

அமைச்சர்கள் செல்வதற்கு வாகனங்கள், ஹெலிக்கொப்டர்கள் என பெருந்தொகைப் பணம் செலவிடுவதால் கிளிநொச்சி மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

இதுதொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கருத்துத் தெரிவிக்கையில், ''அமைச்சரவைக் கூட்டம் நடத்துவதற்கு முன் கிளிநொச்சி மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். அதைவிட்டு அமைச்சரவைக் கூட்டம் நடத்த நினைப்பது வெறும் அரசியல் பித்தலாட்டம்.

அமைச்சரவைக் கூட்டம் நடத்த செலவிடும் பணத்தை அம்மக்களின் நல்வாழ்வுக்கான செலவிடுதல் சிறப்பு. கிளிநொச்சியைக் காணாதவர்கள் எவரும் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ளப்போவதில்லை. எங்களைவிட பலமுறை கிளிநொச்சி சென்றவர்களே இன்று அமைச்சரவையில் உள்ளனர்'' என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி சமீபத்தில பத்திரிகைகளுக்கு விடுத்திருந்த அறிக்கையில் அமைச்சரவைக் கூட்டம கிளிநொச்சியில் நடத்துவது குறித்து கடுமையாக விமர்சித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

# விமல் உயிருடன் இருக்க வேண்டும் போராட்டமும் வெல்ல வேண்டும்

## தேசிய சுதந்திர முன்னணி கூறுகிறது

கொழும்பு, ஜூலை 13

ஐ.நா. செயலாளரினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவுக்கு எதிரான போராட்டத்தில் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் உயிரைப் பறிகொடுக்க நாம் தயாரில்லை என்று விமல் வீரவன்ஸவின் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி நேற்றுத் தெரிவித்தது.

பத்ரமுல்லையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அக்கட்சியின் உறுப் பினரும் பிரதி அமைச்சருமான வீரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ -மூனினால் நியமிக்கப்பட்ட குழுவுக்கு எதிரான போராட்டத்தில் விமல் வீரவன்ஸவின் உயிரைத் தியாகம் செய்யவேண்டிய அவசியமில்லை. அமைச்சர் விமல் வீரவன்ஸ உயிருடன் இருக்கவும் வேண் டும்.இந்தப் போராட்டமும் வெற்றிபெற வேண்டும்.

ஐக்கிய தே[illegible] தலை முன்னணி [illegible]ராக விமல் வீரவன்ஸ போராட்டத்தில் இறங்கவில்லை. ஐ.நா.செயலாளர் நாயகத்துக்கு எதிரான போராட்டத்தையே அவர் மேற்கொண்டார்.

ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ - மூனிடம் இருந்து எவ்வளவு டொலர்கள் பெற்றன என நாம் கேட்கின்றோம்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் தொடர்பில் தமக்கு ஆலோசனை வழங்க பான் கீ-மூன் மூவர் கொண்ட குழுவை நியமித்தமை சரியா தவறா என இந்தக் கட்சிகள் கூறவேண்டுமே தவிர விமல் வீரவன்ஸவின் போராட்டம் சரியா - தவறா எனக் கூறக்கூடாது.

இந்தக் குழு தொடர்பில் இக்கட்சிகளின் நிலைப்பாடு என்ன? இந்தக் கட்சிகளும் இந்தக் குழுவுக்கு எதிரானவை என்றால் அக்கட்சிகளும் போராட்டத்தில் இறங்கலாம். இந்தப் பிரச்சினைக்காக ஒருநேரம் பட்டினி கிடக்காதவர்களா, உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்போகின்றார்கள். ரணில் விக்கிரமசிங்க, சோமவன்ஸ அமரசிங்க, ரில்வின் சில்வா ஆகியோர் கூட இந்தக் குழுவுக்கு எதிராகப் போராடலாம். இதற்கு எதிராகச் செயற்படுங்கள். அமைதியாக இருப்பதற்காக எவ்வளவு டொலர்களை பான் கீ - மூனிடம் இருந்து பெற்றீர்கள் என்பதையாவது எமக்குத் தெரிவியுங்கள்.

இலங்கையைக் காட்டிக்கொடுக்கும் செயலில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். விமல் வீரவன்ஸவின் இந்தப் போராட்டம் காரணமாக பான் கீ - மூன் நியமித்த குழுவின் அழுத்தம் தற்போது குறைந்துள்ளது. தமக்கு ஆலோசனை வழங்க மாத்திரமே இந்தக் குழு நியமிக்கப்பட்டது எனவும் வேறு எதற்காகவும் இந்தக் குழு நியமிக்கப்படவில்லை என்றும் பான் கீ - மூன் குறிப்பிடும் அளவுக்கு அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு மேலும் பான் கீ - மூன் நடவடிக்கை எடுத்தால் நாமும் நடவடிக்கை எடுக்கத் தயார். போராட்டத்துக்கு எல்லைகள் உள்ளன. இந்தப் போராட்டத்தைச் செய்து விமல் வீரவன்ஸவின் உயிரைத் தியாகம் செய்வதற்கு எமக்கு அவசியமில்லை. அவரும் உயிருடன் இருக்கவேண்டும், இந்தப் போராட்டமும் வெற்றி பெற வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உகண்டாவில் இரட்டைக் குண்டுத் தாக்குதல்

# உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை ரசித்துக்கொண்டிருந்த 64 பேர் உயிரிழப்பு!

கம்பாலா, ஜூலை 13

உகண்டாவின் தலைநகரான கம்பாலாவிலுள்ள றக்பி கழகத்தில் கூடியிருந்த மக்கள் மத்தியில் இரு குண்டுகள் பயங்கரமாக வெடித்தன. இவற்றில் ஓர் அமெரிக்கர் உட்பட 64 பேர் உயிரிழந்தனர். 72 பேர் படுகாயமடைந்தனர்.

தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற இறுதி கால்பந்தாட்டப் போட்டியை தொலைக் காட்சியில் பார்த்துக் குதூகலித்துக் கொண்டிருந்த கூட்டத்தினர் மத்தியில் இக்குண்டுகள் வெடித்துள்ளன.

உலகக்கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டியைப் பார்த்து இரசித்துக்கொண்டிருந்த கூட்டத்தை இலக்கு வைத்து இக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கலி ஹைஹூரா தெரிவித்தார்.

சோமாலியாவின் தலைநகரான மொகடிஷுவில் உகண்டா துருப்புகள் நிலைகொண்டுள்ளன. இதனால் ஆத்திரமடைந்துள்ள சோமாலிய தீவிரவாதிகள் உகண்டாவின் தலைநகரான கம்பாலா மீது தாக்குதல் நடத்தப்படும் என ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தார்கள் என பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்தது.

சோமாலியாவின் இடைக்கால அரசு பலவீனமானது. அதனால் தீவிரவாதக் குழுக்களை ஒடுக்க முடியவில்லை. இந்த அரசுக்கு உதவும்பொருட்டு, ஏறத்தாழ 5 ஆயிரம் ஆபிரிக்க ஒன்றிய துருப்புகள் மொகடிஷுவில் நிலைகொண்டுள்ளன என்றும் அவ்வட்டாரம் குறிப்பிட்டது.

இந்த துருப்புகள் உகண்டாவையும், புருண்டியையும் சேர்ந்தவை. உகண்டாவின் தலையீட்டால், ஆத்திரமடைந்துள்ள சோமாலிய தீவிரவாதக் குழுக்கள், கம்பாலாவில் இக்குண்டுத் தாக்குதல்களை நடத்தியிருக்கலாம் என்றும் பாதுகாப்பு வட்டாரம் சந்தேகம் தெரிவித்தது.

சோமாலியாவின் பல்வேறு பகுதிகளை இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் தத்தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன. இக்குழுக்களுக்கிடையேயும் அவ்வப்போது மோதல்கள் ஏற்படுவதுண்டு எனப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கலி ஹைஹூரா மேலும் குறிப்பிட்டார்.

கம்பாலா றக்பி கழகத்துக்கும், உணவகத்துக்கும் இடையில் ஞாயிற்றுக்கிழமை மாலை ஒன்றன்பின் ஒன்றாக இக்குண்டுகள் வெடித்துள்ளன. இத்தாக்குதல்களுக்குப் பின்னணியில் சோமாலிய அல்-சபாப் தீவிரவாதக் குழு செயற்பட்டிருக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இத்தாக்குதல் குறித்து மொகடிஷுவிலுள்ள அல்-சபாப் கொமாண்டர் ஜேக் யூசுப் இஸ்ஸா வரவேற்பும், மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளார். எனினும், அல்-சபாப்தான் இதற்கு சூத்திரதாரி என்பதை அவர் மறுக்கவோ, ஊர்ஜிதப்படுத்தவோ முன்வரவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, "இத்தாக்குதல்கள் வேதனைக்குரியவை. கோழைத்தனமானவை" என தமது கண்டனத்தில் தெரிவித்துள்ளார். குண்டுவெடிப்பில் அமெரிக்கர் ஒருவர் மரணித்துள்ளார் என்பதை உகண்டாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஊர்ஜிதம் செய்துள்ளது.

# ஆப்கனில் தலிபான் தாக்குதலால் 11 பொலிஸார் உயிரிழப்பு!

குந்துஷ்(ஆப்கானிஸ்தான்),ஜூலை13

மாகாண ஆளுநர் உட்பட 11 பேர் தலிபான்களின் தாக்குதலால் சனிக்கிழமை ஆப்கானிஸ்தானில் பலியாகியுள்ளனர்.

தஜிகிஸ்தானின் எல்லையிலுள்ள வடக்கு மாகாணமான குந்துஷில் ஆறு எல்லைப் படை பொலிஸாரை தலிபான்கள் கொன்றனர். குந்துஷ் மாகாணத்திலுள்ள, இமாம் சாகிப் மாவட்டம் தலிபான்களின் ஆதிக்கம் நிறைந்தது.

மற்றொரு மாவட்டமான குலா-இ-சாலில், வெடிகுண்டு மூலம் மாகாண ஆளுநரை தலிபான்கள் கொன்றனர். உள்ளூர் தலைவரான மாலிம் நசீர் வந்து கொண்டிருந்தபோது, சாலையில் மறைந்திருந்த தலிபான்கள் அவரது வாகனம் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தினர்.

இச்சம்பவத்தில் மாலிம் நசீர், வாகன சாரதி ஆகியோர் பலியாயினர். மேலும் இருவர் காயமடைந்தனர். வடகிழக்கு மாகாணமான பாடாக்ஷானில், சனிக் கிழமை ஐந்து பொலிஸாரை தலிபான்கள் கொன்றனர். ஆப்கனின் எதிரிகள் கொல்லப்பட்டுள்ளார்கள் எனக் கூறும் தலிபான்களின் செயலை ஆப்கனின் உள்துறை அமைச்சகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

# சீனாவில் வெள்ளப்பெருக்கு: 50 பேர் பலி; 15 பேர் மாயம்!

பீஜிங், ஜூலை 13

சீனாவில், கடந்த சில நாள்களாகப்பெய்து வரும் மழையால், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.சீனாவின் தெற்கு மற்றும் மத்திய பகுதியில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது.

இதனால், அங்கு கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ளத்தில் சிக்கி 50 பேர் உயிரிழந்துள்ளனர்; மேலும் 15 பேரைக் காணவில்லை. இதனால், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

வெள்ளப்பெருக்கின் காரணமாக, சீனாவில் ஒரு கோடி பேர் பாதிப்படைந்தனர். இதுகுறித்து, சீன பொது விவகாரத்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கையில், "சீனாவின் தெற்குப் பகுதியிலுள்ள ஒன்பது மாவட்டங்களில் கனமழை பெய்ததால், 1 லட்சத்து 21 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன. இதில் 42,000 வீடுகள் முற்றிலும் சேதமடைந்துள்ளன" என்றன.




# வெளிநாட்டவர் வருகைக்கு ஆஸி. எதிர்க்கட்சி எதிர்ப்பு

மெல்போர்ன், ஜூலை 13

ஆஸ்திரேலியாவுக்கு வந்து வெளிநாட்டவர்கள் கல்வி பயில்வதற்கும், குடியுரிமை வழங்குவதற்கும் அரசு தாராளமான போக்கைக் கடைபிடித்து வருவதற்கு எதிர்க்கட்சியான லிபரல் கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டவர்களின் வருகை அதிகரித்து வருவதால் நாட்டின் மக்கள் தொகை உயர்ந்துவருகிறது. இதை தடுப்பது அவசியம். இதனால் வெளிநாட்டவர்கள் வந்து கல்வி பெறுவதற்கு அனுமதிப்பதிலும், குடியுரிமை வழங்குவதிலும் கட்டுப்பாட்டை விதிக்கவேண்டும் என்றும் அந்தக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமராக சமீபத்தில் பதவியேற்ற ஜூலியா கில்லார்ட், வெளிநாட்டவர்களுக்குக் குடியுரிமை வழங்குவதில், கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படும் என்று அறிவித்து அதற்கான நடவடிக்கையில் ஈடுபட் டுள்ளார்.

# சிங்கப்பூர் பாதாள ரயில் பெட்டியை அலங்கோலப்படுத்தியவருக்குச் சிறை

சிங்கப்பூர், ஜூலை 13

பாதாள ரயில் பெட்டி மீது பெயின்ட் தெளித்து அலங்கோலப்படுத்திய வெளிநாட்டு இளைஞருக்கு, சிங்கப்பூர் நீதிமன்றம் பிரம்படியும், சிறைத்தண்டனையும் விதித்தது.

சிங்கப்பூரில் பொது இடங்களில் தூய்மையை கடைபிடிக்கவும், பொது சொத்துக்களைப் பாதுகாக்கவும் அரசு கடும் நடைமுறைகளைப் பின்பற்றி வருகிறது. சிறிய குற்றங்களுக்குக்கூட, கடும் தண்டனைகள் விதிக்கப்படுகின்றன.

அங்குள்ள பாதாள ரயில் டெப்போவிற்குள் இளைஞர் ஒருவர் சமீபத்தில் கூட்டாளி ஒருவரின் உதவியுடன் அத்துமீறி நுழைந்தார். அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரண்டு ரயில் பெட்டிகள் மீது பெயின்ட்டை தெளித்து, கிறுக்கி அலங்கோலப்படுத்தினார்.


இதைக் கண்ட டெப்போ ஊழியர்கள், அந்த இளைஞரை மடக்கிப்பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர். பொலிஸார் நடத்திய விசாரணையில், அந்த இளைஞர் சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த ஒலிவர் பிரிக்கர்(வயது - 32)எனத் தெரியவந்தது.

இதையடுத்து, அந்த இளைஞரை பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி, பொதுச் சொத்தை சேதப்படுத்திய ஒலிவருக்கு, மூன்று பிரம்படி தண்டனையும், ஐந்து மாத கால சிறைத்தண்டனையும் விதித்தார்.

பின்னர் அவர் பிணைத் தொகை செலுத்தி, பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆனால், அவரை உடனடியாக பொலிஸார் கைதுசெய்தனர். ஒலிவருக்கு வழங்கப்பட்ட தண்டனை மிக அதிகம்; தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படும் என அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

சிங்கப்பூரில் இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுவோருக்கு, மூன்று முதல் எட்டு பிரம்படி தண்டனை வழங்க சட்டத்தில் வழிவகையுண்டு. மேலும், அபராதமும், மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் விதிக்க இயலும்.



ஸ்பெயின் உதைப்பந்தாட்ட அணித் தலைவர் இகிவ் கசிலாஸ் (வலது) தமது அணியினரை தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப்ஜூமாவிற்கு (இடது) அறிமுகம் செய்துவைக்கிறார். ஃபிபா தலைவர் ஜோசப் செப் பிலாட்டர் அருகில் (நடுவில்)காணப்படுகிறார்.

# பொருளாதார மந்தநிலையால் 90 அமெ. வங்கிகளுக்கு மூடு விழா

நியூயோர்க், ஜூலை 13

பொருளாதார மந்தநிலை காரணமாக, நிதி பிரச்சினையை சமாளிக்க முடியாமல் கடந்த ஏழு மாதங்களில் மட்டும் அமெரிக்காவில் 90 வங்கிகள் மூடப்பட்டுள்ளன என தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக பெரும் பொருளாதார மந்தநிலை நிலவி வருகிறது. அது, உலக அளவில் பொருளாதார மந்தநிலையையும் ஏற்படுத்தியது.

நிதிப் பிரச்சினையை சமாளிக்க முடியாமல், ஏராளமான தொழிற்சாலைகள், நிறுவனங்கள் ஆகியவை நட்டத்தில் இயங்கி வருகின்றன; பல தொழிற் சாலைகள் மூடப்பட்டுவிட்டன. இதன் காரணமாக, அமெரிக்காவில் வேலையின்மை அதிகரித்துள்ளது.

அரசு ஊக்குவிப்பு சலுகைகளை அறிவித்தபோதும், நிதி ஆதாரமின்றி வங்கிகள் மூடப்படுகின்றன. கடந்த மாதம் மட்டும் அமெரிக்காவில் வேலையின்மை விகிதம் 9.5 சதவீதம் என்ற அளவுக்கு அதிகரித்துள்ளது. நிதிப் பிரச்சினை, வேலையிழப்பு போன்ற காரணங்களால் வங்கிகளும் தள்ளாட ஆரம்பித்துவிட்டன.

மிகப் பெரிய வங்கிகள் தவிர, நடுத்தர மற்றும் மூன்றாம் நிலை வங்கிகளும் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

ஹோம் நேஷனல் வங்கி, பே நேஷனல் வங்கி, ஐடியல் பெடரல் சேமிப்பு வங்கி ஆகியவை கடந்த மாதத்தில் பெரும் நட்டத்தில் இயங்கின.

கடந்த ஏழு மாதங்களில் மட்டும் அமெரிக்காவில் 90 வங்கிகள் மூடப்பட்டுள்ளன. சராசரியாக ஒரு மாதத்துக்கு 13 வங்கிகள் மூடப்பட்டு வருகின்றன. பொருளாதார மந்தநிலை சீராகும் பட்சத்தில் தான், அமெரிக்காவில் வங்கிகளின் நடவடிக்கை இயல்பு நிலைக்குத் திரும்பும்.

வங்கிகளின் நடைமுறைகளில் ஏற்பட்ட பாதிப்பு இந்த மூடலுக்குக் காரணம் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# வெடிகுண்டு மிரட்டலையடுத்து பிரான்ஸ் விமானம் தரையிறக்கம்

ரியோ டி ஜெனிரோ, ஜூலை 13

வெடிகுண்டு இருப்பதாக மிரட்டல் வந்ததையடுத்து, ஏர் பிரான்ஸ் விமானம் பிரேஸிலில் அவசரமாகத் தரை இறக்கப்பட்டது.

ஏர் பிரான்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான பயணிகள் விமானம், பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரிலிருந்து பிரான்ஸுக்கு ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டது.

விமானம் புறப்பட்ட அடுத்த சில நிமிடங்களில், ரியோ டி ஜெனிரோ விமான நிலையத்துக்கு ஒரு மர்ம தொலைபேசி அழைப்பு வந்தது. அதில், ஏர் பிரான்ஸ் விமானத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளது என மிரட்டல் வந்தது.

இதையடுத்து, விமானிக்கு அதிகாரிகள் தகவல் கொடுத்தனர். பிரேஸிலின் ரெசிபி விமான நிலையத்தில் விமானம் அவசரமாகத் தரை இறக்கப்பட்டது.

பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக அதிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதன் காரணமாக, ரெசிபி விமான நிலையமும் சில மணி நேரத்துக்கு மூடப்பட்டது.

இதுகுறித்து, விமான நிலைய செய்தி தொடர்பாளர் கூறுகையில், "விமானத்தை சோதனையிட்டதில் குண்டு எதுவும் அதில் இருக்கவில்லை. இந்தச் சம்பவம் குறித்து விசாரித்து வருகிறோம்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயமான விசாரணைகள் நடத்தி குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்

## தர்சிகாவின் மரணம் குறித்து ஈ.பி.டி.பி. அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 13

வேலணையில் இடம்பெற்ற குடும்பநல உத்தியோகத்தர் தர்சிகா சரவணையின் மரணம் தொடர்பில் நியாயமான விசாரணைகளை நடத்தி உண்மைகளை வெளிக்கொண்டு வருவதுடன், குற்ற வாளிகள் இனங்காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கப்பட வேண்டும் - என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது :-

குடும்பநல உத்தியோகத்தர் தர்சிகா சரவணையின் மரணம் தீவக மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது. எனவே இது தொடர்பில் நியாயமான விசாரணைகள் நடைபெறுவதுடன் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

பணியிலிருந்த உத்தியோகத்தர், விடுதியறையில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டிருந்தார். இச்சம்பவம் மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது. எனவே இதுதொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்தச் சம்பவம் குறித்து தீவகப் பகுதி மக்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர். இதனை அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

யுத்தத்திற்குப் பின்னர் எமது மக்களின் இயல்பு வாழ்வைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் பல்வேறு தளங்களில் பாடுபட்டுக் கொண்டிருக்கும் எமக்கு இந்தச் சம்பவம் பெருங்கவலையை ஏற்படுத்தியுள்ளது.

மக்களை அச்சுறுத்தும் இத்தகைய செயற்பாடுகளை ஈ.பி.டி.பியினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தச் சம்பவங்களின் பின்னால் இருக்கும் குற்றவாளிகள் சட்டத்துக்கு முன்னால் நிறுத்தப்பட்டு இனங்காணப்படல் வேண்டும். அத்துடன் இத்தகைய சம்ப வங்கள் எதிர்காலத்தில் நடக்காத வண்ணம் பொலிஸார் கூடுதல் அக்கறையுடன் செயலாற்றி மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும் - தர்சிகாவின் மரணத் தால் துயரத்தில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஈ.பி.டி.பி. ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது - என்றுள்ளது. (ஒ-6)

## தர்சிகா மரணம்: இன்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

குடும்பநலமருத்துவமாது சரவணை தர்சிகாவின் மரணம் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு கோரி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாக இன்று காலை 7 மணி முதல் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மேற்படி ஆர்ப்பாட்டத்தில் அனைத்து குடும்பநல உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேற்படி குடும்பநல மருத்துவமாதுவின் மரணம் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் உரிய பதிலை முன்வைக்கும் வரை இந்த ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ- 16)

## மாணவன் கபிலநாத் படுகொலை வழக்கு:

# சந்தேக நபர்கள் 3 பேர் நேற்று விடுவிப்பு; ஏனைய மூவரும் தொடர்ந்து விளக்கமறியலில்

தென்மராட்சி, ஜூலை 13

சாவகச்சேரி மாணவன் திருச்செல்வம் கபிலநாத் படுகொலை வழக்கின் மூன்று சந்தேக நபர்கள் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர். ஏனைய மூன்று சந்தேக நபர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிவான் ஏ.எம்.எம். ரியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கின் மூன்றாது சந்தேக நபரான கணேஸ்வரராசா தயாராஜ் முதலாவது சந்தேக நபராக இருக்கும்- தலைமறைவாகியிருக்கும்- குமாரசிங்கம் கேசவனின் (ஜீவன்) தாயாரான குமாரசிங்கம் திருப்பதி அம்மா, சகோதரியான குமாரசிங்கம் குகன்ஜா ஆகியோரே வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய சந்தேக நபர்களான சூசைமுத்து அலெக்ஸாண்டர், சாந்தீபன், திருச்செல்வம் ஆகிய மூவரையும் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார். (ஒ- 207)

# புதல்வியுடன் தொலைபேசியில் பேச பொன்சேகாவுக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, ஜூலை 13

அமெரிக்காவிலுள்ள தனது புதல்வியுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசுவதற்கு அனுமதிக்கவேண்டும் என ஜெனரல் சரத் பொன்சேகா விடுத்த வேண்டுகோளை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

ஜெனரல் பொன்சேகா தனது சட்டத்தரணி மூலம் மனிதாபிமான அடிப்படையில் இதற்கு அனுமதி கோரியிருந்தார்.

சிறைச்சாலை விதிகளுக்கு அமைய ஜெனரல் பொன்சேகா தடுத்து வைக்கப்பட்டுள்ள அறை யிலிருந்து உடற்பயிற்சிக்கென வெளியே செல்ல அனுமதிப்பது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்படி சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

ஹைகோப் ஆயுதக் கொள்வனவு குற்றச்சாட்டு குறித்து ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது எனவும் அரச சட்டத்தரணி நீதி மன்றத்தில் தெரிவித்தார். இதனையடுத்து வழக்கு ஜூலை 26ஆம் திகதிவரை பிற்போடப்பட்டது. (ஒ-சி)


## காணி விற்பனை

துன்னாலை வடக்கு, கரவெட்டியில் வீதி ஓரமாகப் 10½ பரப்புக்காணி பயன்தரு மரங்களுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : T.P.:0774939793



## 2ஆவது பிறந்தநாள் அழைப்பு



அன்புடையீர்,
இன்று (13.07.2010)
செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 3 மணியளவில்
எமது புத்திரன்

**துஸ்யந்த சர்மா**

அவர்கள் தனது இரண்டாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வனை வாழ்த்தி விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
சீரணி நாகம்மாள் கோயில் பிரதமகுரு
சோமாஸ்கந்த குருக்கள்,
விஜயலஷ்மி தம்பதியினர்.

சீரணி நாகபூசணி
அம்பாள் கோயில் வீதி,
சண்டிலிப்பாய்.


# அரசமைப்புத் திருத்தம் பற்றிப் பேச ஜே.வி.பிக்கு அழைப்பு இல்லை

கொழும்பு, ஜூலை 13

உத்தேச அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பாகப் பேச்சு நடத்த இதுவரை ஜே.வி.பிக்கு அழைப்புக் கிடைக்கவில்லை என ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

அப்படி அழைப்புக் கிடைத்தாலும் அரசமைப்புத் திருத்தங்களில் அடங்கியிருப்பவை குறித்து தெளிவாகத் தெரிந்து கொண்ட பின்னரே அழைப்பை ஏற்பது குறித்து முடிவு செய்வோம் என்று அவர் கூறினார்.

அரசமைப்பு என்பது கட்சிகளுக்கு இடையிலான பிரச்சினை அல்ல. அது பொதுமக்கள் சம்பந்தப்பட்ட விடயம். அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பாகப் பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டும். அரசமைப்புத்திருத்தங்கள் தொடர்பாக ஆராய ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவருக்கு மாத்திரமே அழைப்பு விடுத்துள்ளார். நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்குக் கூட அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் ரில்வின் சில்வா குற்றம் சாட்டினார்.

# தமிழ்க் கட்சிகள் மீண்டும்29 இல் கூடுகின்றன டக்ளஸ் தலைமையில்!

கொழும்பு, ஜூலை 13

தமிழ்க் கட்சிகள் ஒன்றியத்தின் கூட்டம் எதிர் வரும் 29 ஆம் திகதி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தின்போது டக்ளஸ் தலைமையிலான தமிழ்க் கட்சிகள் ஒன்றியத்தின் பெயர் 'தமிழ்க் கட்சிகள் அரங்கம்' எனப் பெயர் மாற்றப்படவுள்ளது.

இந்தத் தகவலை தமிழ்த் தேசிய விடுதலை கூட்டமைப்பின் செயலாளர் எம்.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ்க் கட்சிகளை மட்டுமல்லாது, மலையகக் கட்சிகளையும், முஸ்லிம் கட்சிகளையும் இந்த அரங்கினுள் ஒன்றிணைப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது - என்றார்.

அண்மையில் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## பொன்சேகாவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு, ஜூலை, 13

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, அவரது மருமகன் தனுன திலகரத்ன உட்பட மூவருக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்துள்ளார்.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த தருணத்தில் அவரின் ஆலோசனைக்கு ஏற்ப வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்த ஆயுத தளவாடங்கள் ஊடாக பல கோடி ரூபா மோசடி செய்தனர் என இவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சுமார் 21 குற்றச்சாட்டுக்களைக் கொண்ட மேற்படி குற்றப்பத்திரிக்கை சட்டமா அதிபர் மொகான் பீரிஸ் அவசர வழக்கு ஒன்றை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று மாலை சமர்ப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## நிறைவேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு நட்புறவான அரசமைப்பை அறிமுகப்படுத்த நாம் முயற்சிக்கிறோம்.

இத்தகைய அரசமைப்பு திருத்த யோசனைகள் தொடர்பாக பகிரங்க விவாதங்களை ஆரம்பிப்பதில் ஊடகங்கள் பங்காற்ற வேண்டும்.

அரசுடன் பேச்சு நடத்தும் அதேவேளை, அத்தகைய அரசமைப்பை நடைமுறைப் படுத்தவும் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் வலியுறுத்தி ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம் - என்று அவர் சொன்னார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

'தனிப்பட்ட நலன்களை விடுத்து நாட்டின் நலனைக் கருத்தில் கொண்ட அரசமைப்பை அறிமுகப்படுத்த வேண்டும்.

நாட்டின் தலைமை எப்போதும் நாடாளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறும் வகையிலானதாக இருக்க வேண்டும் - என்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் அரசதரப்பில் ஜனாதிபதியுடன் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த, தினேஷ் குணவர்தன, டலஸ் அழகப்பெரும, பஸில் ராஜபக்ஷ, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோரும் -

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ரணில் விக்கிரமசிங்கவுடன் கரு ஜயசூரிய, திஸ்ஸ அத்தநாயக்க, காமினி ஜயவிக்கிரம பெரேரா, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ-சி)


## மரண அறிவித்தல்



*சின்னத்துரை லெட்சுமணராஜா*
(நாச்சிமார் கோயிலடி)

64,1/1, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை லெட்சுமணராஜா நேற்று (12.07.2010) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐசே. சின்னத்துரை-இராசம்மா தம்பதியரின் புத்திரனும், மனோன்மணிதேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் சின்னத்தங்கம், மகேஸ்ரி, ராஜகோபால், மகேஸ்வரி (கனகம்மா), பாலச்சந்திரன், புலேந்திரன், தவமணிதேவி, வரதராஜா ஆகி யோரின் சகோதரனும் சசிகலாதேவி (லண்டன்), சந்திரகுமார் (அமெரிக்கா), சற்குணராஜன் (பௌதிகவியல் ஆசிரியர், யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி), சந்திரசேகரன், சசிகரன் (கனடா), சசிரேகா (அபிவிருத்தி உதவியாளர், யா/தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நவநீதராஜா (லண்டன்), அகிலா (அமெரிக்கா), ரஜனி, லதா (கனடா), வாசவன் (ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், நளாஜினி, தாட்சாயினி (லண்டன்), பிரணவன், குமரன் (அமெரிக்கா), வினோஜ், வசீகரன், விதுசன் (கனடா), மிஜங்கன், விணுக்ஷன், சஞ்ஜீவினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2010) புதன்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.1014, பெரியகுளம் ம.வி. முன்,
K.K.S. வீதி, நாச்சிமார் கோயிலடி.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை மட்டும் பதிவு செய்வது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதல்ல!

## தலையிடக் கோரி ஜனாதிபதிக்கு மனோ கணேசன் கடிதம்

வெள்ளவத்தை மற்றும் கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் தங்களது தனிப்பட்ட தகவல்களை சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கி தம்மை பதிவு செய்துக்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவ்விதம் தமிழர்களை மாத்திரம் வேறுபடுத்தி பதிவு செய்யும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இது தேசிய நல்லிணக்கத்திற்கு முரணானதாகும். எனவே இவ்விவகாரத்தில் உடன் தலையிடுங்கள் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்தவாரம் வெள்ளவத்தை பொலிஸ் பிரிவில் ஒலிபெருக்கிகள் மூலம் காவல் துறையினர் மேற்கண்ட அறிவிப்புகளை வெளியிட்டுள்ளனர். மீண்டும் ஆரம்பமாகியுள்ள இந்தப் பொலிஸ் பதிவு நடைமுறை தமிழர்களை மாத்திரம் குறிவைத்துள்ளது. இது நாடு முழுவதும் நடைபெறும் எல்லா இனத்தவர்களுக்குமான பொதுவான நடைமுறை என கொழும்பு வலயப் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் கூறுவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. கொழும்பு மாநகரத்திலே தமிழ் மக்கள் கணிசமாக வாழும் பொலிஸ் பிரிவுகளில் தமிழர்களை மாத்திரம் குறிவைத்து இந்த பதிவு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவது கண்கூடாகும்.

யுத்தம் நடைபெற்ற போது இத்தகைய பதிவுத் துன்பங்களை தமிழர்கள் எதிர்நோக்கினார்கள். ஆனால் இன்று யுத்தம் முடிவடைந்த பின்னரும் கூட, தமிழர்களின் துன்பங்களுக்கு முடிவு கிடைக்கப்பெறவில்லை.

சட்டத்தை மீறுபவர்கள் தொடர்பிலே பொலிஸாரின் விசாரணை மற்றும் கைது நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க நாம் தயாராக உள்ளோம். ஆனால், தமிழர்கள் என்ற ஒரே காரணத்தினாலேயே எல்லாத் தமிழர்களையும் பதிவு செய்யக்கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. பொலிஸார் கோரும் இத்தகைய தகவல்கள் தனி மனிதர்களின் பிரத்தியேக தகவல்களாகும். யுத்தம் முடிந்துவிட்ட இன்றைய கால கட்டத்தில் சுயமரியாதையுள்ள எந்தவொரு பிரஜையும் பிரத்தியேக தகவல்களை அதிகாரிகளுடன் பகிர்ந்துகொள்வதற்கு விரும்ப முடியாது. இத்தகைய தகவல்களை சேகரிப்பதை அரசின் பொதுவான ஒரு நடவடிக்கை என என்னிடம் கூறுவதற்கு பொலிஸ் அதிகாரிகள் முயற்சி செய்தார்கள். ஆனால் இத்தகைய தகவல்கள் திரட்டும் வேலைகளை பொலிஸ் திணைக்களம் மேற்கொள்ள முடியாது. புள்ளிவிவர மற்றும் தகவல் திணைக்களம், அவசியம் ஏற்படும் பட்சத்தில் தொழில்சார் ரீதியாக நாகரீகமாக இந்நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். எனவே பொலிஸ் பதிவு என்ற விவகாரத்தில் உடனே தலையிட்டு அதை நிறுத்துங்கள். ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் என்ற முறையிலே உங்களது பதிலையும், உடன் நடவடிக்கையையும் எதிர்பார்க்கின்றேன். -என்றுள்ளது.



அமைச்சர் விமல் வீரவன்ஸவின் தாயாரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ வருகை தந்தபோது எடுக்கப்பட்ட படம். படத்தில் ஐ.தே.க. எம்.பி. கபீர் ஹாசிம் மற்றும் முஸம்பில் ஆகியோரையும் காணலாம்.

## சீமான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வினைவாதத்தைத் தூண்டும் வகையில் பேசியது, வன்முறையைத் தூண்டும் வகையில் பேசியது உட்பட 3 பிரிவுகளின் கீழ் வடக்குக் கடற்கரைப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதையடுத்து விருகம்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டுக்கு கடந்த சனிக்கிழமை பொலிஸார் சென்றனர். ஆனால் சீமான் அங்கு இல்லை. இதையடுத்து நான்கு தனிப்படைகளை அமைத்து அவரைத் தேடி வந்தனர்.

இந்த நிலையில், நேற்று சென்னை பிரஸ் கிளப்பில் பத்திரிகையாளர்களைச் சந்திக்கப் போகிறார் என சீமான் அறிவித்திருந்தார். ஆனால் அவர் பத்திரிகையாளர்களைச் சந்திப்பதற்கு முன்பாகவே அவரைக் கைது செய்வதற்காக பொலிஸார் அப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

இருப்பினும் சீமான் வரவில்லை. அவருக்குப் பதிலாக 'நாம் தமிழர்' இயக்கத்தைச் சேர்ந்த பேராசிரியர் தீரன், திருச்சி வேலுச்சாமி, சாகுல் ஹமீத் ஆகியோர் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அவர்களிடம் சீமான் குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது, சீமான் எங்கும் ஓடி ஒளியவில்லை. பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசிய பின், சட்டப்படி கைதாவார். இப்போது அவர் வெளியில் வரமுடியாத சூழ்நிலையில் உள்ளார். கண்டிப்பாக உங்கள்முன் அவர் நிற்பார் என்று தெரிவித்தனர்.

அவர்கள் பேசி முடித்த சில நிமிடங்களில் சீமான் அங்கு வந்தார். இதையடுத்து தயாராகக் குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் சீமானைக் கைது செய்தனர்.

## குடும்பநல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகளில் 'கைது செய்! கைது செய்! கொலையாளியைக் கைது செய்!', 'இன்று உனக்கு! நாளை எமக்கா?', 'எமக்கு நீதி கேட்பார் யாரும் இல்லையா?', 'இந்த மண்ணில் எமக்கு நியாயம் இல்லையா?', 'கொலைகாரனுக்கு அரசே உடந்தையா? என்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பரித்தனர்.

வீதிமறியல் குறித்து தகவல் கிடைத்து அவ்விடத்துக்கு விரைந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் திரண்டிருந்தவர்களைக்கலைந்து செல்லுமாறு கூறினர். எனினும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மறுத்துவிட்டனர். இதனால் அங்கு தீவிர முறுகல் நிலைமை ஏற்பட்டது. எனினும் மறியல் தொடர்ந்தது.

இந்த வேளையில் சம்பவ இடத்துக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) மற்றும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன், வேலணைப் பிரசே அமைப்பாளர் போல் ஆகியோர் வந்து சேர்ந்தனர். அவர்களிடம் மக்கள் இந்த மரணம் தொடர்பில் நீதியான விசாரணைகளை நடத்த உதவுமாறு கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பில் தாம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக அவர்கள் உறுதி அளித்தனர்.

தொடர்ந்து தர்சிகாவின் இறுதி ஊர்வலம் நடந்தது. அவரின் பூதவுடல் கைதடி ஊற்றல் மயானத்தில் உறவினர்கள் சுகாதாரத்துறை ஊழியர்கள் பொது மக்களின் கண்ணீருக்கு மத்தியில் அடக்கம் செய்யப்பட்டது. (ஒ-ப-6 - 288- 207-224)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சிக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதையும் பார்வையிடுவார். அத்துடன் புதிய நிகழ்ச்சித் திட்டங்களையும் அங்குரார்ப்பணம் செய்துவைப்பார்.

## ஹரீஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் இந்த வைபவங்களைப் பகிஷ்கரித்தனர் என கல்முனை மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவர் ஹென்றி மகேந்திரன் தெரிவித்தார்.

''வடக்கு, கிழக்கு இணைப்பை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கும் என்பதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். அவரின் கட்சிக் கொள்கையை அவர் தெரிவிக்கலாம். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கையைத் தெரிவிப்பதற்கு அதற்கு உரிமை இல்லை எனக் கூறியதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இப்படிக் கூற அவருக்கு அருகதை இல்லை. அவரின் இந்தக் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே நேற்று நடைபெற்ற கல்முனை மேயருக்கு கௌரவம் வழங்கும நிகழ்வையும் கல்முனைக்குடியில் சந்தைக் கட்டடம் திறக்கும் நிகழ்வையும் நாம் பகிஷ்கரித்தோம்'' என்று ஹென்றி மகேந்திரன் தெரிவித்தார்.

இந்த இரண்டு நிகழ்வுகளிலும் முன்னாள் மேயரும் எம்.பியுமான ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரு கையில் ஆயுதமும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமான படையினரிடம் ஆயுதங்கள், துப்பாக்கி ரவைகள் மற்றும் காலணிகள் போன்றவை இல்லாமல் இருந்தன.

நாம் அந்தப் படையினருக்குப் பொருத்தமான வகையில் ஆயுதங்களை வழங்கி அவர்களின் அனைத்து நலன்களிலும் அக்கறை செலுத்தினோம். கொல்லப்பட்ட படையினரின் சம்பளங்களை அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கி அந்தக் குடும்பங்களையும் நாம் கவனித்தோம்.

கடற்படையைப் பலமானதாகக் கட்டியெழுப்பினோம். 'சிறிய படகுகள்' கருத்திட்டத்தைப் பயன்படுத்தினோம். பயங்கரவாதிகளுக்கு எதிராகச் சண்டையிட நாம் வெளிநாட்டுப் படையினருக்கு அனுமதி வழங்கியிருந்தால், அவர்கள் நாட்டை ஆக்கிரமிப்பர் என்று மக்கள் நினைத்திருப்பர்.

வடக்கு - கிழக்கு மக்களும் எமது மக்களே. அவர்கள் வெளிநாட்டவர்கள் அல்லர். இந்த மக்களைக் கொல்லவேண்டிய தேவை எமக்கு இருக்கவில்லை.

யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு கோரி நாம் புலிகளுக்கு விமானங்களில் இருந்து துண்டுப்பிரசுரங்களைப் போட்டோம். எமது செய்தியைப் புலிகளும், மக்களும் அறியக்கூடியவாறு நாம் சிறிய வானொலிகளையும் அவர்களுக்கு வழங்கினோம்.

அரச படையினர் யுத்த காலத்தில் ஒரு கையில் ஆயுதத்தையும், மறுகையில் மனித உரிமை சாசனத்தையும் ஏந்தியவாறே புலிகளுடன் யுத்தம் செய்தனர். அவர்கள் அப்பாவி மக்களுக்கு எதுவித சேதங்களையும் விளைவிக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தை நாம் கைப்பற்றியவுடன் அங்கு தேர்தலை நடத்தினோம். அவ்வாறு நடத்த வேண்டாம் என்று சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் இருந்தபோதிலும் நாம் தேர்தலை நடத்தினோம்.

நாம் கிழக்கில் பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டோம். கிழக்கில் இருந்து வடக்குக்குப் படையினர் நகர்ந்தபோது வடக்கு மக்களின் மனங்களைப் படையினரால் இலகுவாக வெல்ல முடிந்தது. அரசு கிழக்கில் மேற்கொண்டிருந்த பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளே இதற்குக் காரணம்.

எமது படையினர் ஒரு கையில் ஆயுதங்களையும் மறுகையில் மனித உரிமை சாசனத்தையும் ஏந்திக்கொண்டே யுத்தம் செய்தனர். மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் எம்மிடம் மறைப்பதற்கு எதுவும் இல்லை. எமது படையினர் அவ்வாறான குற்றங்களில் ஈடுபடவில்லை.

பொதுமக்களுக்கு எதுவித சேதங்களையும் ஏற்படுத்தக்கூடாது என்று நாம் எமது படையினருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தோம். ஆனால், அந்த நிலையில் மக்களுடன் மக்களாக மறைந்திருந்த பயங்கரவாதிகளை அடையாளம் காண்பது கஷ்டமாக இருந்தது.

30 வருட யுத்தம் இப்போது முடிந்துவிட்டது. அந்த 30 வருட பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து அதைத் தீர்க்கும் வேலைத்திட்டம் தொடர்கிறது. அபிவிருத்தி இல்லாமல் சமாதானம் இல்லை. சமாதானம் இல்லாமல் அபிவிருத்தி இல்லை.

யுத்தத்தின் காயங்களை ஆற்றுவதற்காக நாம் இப்போது தேசிய நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றையும் அமைத்துள்ளோம். இரண்டு தமிழர்கள் உட்பட எட்டுப்பேர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். - என்றார்.


**வேலை வாய்ப்பு**

புலோலியில் புதிதாக ஆரம்பித்துள்ள கொங்கிறீற் தொழிற்சாலைக்கு கணனி அறிவுள்ள பெண் ஊழியர்கள் தேவை. வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொ.பே.: 0217222333

**போட்டிப்பரீட்சை வகுப்புகளும் வழிகாட்டி நூல்களும்**

* வெளிக்களப் போதனாசிரியர் பரீட்சை வகுப்பு [3-5] ஆங்கில மொழி மூல ஆசிரியர் தெரிவுப் பரீட்சை வகுப்பு [5-6.30] யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் நடைபெறுகின்றன.
* இப்பரீட்சைகளுக்கான த.தவசேகர் வழிகாட்டி நூல்களை பிரபல புத்தக நிலையங்களிலும் வகுப்பிலும் பெற்றுக்கொள்ளலாம்.
* A/L-2010 பொதுச் சாதாரணதரப் பரீட்சைக்கான (C.G.T) வழிகாட்டி நூல் [200/-] வெள்ளிக்கிழமை முதல் கிடைக்கும்.


காணி அபிவிருத்தி திணைக்களத்தின் வெளிக்கள போதனாசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்
செவ்வாய் - பிற்பகல் 2 மணி
புதன், வியாழன், வெள்ளி.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

காணி அபிவிருத்தித் திணைக்களத்தின் வெளிக்கள போதனாசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப்பரீட்சை வழிகாட்டி-2010
விசேட கையேடு - விலை 170 ரூபா
"முற்றிலும் எதிர்பார்ப்பு விடயங்கள்"
P. காமல்தாசன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

**Mr. Concrete**
For all your concrete needs!
SLSI - தரத்திற்கு அமைய நவீன இயந்திரங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டவை.
Sales Office: 124, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் www.MrConcrete.lk
Factory: கொடிகாமம் வீதி, புலோலி. Tel: 0217 222 333

உங்கள் சகல கொங்கிறீட் தேவைகளுக்கும்
- Concrete Blocks
- Concrete Hollow Blocks
- Columns
- Lintels
- Paving Stones

இலவச விநியோகம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org